தமிழகம்: கூட்டணிக் குழப்பங்களின் சூட்சமம் பிழைப்புவாதமே

16 மார்ச் 96 □ ரூ. 3.50

# புதிய ஜனநாயகம்

## ஓட்டுக்காக நிழலோடு போர்




படிப்பகம்

www.padippakam.com

## உதிரி தொழிலாளர்களுக்கு நேர்ந்த கொடுமை

தமிழ் நாட்டைக் காட்டிலும் கேரளாவில் கூலி கூடுதலாக கிடைக்கும் என்ற காரணத்தினால் கம்பம், உத்தம பாளையம், கூடலூர் பகுதி விவசாயிகள், தொழிலாளர்கள் கூலி வேலைக்குச் செல்வது வழக்கம். தமது குடும்பத்தை விட்டுப் பிரிந்து பலநாள் தங்கி வேலை செய்து சம்பாதித்துக் கொண்டு திரும்புவர். இவர்களுக்கு முன்பணம் கொடுத்து கூட்டிச் சென்று கொத்தடிமை போல் வைத்து அடக்கி, ஒடுக்கி சுரண்டி வருகிற தரகர்கள், முதலாளிகள் பலர் உள்ளனர். இக்கயவர்களின் கொடுமை தாங்காமல் தப்பித்து ஊர் திரும்புபவர்கள் மீது திருட்டுக் குற்றம் சாட்டுவதும், அடிப்பதும் உதைப்பதும் வாடிக்கை. அண்மையில் கூடலூரிலிருந்து 23 பேர் கேரளா இடுக்கி மாவட்டத்திலுள்ள போக்ஸ் என்கிற நிறுவனத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டு கொடுமைப்படுத்தப்பட்ட சம்பவம் இது.

தமிழ்நாடு வனத்துறைக்குச் சொந்தமான பகுதியில் யூகலிப்டஸ் மர வேலைக்கு என்றுச் சொல்லி அழைத்துச் சென்று ஏமாற்றியுள்ளனர். வெறும் 100 ரூபாயை முன்பணமாகக் கொடுத்துக் கூட்டி வந்து தங்குவதற்கு வசதி செய்து தராமல் கடுமையான வேலை வாங்கினர். இரவில் கடுங்குளிரில் உறங்கி அவதிப்பட்ட கூலி வேலையாட்கள் பகலில் கடுமையாகவும் உழைத்து சோர்ந்து போனதால் எதிர்ப்பு தெரிவித்து ஊர் திரும்ப முயற்சித்துள்ளனர். ஊருக்குச் செல்ல பேருந்து நிலையத்தில் காத்திருந்தவர்களை மிரட்டி வண்டியில் ஏற்றிக் கொண்டு வந்து வைத்து மோசமாகத் தாக்கினர். புஷ்பராஜ் என்பவரை 15 பேருக்கு மேல் சேர்ந்து கொண்டு தாக்கி நடக்க முடியாத நிலையிலிருந்ததால் தூக்கி கொண்டு வந்து போட்டு விட்டனர். இதனையறிந்த பிற தொழிலாளர்கள் வேலை செய்ய மறுத்து எதிர்ப்பு தெரிவித்து நிர்வாக மேலாளரிடம் பேசிக் கொண்டிருக்கும்போதே திடீரென கோடாரி, கத்தி, கம்புகளுடன் ஆட்களைக் கொண்டு வெறித்தாக்குதல் நடத்தியது அக்கும்பல். பலருக்கும் அரிவாள் வெட்டு விழுந்தது. இருவர் மயக்கமுற்று விழுந்தனர். தொழிலாளர்கள் நாலாபக்கமும் சிதறி ஓடி தப்பித்தனர். ஞானம் என்ற சிறு வயது இளைஞனை 6 பேர் சேர்ந்து கட்டையால் தாக்கி கொல்லும் நிலையில் ஒரு தமிழ்நாடு வனத்துறை ஊழியரால் தடுத்து பாதுகாக்கப்பட்டார். கேரளாவில் மூணாறு பகுதி மருத்துமனையில் சேர்க்கப்பட்டார். இக்கொலை வெறித் தாக்குதலுக்குப் பின்னும் வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். ஆனால் ஒவ்வொருவராக தப்பித்து நடந்தும், லாரி மூலமும் வீடு வந்து சேர்ந்தனர்.

இதுபோன்ற ஒப்பந்த, உதிரி தொழிலாளர்களுக்கு என்று சங்கம் ஒன்று இல்லாத நிலைமையையும் போலி கம்யூனிஸ்டுகளின் தொழிற்சங்கங்கள் வரை யாரும் இந்த உதிரி தொழிலாளர்கள் பிரச்சினையில் அக்கறை செலுத்தாத சூழ்நிலையையும் ஒப்பந்த தரகர்களும், முதலாளிகளும் சாதகமாக்கிக் கொண்டு அட்டூழியம் செய்கின்றனர். அரசும் போலீசும் பாதுகாப்பாக நின்று வேடிக்கையே பார்க்கின்றன.

தகவல்: வி.வி.மு., கம்பம்.

## சங்கராச்சாரிக்கு கறுப்புக் கொடி

நெய்வேலி - என்.எல்.சி. (NLC) நிறுவனத்தில் கடந்த 21 மற்றும் 22.1.96 அன்று நடந்த நிகழ்ச்சியில் காஞ்சி சங்கராச்சாரி கலந்து கொண்டார். நிறுவனத்தில் அடிக்கடி நடக்கும் விபத்துக்களைத் தடுப்பதற்காக சங்கராச்சாரியிடம் அருள் வாங்குகிறோம் என்று கூறி இந்நிகழ்ச்சிக்காக பல லட்சம் ரூபாயைக் கொட்டி விரயக்கினர்கள், நிர்வாகத்திலுள்ள பார்ப்பன அதிகாரிகள். என்.எல்.சி. நிறுவனத்திலுள்ள தொழிலாளர் பிரச்சாரக் குழுவினர் இந்நிகழ்ச்சியை எதிர்த்து சங்கராச்சாரிக்குக் கறுப்புக் கொடி காட்டி ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக அறிவித்தனர். இதனால் சங்கராச்சாரியைத் திட்டமிட்டபடியல்லாமல் முன் கூட்டியே பாதுகாப்பாக அனுப்பி வைக்கவும் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் செய்ய விடாமல் தடுக்கவும் போலீசு மற்றும் ஆர்.எஸ்.எஸ். பட்டாளங்கள் தயார் செய்து கொண்டிருந்ததால் அறிவித்த நேரத்திற்கு முன்பே திடீரென கோரிக்கைகள் போன்ற முழக்கமிட்டு சென்று கறுப்புக் கொடி காட்டப்பட்டதும் அரண்டு போனார்கள். தோழர்கள் பகத்சிங், சங்கர் தலைமையில் இரு குழுவாக சென்று கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் செய்ததும் அந்தப் பகுதியே பரபரப்புக்குள்ளானது. ஆத்திரமாகிப் போன போலீசும், ஆர்.எஸ்.எஸ். குண்டர்களும் சேர்ந்து கொண்டு தோழர்களைத் தாக்கியபோதும் நிலை குலையாமல் ஆர்ப்பாட்டம் தொடர்ந்தது. பின்னர் தோழர்கள் கைது செய்யப்பட்டு போலீசு நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டதோடு அங்கும் போலீசு ஒருவனால் தாக்கப்பட்டனர். ஒரு தோழருக்கு காயம் ஏற்பட்டது. தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து தோழர்கள் போராடியதும் போலீசு பணிந்தது. தாக்கியவன் மன்னிப்பும் கேட்டான். இந்தப் போராட்டத்தில் பா.ம.க.வைச் சேர்ந்த பிரமுகர் முத்து அசோகன் என்பவரும் கலந்து கொண்டார். பிற பார்ப்பன எதிர்ப்பு இயக்கத்தினர் சலனமின்றி இருந்தனர். இப்போராட்டம் தொழிலாளர்கள் மத்தியில் தொ.பி.கு.விற்கு நன்மதிப்பை பெற்றுக் கொடுத்துள்ளது.

## எழுச்சிகரமான நிகழ்ச்சி

திருச்சி ஆனந்த் ஹோட்டல் அரங்கத்தில் 23.1.96 அன்று மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் ''அண்ணன் வர்றாரு'' என்கிற புரட்சிகர கலைநிகழ்ச்சி நடந்தது. தோழர் கபிலன் தலைமையில் தோழர் காளியப்பன், திடீர் பணக்கார அரசியல் ரவுடிகளுக்கு எதிரான இயக்கத்தின் அரசியல் நோக்கங்களை, ஹவாலா, மோசடி செய்திகளோடு எளிமையாக விளக்கிப் பேசினார். சுமார் $1^{1}/_{2}$ மணி நேரம் நடந்த கலை நிகழ்ச்சியில் புதிய பாடல்கள், பி.ஜே.பி. மற்றும் சி.பி.எம்.-ஐ அம்பலப்படுத்தும் தெருக் கூத்து, திருச்சி விஷச் சாராய சாவு குறித்த சிறு நாடகம் போன்றவை மக்களின் கர ஒலிக்கு நடுவே நடைபெற்றன. சுமார் 1000 பேர் கலந்து கொண்டதும் பல புதியவர்கள் ஆர்வமுடன் அமைப்பில் இணையப் பெயர் கொடுத்ததும் இந் நிகழ்ச்சியின் சிறப்பான அம்சம்.






படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 11

இதழ்: 7-8

16 பிப்.'96 - 15 மார்ச் '96

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 3.50
ஆண்டு சந்தா: ரூ. 84.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம்: சுரோ

படைப்புகள் அனுப்பவும் மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
இரா. சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
25, அருணாசலம் தெரு,
ஜோதிராமலிங்க நகர்,
ஜாபர்கான் பேட்டை,
சென்னை - 600 083.


## ஹவாலா கட்சிகளின் கிரிமினல் தொடர்புகள்

ஹவாலா-லஞ்ச ஊழல் குற்றச்சாட்டின் கீழ் ஏழு மத்திய மந்திரிகள், எதிர்க்கட்சித் தலைவர் அத்வானி உட்பட பல கட்சித் தலைவர்கள் பிரமுகர்கள் மீது நடவடிக்கை எடுத்திருப்பதைப் போல பிரதமரின் ஏவல் நாயாக உள்ள மத்தியப் புலனாய்வுக் கழகம் (சி.பி.ஐ.) மேலும் ஒரு அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளது. சமீப காலம் வரை காங்கிரசின் மத்திய மந்திரியாக இருந்த கல்பனாத் ராய் மற்றும் பாரதீய ஜனதா கட்சியின் உத்திரப் பிரதேசம் கோண்டா தொகுதி எம்.பி. பிரிஜ் பூஷன் சரண் சிங்கையும் ''தடா'' சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்துள்ளது. பம்பாயை ஆளும் இரகசிய உலக கிரிமினல் மஃபிய கும்பல்களில் முதன்மையானது தாவூத் இப்ராகீமினுடையது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தேடப்பட்டு வந்த அந்தக் கும்பலின் கொலைகாரர்களுக்கு அவர்கள் இருவரும், தெரிந்தே புகலிடம் அளித்தனர் என்பது குற்றச்சாட்டு. பல கிரிமினல் குற்றங்களுக்காகத் தேடப்பட்டு வந்த தாக்குதல் படைத் தளபதி சுபாஷ் தாகூருக்கு - அவன் துபாயிலுள்ள மஃபியா தலைவன் தாவூத் இப்ராகீமைச் சந்தித்து விட்டு திரும்பிய போது - 1991 நவம்பரில், தேசிய அனல் சக்திக் கழகத்தின் விருந்தினர் மாளிகையில், அதன் செலவிலேயே தங்கியருக்க ஏற்பாடு செய்து கொடுத்தார், அப்போதைய எரிசக்தி மந்திரியாக இருந்த கல்பனாத் ராய். அவரது மருமகனும், உதவியாளரும் கூடவே தங்கி, பம்பாயில் பல தாக்குதல் நடவடிக்கைகளைத் திட்டமிட்டுச் செய்து வந்தனர். தாவூத் இப்ராகீம் கும்பலுக்கும் அமர் நாயக், அருண் கௌலி, சோட்டா ராஜன் தலைமையிலான பிற கிரிமினல் மஃபியா கும்பலுக்கும் இடையே ஆதிக்கத்துக்காக மயிர்கூச்செரியும் சண்டைகள் பம்பாய்த் தெருக்களில் தொடர்ந்து வருகின்றன. அவற்றில் ஒன்றாக பம்பாயின் இதயமாகிய நாரிமான் முனையில் உள்ள ஜே.ஜே. மருத்துவமனையில் பட்டப்பகலில் தாவூத் இப்ராகீமின் தாக்குதல் படை அதே சுபாஷ் தாகூரின் தலைமையில் புகுந்து போட்டிக் கும்பலைச் சேர்ந்த மூவரைச் சுட்டுக் கொன்றது. இந்தத் தாக்குதலுக்கு முன்பாக, மூன்று நாட்கள் பம்பாய் புறநகர் மின் விநியோகக் கழகத்தின் விருந்தினர் மாளிகையில் மந்திரியின் உறவினர் - உதவியாளருடன் அவர்களது செல்வாக்குடன் தங்கித் திட்டமிட்டுக் காரியத்தை முடித்து விட்டுத் தப்பினர். அவர்கள் பம்பாயில் இருந்து வெளியேறி நைனிடாலுக்கு வந்து தன்னுடன் தங்கவும், பின்னர் புதுடில்லி மீனாபாக்கிலுள்ள தனது அதிகாரபூர்வ வீட்டில் புகலிடம் பெறவும், அங்கிருந்து தனது ஜீப்பைக் கொடுத்து நேபாளத்திற்குத் தப்பி ஓடவும் ஏற்பாடுகள் செய்தார் பாரதீய ஜனதா எம்.பி. பிரிஜ்பூஷன் சரண் சிங். தாவூத் இப்ராகீமின் பினாமி நிறுவனமாகக் கருதப்படும் ''ஈஸ்ட்-வெஸ்ட் ஏர்லைன்ஸ்" என்ற விமானக் கம்பெனி அந்தக் கொலைகாரன்களை ஐந்து நட்சத்திர ஓட்டலில் தங்க வைத்து அரச விருந்தளித்து வந்தது. இரண்டாண்டுகளுக்கு முன்னர் வேறொரு தாக்குதல் நடவடிக்கைக்குப் போய்க் கொண்டிருந்த சமயம் அக்கும்பலும் பிடிபட்டது. ஆனால் இப்போதுதான் அக்கும்பலின் அரசியல் புரவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

நாடாளுமன்றத்தில் இந்திரா-சஞ்சய் கும்பலினால் ரௌடித்தனம் செய்வதற்குப் பொறுக்கி எடுத்து வளர்க்கப்பட்ட உள்ளூர் கிரிமினல் தான் கல்பனாத்ராய். அவரது ரௌடித்தனங்களுக்கான வெகுமதியாகத்தான் ராஜீவ், நரசிம்ம ராவினால் மந்திரி பதவியளிக்கப்பட்டது. 1994-இல் வெளிநாட்டில் இருந்து சர்க்கரை இறக்குமதி செய்ததில் ஊழல் செய்து அம்பலப்பட்டும், ராவ் அரசு இவரைப் பாதுகாத்து வந்தது. எதிர்க்கட்சிகளின் நிர்பந்தம் (விசாரணைக் குழுவின் பாதகமான முடிவு) காரணமாக பதவி விலக்கப்பட்டார். அதன் பின்னர் பிரபல லஞ்ச ஊழல் ஹவாலா மோசடியிலும் சிக்கினார். கிரிமினல் மஃபியா கும்பலுடன் உள்ள தொடர்பு அம்பலப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்குப் பின் கைதாகியுள்ளனார். ஒரு கிரிமினல் இப்படிச் சிக்கியது வியப்பில்லை தான். ஆனால் லஞ்ச ஊழலுக்கு அப்பாற்பட்ட உத்தம ஒழுக்க சீலர்களின் கட்சியென்று நாடகமாடும் பாரதீய ஜனதாவின் தலைவர்கள் ஹவாலா லஞ்ச ஊழலில் மட்டுமல்ல, இரகசிய உலக கிரிமினல் மஃபியா கும்பலின் கூட்டாளிகள் என்பதும் அம்பலமாகியுள்ளது. அதுவும் இந்து மதக் காப்பாளர்களாக நாடகமாடி பம்பாய் தொடர் குண்டு வெடிப்புக்குக் காரணம் தேச விரோத பாகிஸ்தான் கைக்கூலிகளான கிரிமினல் மஃபியா தான் என்று குறி வைத்துத் தாக்கி வந்தனர், சிவசேனா - பாரதீய ஜனதா இந்துமத வெறி பாசிஸ்டுகள். 1992 பம்பாய் மதவெறிப் படுகொலைகளை நடத்துவதற்கு சிவசேனைக்குள் ஆயுதங்களோடும் தாவூத் இப்ராகீம் கும்பலும் கூட்டாகத் திரிந்த போதே பிடிபட்டுத் தப்பி விட்டனர். பாரதீய ஜனதா கட்சிப் பிரமுகர்களும் இப்படிப் பட்டவர்கள்தான் என்பதை அக்கட்சி எம்.பி. பற்றிய உண்மைகள் காட்டுகின்றன. அவர்தான் தாவூத் ஆட்களை கல்பனாத் ராயின் அதிகாரப்பூர்வ வீட்டிற்கே கூட்டிப்போய் அறிமுகம் செய்துள்ளார். அவரைக் கட்சியில் இருந்துநீக்கியபோதும்,அக்கட்சி எம்.பிக்கள்தான் இப்போதும் அவருக்கு உதவி வருகின்றனர்.

இன்னொருபுறம் பாரதீய ஜனதா சிவசேனா கூட்டுக்கு மாற்றான இந்துமதப் பிரதிநிதியாக நரசிம்மராவால் முன்னிறுத்தப்படும், அவருக்காக ஹவாலா பணம் பெற்றுத்தரும் தரகனும் அவரது ஆட்சியைக் காப்பதற்காக ஆசிகளும் ஆருடங்களும் வழங்கி, யாகங்கள் நடத்தும் சர்வதேசத் தில்லுமுல்லு சாமியார் சந்திரா சாமிக்கும் இதே தாவூத் இப்ராகீ

தொடர்ச்சி 12-ம் பக்கம்

www.padippakam.com

# ஹவாலா விவகாரம்: உத்தம வேடங்கட்டி ஆடும் ஊழல் பெருச்சாளிகள்

பாராளுமன்றப் பொதுத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் வேளையில், சகுனிப் பிரதமர் நரசிம்மராவ் அவிழ்த்துவிட்ட ஹவாலா மோசடி விவகாரம் நாட்டையே உலுக்கிக் கொண்டிருக்கிறது. ஹவாலாப் புள்ளிகளிடம் லட்ச லட்சமாய்ப் பணம் பெற்ற காங்கிரசுப் பெருச்சாளிகளும் எதிர்க்கட்சிகளும் மத்தியப் புலனாய்வுத் துறையின் (சி.பி.ஐ.) குற்றப் பத்திரிகையைக் கண்டு பீதியில் உறைந்து போயுள்ளன. "அரசியலில் யோக்கியமானவர்கள், கறைபடியாதவர்கள் என்று யாருமே கிடையாது; எல்லோருமே ஊழல்-மோசடிப் பேர்வழிகள் தான்" என்ற கருத்தை நிலைநாட்டி, எதிர்க்கட்சிகளை மதிப்பிழக்கச் செய்து, தேர்தலில் ஆதாயமடையும் நோக்கத்துடன் ராவ் கும்பல் காய்களை நகர்த்துகிறது. இந்நடவடிக்கைகளை எதிர்த்து ஆத்திரத்தில் பெருங்கூச்சல் போட்ட எதிர்க்கட்சிகள், அடுத்தடுத்து அம்பலமாகும் ஆதாரங்களைக் கண்டு மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் விழி பிதுங்கி நிற்கின்றன.

"ஐயோ! நான் பணமே வாங்கவில்லை; ஹவாலா ஜெயின் சகோதரர்களை எனக்குத் தெரியவே தெரியாது; இது அரசியல் காழ்ப்புணர்ச்சியுடன் சாட்டப்படும் அபாண்டமானக் குற்றச்சாட்டு!" என்று எல்லா எதிர்க்கட்சிப் பிரமுகர்களும் கூப்பாடு போடுகின்றனர். உத்தமர்களாகக் காட்டிக் கொள்ள நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்கின்றனர். அடுத்து, "பிரதமர் ராவ் மட்டும் யோக்கியமா?" என்று எதிர்க் குற்றம்சாட்டி பதவி விலகக் கோருகின்றன. ஹவாலா பணம் பெற்றதாக ஒப்புக் கொள்ளும் கயவாளிகள் கூட, "தனிப்பட்ட முறையில் வாங்கவில்லை; கட்சியின் தேர்தல் செலவுக்காகத்தான் வாங்கினேன்" என்று கொஞ்சமும் கூச்சமின்றி நியாயப்படுத்துகின்றனர்.

### உத்தமர் வேடம் கட்டி ஆடும் அத்வானி

ஹவாலா மன்னன் ஜெயின் 'டைரி'யில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்ப் பட்டியலின் அடிப்படையில் எதிர்க்கட்சித் தலைவரான அத்வானி மீது சி.பி.ஐ. குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ததும், இது அப்பட்டமான பொய் என்று அத்வானி எகிறிக் குதித்தார். தனது லஞ்ச ஊழல்களை மூடி மறைத்து, எதிர்க்கட்சிகள் மீது அவதூறு குற்றச்சாட்டுகளை வீசி இழிவுபடுத்த நரசிம்மராவ் மேற்கொண்டுள்ள சதிதான் இது என்று பெருங்கூச்சல் போட்ட அத்வானி, தமது எம்.பி. பதவியை ராஜினாமா செய்து யோக்கியவானாக நாடகமாடினார். "நான் நிரபராதி என்று உச்சநீதி மன்றம் தீர்ப்பளிக்கும் வரை தேர்தலில் போட்டியிடவே மாட்டேன்" என்று சவால் விடுத்துள்ளார். ஆனால் "அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு, அவதூறு செய்யும் நோக்கத்தோடு சி.பி.ஐ. குற்றப் பத்திரிகை தாக்கல் செய்துள்ளது; எனவே இந்த வழக்கை ரத்து செய்ய வேண்டும்" என்று உச்சநீதி மன்றத்தில் அத்வானி தாக்கீது செய்த மனுவும் நிராகரிக்கப்பட்டுவிட்டது. மறுபுறம் டெல்லியின் பா.ஜ.க. முதல்வர் குரானா, ம.பி. முன்னாள் முதல்வரான சுந்தர்லால் பட்வா மற்றும் முக்கியத் தலைவரான கைலாஷ் ஜோஷி ஆகியோர், "தாங்களும் அத்வானியும் பணம் வாங்கியது உண்மைதான். இதனைக் கட்சித் தலைமையிடம் தேர்தல் செலவுகளுக்காகக் கொடுத்தோம். மற்றபடி, தனிப்பட்ட முறையில் யாரும் லஞ்சமாகப் பணம் வாங்கிவில்லை" என்கின்றனர்.

### "நீ மட்டும் யோக்கியமா?" பாரதீய ஜனதாவின் பாய்ச்சல்

எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்ற கதையாக பாரதீய ஜனதா தலைவர்களின் யோக்கியதை சந்தி சிரிக்கத் தொடங்கியதும், ராவ் கும்பலைப் பார்த்து "நீ மட்டும் யோக்கியமா?" என்று பாயத் தொடங்கியுள்ளார் வாஜ்பாய். ஹவாலா ஜெயின் சகோதரர்களிடமிருந்து பிரதமர் ராவும் பணம் பெற்றுள்ளார், ஆனால் சி.பி.ஐ. நடவடிக்கை எடுக்காமல் உள்ளது என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறார் வாஜ்பாய். இது தவிர, 1993-ல் பிரதமர் ராவ் தென் கொரியாவுக்குப் பயணம் செய்தபோது, அவரோடு ஹவாலா புள்ளியான பி.ஆர். ஜெயினும் உடன் சென்றுள்ளார் என்று சாடுகிறார். மேலும், பிரதமர் ராவ் சம்பந்தப்பட்டுள்ள செயின்ட் கிட்டீஸ் தீவு வழக்கை மறு விசாரணை செய்ய வேண்டும் என்கிறது பாரதீய ஜனதா. போபர்ஸ் பீரங்கி பேர ஊழலைத் திசை திருப்ப, முன்னாள் பிரதமர் வி.பி.சிங் மற்றும் அவரது மகன் அஜய் சிங்குக்கு செயின்ட் கிட்டீஸ் தீவிலுள்ள வங்கிகளில் இரகசிய கணக்கு உள்ளது என்று அன்று வெளியுறவு அமைச்சராக இருந்த நரசிம்மராவ், மோசடி கிரிமினல் சாமியாரான சந்திரா சாமி மூலம் அண்டப் புளுகை அவிழ்த்து விட்டார். இந்த வழக்கு முடிவுக்கு வந்து விட்ட போதிலும், நரசிம்மராவின் ரகசிய உலகத் தொடர்பை அம்பலப்படுத்த மறு விசாரணை செய்ய வேண்டும் என்று பாரதீய ஜனதா கோருகிறது.

### ராவ் பதவி விலக எதிர்க்கட்சிகளின் ஒப்பாரி

இதே போல மற்றொரு எதிர்க்கட்சியான ஜனதா தளத்தின் தலைவரான எஸ். ஆர். பொம்மை, ஹவாலா ஜெயின் சகோதரர்களிடம் பணம் பெற்ற விவகாரம் அம்பலமானதும், அவர் கட்சித் தலைவர் பதவியிலிருந்து விலகியுள்ளார். விலகியுள்ளார் என்பதைவிட நிர்ப்பந்தமாக விலக்கப்பட்டார் என்பதே உண்மை. ஹவாலா விவகாரத்தைச் சாக்காக வைத்து, அதிருப்தி கோஷ்டிகள் அவரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு பீகார் முதல்வர் லல்லு பிரசாத் யாதவை தலைவராக்கியுள்ளன. ஹவாலா புள்ளிகளிடமிருந்து பணம் பெற்ற பொம்மையும், மஃப்டி முகம்மது சையது, அரீப் முகம்மதுகான் முதலான ஜனதா தளத்தின் முன்னாள் அமைச்சர்களும் தாங்கள் பணமே வாங்கிவில்லை என்று உத்தமர்களாகக் காட்டிக் கொள்கின்றனர். சரத் யாதவ் மட்டும், தான் பணம் வாங்கியது உண்மைதான் என்றும், அதை கட்சித் தலைமையிடம் தேர்தல் செலவுகளுக்காகக் கொடுத்ததாகவும் குற்றத்தை ஒப்புக் கொள்ளும் நேர்மையாளனாக காட்டிக் கொள்கிறார். பாரதீய ஜனதாவைப் போலவே ஜனதா தளமும், பிரதமர் ராவும் ஹவாலாவில் சம்பந்தப்பட்டுள்ளார் என்று குற்றம் சாட்டி, சுதந்திரமான விசாரணை நடக்க பிரதமர் ராவ் பதவி விலக வேண்டும் என்று கோருகிறது.

ஜெயின் டைரியில் தங்கள் கட்சியினர் பெயர் இல்லை என்பதை வைத்து, நாங்கள் மட்டுமே யோக்கியமானவர்கள் என்று போலிக் கம்யூனிஸ்டுகள் சுயபெருமை பேசுகின்றனர். ஆனால் இடதுசாரி கூட்டணி ஆட்சியில் ஊழல் புழுத்து நாறுகிறது என்று 'மார்க்சிஸ்ட்' கட்சியின் முன்னாள் திரிபுரா முதல்வரான நிருபன் சக்கரவர்த்தியும், மே.வங்க மூத்த அமைச்சரான பினாய் சவுத்திரியும் வெளிப்படையாகவே குற்றம் சாட்டுகின்றனர். போதாக்குறைக்கு, கல்கத்தா குண்டு வெடிப்புக்குக் காரணமான மாஃபியா கும்பல் தலைவன் ரஷீத்கானுக்கும் 'மார்க்சிஸ்டு'களுக்கும் உள்ள கள்ள உறவை அம்பலப்படுத்த, ரஷீத்கானின் டைரியை வெளியிட வேண்டும் என்று காங்கிரசு



படிப்பகம்

www.padippakam.com

கட்சி கோரி வருகிறது. இந்த லட்சணத்தில், ஹவாலா விவகாரத்தில் சம்பந்தப்பட்டுள்ள பிரதமர் ராவ் பதவி விலக வேண்டும் என்று 'இடது'கள் கூப்பாடு போடுகின்றனர்.

ஹவாலா மோசடியை எதிர்ப்பதாக நாடகமாடும் போலிக் கம்யூனிஸ்டுகள், அதே ஹவாலாவில் சம்பந்தப்பட்டுள்ள ஜனதா தளத்துடன் தேர்தல் கூட்டணி கட்டிக் கொண்டுள்ளனர். ஜனதா தளத் தலைவர்கள் ஹவாலா புள்ளியிடமிருந்து பணம் பெற்றதாகக் குற்றச்சாட்டு உள்ளதே தவிர, அது நிரூபிக்கப்படவில்லை என்று தமது சந்தர்ப்பவாதத்தை நியாயப்படுத்துகின்றனர்.


''ஊழல் - லஞ்சம் என்பது எல்லா கட்சிகளிலும் இருக்கக் கூடியதுதான். அதைப் பெரிதுபடுத்த வேண்டியதில்லை. அதைவிட முக்கியமாக பாரதீய ஜனதாவின் மதவெறியும், காங்கிரசின் புதிய பொருளாதாரக் கொள்கையும் தான் பிரதான அபாயமாக உள்ளன'' என்பதுதான் போலிக் கம்யூனிஸ்டுகளின் நிலைப்பாடாக உள்ளது.

**பரிசுத்தங்களின்**
**கையாலாகாத தீர்வு**

ஹவாலா பணம் பெற்ற ஓட்டுக் கட்சிகளின் குடுமிப்பிடி சண்டைகள் ஒருபுறமிருக்கட்டும். அரசு ஒப்பந்தங்களைப் பெறுவதற்கான லஞ்சமாகவும், வெளிநாடுகளில் குவித்து வைத்துள்ள கள்ளப்பணத்தைக் கடத்தி வருவதற்காகவும், பல கிரிமினல் குற்றங்களைச் செய்துவிட்டு சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிக்கவும் அரசியல்வாதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் இந்த ஹவாலா பணம் தரப்பட்டுள்ளது. நாட்டின் ஓட்டு மொத்த அரசியல் அமைப்பே மக்கள் விரோதமாகவும் கேடு கெட்டதாகவும் மாறிவிட்டதையே இது நிரூபித்துக் காட்டுகிறது. இந்நிலையில், குற்றவாளிகளைத் தண்டிக்கவும், இனி இதுபோன்ற மோசடிகள் நடக்காமல் தடுக்கவும் அரசியல் கட்சிகள் என்ன தீர்வை முன் வைக்கின்றன?

''சட்டம் தன் கடமையைச் செய்யும். சி.பி.ஐ. விசாரணையில் பிரதமரோ, அமைச்சர்களோ தலையிட மாட்டார்கள். எத்தகைய பெரிய பதவியிலிருந்தாலும் யாரையும் காப்பாற்ற முயற்சிக்க மாட்டோம்'' என்று ராவ் கும்பல் பரிசுத்த நாடகமாடுகிறது.

''உயர்மட்ட ஊழலை முறியடிப்பதே எங்கள் லட்சியம்; பொது வாழ்வில் தூய்மையை நிலை நாட்டுவதே எங்கள் நோக்கம்'' என்கிறது பாரதீய ஜனதா. தற்போதைய சி.பி.ஐ. விசாரணை திருப்திகரமாக இல்லை; சுதந்திரமாகச் செயல்படக் கூடிய புலனாய்வு - விசாரணை அமைப்பை உருவாக்க வேண்டும் என்கிறார் அத்வானி. ஒவ்வொரு மோசடி பற்றியும் விசாரிக்க தனித்தனியே சிறப்பு நீதிமன்றங்களை அமைக்க வேண்டும் என்கிறார் அக்கட்சியின் பொதுச் செயலாளரான வெங்கையா நாயுடு. ஹவாலா பிரச்சினை பற்றி விவாதிக்க சர்வகட்சிக் கூட்டம் கூட்டப்பட வேண்டும் என்கிறார் முன்னாள் பிரதமரான வி.பி.சிங். பிரதமர் ராவ் பதவி விலக வேண்டும்; விசாரணை நேர்மையாக நடக்க வேண்டும் என்கின்றன ஜனதா தளமும், போலிக் கம்யூனிஸ்டு கட்சிகளும்.




இதுதவிர, தேர்தல் சீர்திருத்தம், கட்சிகளின் தேர்தல் செலவை அரசே ஏற்பது முதலான அம்சங்களைக் கொண்ட தினேஷ் கோஸ்வாமி குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்துமாறு எதிர்க் கட்சிகள் கோருகின்றன. இதன் மூலம் ஓட்டுக்கட்சிகள் முறைகேடான வழிகளில் தேர்தலுக்கு 'நன்கொடை' பெறுவதைத் தவிர்க்க முடியும் என்கின்றனர். உண்மையில், இந்த விவகாரத்தில் எந்த ஓட்டுக்கட்சிக்கும் அக்கறை கிடையாது. இத்தனை நாளும் இந்த அறிக்கையைக் கிடப்பில் போட்டு விட்டு இப்போது திடீர் ஞானோதயம் வந்து புழுதி கிளப்புகின்றன. மேலும், இந்த அறிக்கையை நடைமுறைப்படுத்தினாலும், ஊழல் - மோசடிகளைத் தடுப்பதற்கான உத்திரவாதம் இல்லை. ஏனெனில் வாக்காளர் அடையாள அட்டை, மின்னணு ஓட்டுப் பதிவு எந்திரம் முதலானவை உள்ள போதே தேர்தல் தில்லுமுல்லு - மோசடிகளில் ஈடுபட்டு வரும் ஓட்டுக்கட்சிகள், தேர்தல் சீர்திருத்த அறிக்கையின்படி கட்டுப்பாடாகச் செயல்படும் என்பதற்கு எந்த அடிப்படையுமில்லை. இதுதவிர, ஊழல் - மோசடி குற்றச்சாட்டுகளில் சிக்கிய நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பற்றி விசாரிக்கும் ''லோக்பால்'' மசோதாவை நிறைவேற்றக் கோருகின்றனர். நேர்மையாக சி.பி.ஐ. விசாரணை நடத்த வேண்டுமென்கின்றனர்.

> ஒட்டு மொத்த அரசியலமைப்பு முறையே மேலும் மேலும் மக்கள் விரோதமானதாக, கிரிமினல் மயமானதாக மாறிவிட்டது.

**சி.பி.ஐ. நேர்மையாக**
**விசாரணை நடத்துமா?**

அதுசரி, விசாரணை நேர்மையாக நடக்குமா என்பதுதான் கேள்வி. ஏனெனில், சி.பி.ஐ. என்பதே பிரதமரின் அதிகாரத்துக்குட்பட்ட ஒரு அமைப்புதான். அது ஆளுங் கும்பலுக்கு விசுவாசமான அமைப்புதானே தவிர, சுதந்திரமாக இயங்கக் கூடிய புலனாய்வு அமைப்பு அல்ல. மேலும் சி.பி.ஐ. என்பது லஞ்ச - ஊழல்களுக்கு அப்பாற்பட்ட புனிதமான அமைப்பும் அல்ல. ஹவாலா புள்ளிகளிடம் சி.பி.ஐ.யின் முன்னாள் இயக்குநரான விஜய்கரணும், இணை இயக்குநரான சர்மாவும் ஒன்றரை கோடி ரூபாய்க்கும் மேலாக பணம் பெற்றுள்ளனர். இதனாலேயே 1991-லேயே ஹவாலா மோசடி அம்பலமாகி, சோதனைகள் நடந்த போதிலும் இந்த வழக்கை சி.பி.ஐ. முடக்கி வைத்தது.

தமிழகத்தில் கோடி கோடியாய் கொள்ளையடித்துக் கொட்டமடிக்கும் ஜெயா - சசிகலா கும்பல் மீது ஊடலும்


படிப்பகம்

www.padippakam.com

கூடலுமான விசாரணை நாடகமாடும் சி.பி.ஐ., ஹவாலா விசாரணையை நேர்மையாக நடத்தும் என்பதற்கு எந்த அடிப்படையுமில்லை. பிரதமர் ராவின் ராஜகுருவான சந்திராசாமிக்கும் இரகசிய உலக கிரிமினல் பேர்வழிகளுக்கும் உள்ள கள்ள உறவு அம்பலமான போதிலும், சி.பி.ஐ. நடவடிக்கை எடுக்க மறுக்கிறது.

மேலும், சி.பி.ஐ.யின் தற்போதைய இயக்குநராக உள்ள விஜயராமராவ், பிரதமர் ராவின் நம்பகமான விசுவாசியாவார். இந்த லட்சணத்தில் சி.பி.ஐ. நேர்மையாக விசாரணை நடத்தும் என்று நம்புவது கேழ்வரகில் நெய் வடிந்த கதைதான். மேலும், ஓட்டு மொத்த அரசியல் நிர்வாக அமைப்பே ஊழல் - கிரிமினல் மயமாகிவிட்ட நிலையில், சி.பி.ஐ.க்கும் மேலாக, சுதந்திரமாகச் செயல்படக் கூடிய அமைப்பை உருவாக்க சாத்தியமேயில்லை. அப்படி ஒரு சுதந்திரமான புலனாய்வு அமைப்பு நிறுவப்பட்டாலும், அது ஊழல் கறைபடியாமல் நீடிக்க எந்த அடிப்படையுமில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக, தற்போது சி.பி.ஐ. நடத்திவரும் விசாரணையானது, குறிப்பிட்ட ஒரு ஹவாலா கும்பல் கடந்த நான்காண்டுகளில் சில முக்கிய அரசியல்வாதிகள், அதிகாரிகளுக்கு பணம் கொடுத்ததைப் பற்றிய வழக்குதான். இன்னும் நாட்டிலுள்ள பல்வேறு ஹவாலா கும்பல்கள் இவ்வளவு காலமும் அனைத்து மட்டங்களிலுமுள்ள முக்கிய புள்ளிகளுக்குப் பணம் கொடுத்தது பற்றிய விவகாரத்துக்குள் சி.பி.ஐ. நுழையவே இல்லை. அவ்வளவு தூரம் போய் விடக் கூடாது என்பதற்காகவே, சாதாரண ஊழல் தடுப்பு கிரிமினல் சட்டத்தின் கீழ் மட்டுமே வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. என்ன நோக்கத்துக்காக, எந்த மூலத்திலிருந்து பணம் பெற்று கைமாறியுள்ளது என்பதைப் பற்றியோ, என்னென்ன அரசு ஒப்பந்தங்களுக்காக லஞ்சம் தரப்பட்டது. அதனால் அந்த ஒப்பந்தங்களில் - திட்டங்களில் ஏற்பட்ட பாதிப்பு என்ன என்பதைப் பற்றியோ விசாரிக்க மறுக்கிறது. ஹவாலா பணம் கொடுத்தவர்கள் - வாங்கியவர்களுக்கிடையிலான விவகாரமாக எல்லாவற்றையும் சுருக்கிவிட சி.பி.ஐ. முயற்சிக்கிறது. எல்லா ஓட்டுக் கட்சிகளின் விருப்பமும் நோக்கமும் இதுதான். இன்னும் விரிவாகவும் ஆழமாகவும் விசாரணை நடந்தால், தங்களது இரகசிய உலக கிரிமினல் விவகாரங்கள் அம்பலமாகிவிடும் என்று அஞ்சுகின்றன. எனவேதான், பணம் வாங்கினோமா, இல்லையா என்ற விவகாரத்துக்குள்ளேயே சுற்றிச் சுற்றி வந்து, மயிர் பிளக்கும் வாதப் பிரதிவாதங்களைக் கிளப்பித் திசை திருப்பி வருகின்றனர்.

### 'நன்கொடை' பெறுவது குற்றமா?

மேலும், இந்தியச் சட்டப்படி முதலாளிகளிடம் ஓட்டுக்கட்சிகள் 'நன்கொடை' பெறுவது குற்றமல்ல. லஞ்சம் வாங்குவதுதான் சட்டப்படி குற்றம். ஹவாலா புள்ளிகளிடம் பணம் பெற்ற அரசியல்வாதிகள், அவர்களுக்கு என்ன வேலையை முடித்துக் கொடுத்துள்ளார்கள் என்கிற கோணத்தில் இப்போது விசாரணை நடக்கவில்லை. எனவே பணம் வாங்கிய எல்லோருமே லஞ்சமாக வாங்கவில்லை; நன்கொடையாகத்தான் பணம் பெற்றோம் என்று கூறி வழக்கிலிருந்து சுலபமாகத் தப்பித்து விடவும் முடியும். முதலாளிகளிடமிருந்து அரசியல்வாதிகள் நன்கொடை பெறுவது கிரிமினல் குற்றம் என்றால், ஜம்னலால் பஜாஜிடமிருந்து நன்கொடை பெற்ற 'உத்தமர்' காந்தி கூட குற்றவாளியாகிவிடுவார். லஞ்சம் கொடுத்த முதலாளியும், நல்லெண்ண அடிப்படையில் நன்கொடைதான் கொடுத்தேன் என்று வாக்குமூலம் கொடுத்து விட்டால், இப்போது குற்றப் பட்டியலிலுள்ள அரசியல்வாதிகள் அனைவரும் நிரபராதிகளாகி விட முடியும். இந்த தைரியத்தில்தான், ''நான் பணம் வாங்கவில்லை; ஹவாலா ஜெயின் சகோதரர்களை எனக்குத் தெரியவே தெரியாது'' என்று குற்றம் சாட்டப்பட்ட அரசியல்வாதிகள் அனைவரும் பெருங்கூச்சல் போடுகின்றனர்.

ஹவாலா ஜெயின் கும்பல் மட்டுமல்ல; எல்லா முதலாளிகளும் ஏன், வெளிநாட்டுத் தொழில் நிறுவனங்களும் கூட எல்லா ஓட்டுக் கட்சிகளுக்கும் நன்கொடை தருகின்றன. தேர்தல் நேரத்தில் மட்டுமின்றி, சாதாரண காலங்களில் கூட அன்பளிப்பு, பரிசுப் பொருள், வெகுமதி என்ற பெயரில் கோடி கோடியாய் கொட்டுகின்றன. குறிப்பிட்ட ஒரு அரசாங்க ஒப்பந்தத்தை முடித்துக் கொடுப்பதற்காக லஞ்சம் தருவதோடு, அப்படி எந்தவொரு சாதகமான வேலையும் செய்யாத போதிலும்கூட அரசியல்வாதிகளுக்கு நன்கொடை கொடுக்கிறார்கள். நாடாளுமன்றத்தில் குறிப்பிட்ட ஒரு பிரச்சினையைப் பற்றி விவாதிப்பதற்காக, கேள்வி எழுப்புவதற்காக, கேள்வியே கேட்காமல் இருப்பதற்காக என்று பலவகையிலும் அரசியல்வாதிகளுக்குப் பணம் தரப்படுகிறது. நாடாளுமன்றத்தில் பிரதிநிதிகள் கேட்கும் ஒவ்வொரு கேள்விக்குப் பின்னாலும், அல்லது மௌனமாக இருப்பதற்குப் பின்னாலும் பணம்தான் உள்ளது. சுருக்கமாகச் சொன்னால் முதலாளிகளின் சித்தத்தைத்தான் நாடாளுமன்றம் எதிரொலிக்கிறது. அதுவே நாட்டின் சித்தமாகிறது.

உதாரணமாக, அந்நிய முதலீடுகளுக்குக் கதவை அகலத் திறப்பதுதான் முதலாளிகளின் விருப்பம் - நோக்கம் என்றால் அதையே நாடாளுமன்றம் பிரதிபலிக்கிறது. நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு இது அவசியம் என்று நியாயப்படுத்தப்பட்டு சட்டமாகிறது. கருப்புப் பணம் வைத்திருப்பது குற்றம் என்பது போய், கருப்புப் பணத்தைத் தாராளமாக முதலீடு செய்யலாம் என்று முதலாளிகளின் விருப்பம், நாட்டின் விருப்பம் - தேவையாகிச் சட்டபூர்வமானதாகி விட்டது. தங்கத்தைக் கடத்தி வருவது குற்றம் என்பது போய், குறிப்பிட்ட அளவுக்குத் தங்கத்தைக் கருப்புப் பணம் மூலமாக சுங்கத் தீர்வை ஏதுமின்றி கொண்டு வரலாம் என்பது சட்டபூர்வ நியதியாகிவிட்டது. சுருக்கமாகச் சொன்னால், எது நீதி, நியாயம், ஒழுக்கம், தூய்மை, புனிதம் என்று ஏற்றிப் போற்றப்பட்டதோ, அவையே இன்று செல்லாக் காசாகி மதிப்பிழந்து அரசியல் கலாச்சாரமே சீரழிந்து கிடக்கிறது.



1996 கோடைக்கால உடை அலங்காரம்

### ஹவாலா குடியரசில் திவாலான கட்சிகள்


குறிப்பாக, காட் ஒப்பந்தத்துக்குப் பிறகு, உலக வர்த்தக நிறுவனத்தின் (W.T.O.) ஆதிக்கத்தின் கீழ் இந்தியா வந்ததும், அதன் பெயரளவிலான சட்டங்கள், மரபுகள், அரசியல் ஒழுக்கம் அனைத்தும் தகர்த்தெறியப்பட்டு விட்டன. ஓட்டு மொத்த அரசியலமைப்பு முறையே மேலும் மேலும் மக்கள் விரோதமான

தொடர்ச்சி 21-ம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள்  கவனிக்கட்டும்

### இலங்கைக்கு உதவியது இந்தியக் கடற்படை

கடந்த பிப்ரவரி 12-ந் தேதி இலங்கை உளவுத் துறையினர், விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் கொண்டு வரும் கப்பலொன்றை நடுக்கடலில் மடக்கிப் பிடிக்க உதவி செய்யுமாறு இந்திய அரசுக்கு செய்தி அனுப்பினர். இதன்படி பிப்ரவரி 14-ந் தேதி இலங்கை இராணுவத்தின் உதவிக்காக மூன்று ரோந்து கப்பல்களை இந்தியா அனுப்பி வைத்தது. 4000 டன் வெடி மருந்துப் பொருட்களை ஏற்றி வந்த விடுதலைப் புலிகளின் கப்பலை இலங்கையின் கடல் எல்லையில் வழி மறித்த இந்தியக் கடற்படை, அக்கப்பலை இலங்கை இராணுவத்திடம் ஒப்படைத்த பின்தான் திரும்பியது. அப்பொழுது நடைபெற்ற மோதலில் இந்தியக் கடற்படைக் கப்பலொன்றும் சேதமடைந்தது.

### முதல் தனியார் ரயில்

தனியார் நிறுவனங்களே ரயில்களைக் கட்டி, பின் இயக்கும் முதல் ஒப்பந்தம் இந்திய ரயில்வே துறைக்கும், ஸ்டெர்லிங் ஹாலிடே ரிசார்ட்ஸ் எனும் நிறுவனத்துக்கும் இடையே கையெழுத்தாகியுள்ளது. சுற்றுலாப் பயணிகளுக்காக மிகவும் ஆடம்பரமாக 20 கோடி ரூபாய் செலவில் இங்கிலாந்து நிறுவனத்துடன் இணைந்து இந்த ரயிலை வடிவமைக்கவுள்ளது ஸ்டெர்லிங் நிறுவனம். "ராயல் இந்தியன்" எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த ரயில், ரெயில்வே துறையின் வசதிகளைப் பயன்படுத்திக் கொண்டு இந்தியத் தண்டவாளங்களில் 1997 முதல் ஓடத் துவங்கும்.

### தமிழ்நாட்டில் கொத்தடிமைகள்

"தமிழ்நாட்டில் கொத்தடிமைகள் உள்ளனரா?" எனக் கண்டறிவதற்கு உச்சநீதி மன்றத்தால் நியமிக்கப்பட்ட ஆய்வுக் கமிட்டி, தனது அறிக்கையில், "தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 10 லட்சம் பேர் கொத்தடிமைகளாக உள்ளனர்; மேலும் பிற மாநிலங்களுக்குக் கொத்தடிமைகளாகச் செல்வதில், இந்தியாவிலேயே தமிழகம் தான் முதலிடம் வகிக்கிறது" எனக் குறிப்பிட்டுள்ளது.

### மேற்குலகின் யோக்கியதை

சமீபத்தில் ஆஸ்திரியா நாட்டில் பூமிக்கடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மிகப் பெரும் எண்ணிக்கையிலான ஆயுதக் குவியலை அந்நாட்டு அரசு கண்டுபிடித்துள்ளது. "நாஜிக்களின் பிடியில் இருந்த ஆஸ்திரியாவை விடுதலை செய்த சோவியத், 1955-ல் இந்நாட்டை விட்டு வெளியேறியது. மீண்டும் சோவியத் செல்வாக்கு மத்திய ஐரோப்பாவில் ஏற்பட்டு விடாது தடுப்பதற்காக சோவியத் வெளியேறியவுடனேயே அமெரிக்காவும், பிரிட்டனும் கூட்டாக இணைந்து இந்த ஆயுதங்களைப் பதுக்கி வைத்துள்ளன. மேலும் இரண்டாம் உலகப் போர் முடிந்த சிறிது காலத்திற்குள்ளாகவே, இந்த ஆயுதக் குவியல் பற்றிய பொறுப்புகளை ஹிட்லரின் நாஜிக் கட்சியின் மற்றும் எஸ்.எஸ். கொலைப்படையின் முன்னாள் அதிகாரிகளிடம் ஒப்படைத்து ஒரு புனிதக் கூட்டையும் ஏற்படுத்திக் கொண்டுள்ளன. ஏகாதிபத்தியங்களின் இச்சதித்தனங்கள் இந்த ஆயுதக் குவியல் பற்றிய விசாரணையில் அம்பலமானது

### மேல்சாதி – ஆணாதிக்க வெறியர்களின் கொட்டம்

இராசஸ்தானைச் சேர்ந்த சமூக நல ஊழியை பன்வாரி தேவி, மேல்சாதி குஜ்ஜார்களால் கற்பழிக்கப்பட்ட வழக்கில், மாவட்ட நீதிமன்றம் அவருக்கு எதிராகத் தீர்ப்பளித்தது. இத்தீர்ப்பை எதிர்த்து பன்வாரி தேவி மேல் முறையீடு செய்யவுள்ளார். அவரின் இம்முயற்சியை எதிர்த்து, மேல்சாதி குஜ்ஜார்கள் சனவரி மாதம் 17-ந் தேதியன்று ஜெய்ப்பூரில் ஊர்வலமொன்றை நடத்தினர். இதற்குத் தலைமையேற்றவர் பா.ஜ.க. கட்சியின் பாஸி தொகுதி எம்.எல்.ஏ. கன்ஹயா லால் மீனா. இவ்வூர்வலத்தில் பன்வாரி தேவியைக் கற்பழித்த குண்டர்கள் மாலை அணிந்து வர, அவர்கள் "குஜ்ஜார் சாதியின் குலப் பெருமையை கட்டிக் காத்ததா க"க் கோஷம் எழுப்பப்பட்டது. மேலும், "பன்வாரி தேவியை உயிரோடு கொளுத்த வேண்டும்" என்றும் மேல்சாதி - ஆணாதிக்க வெறியர்கள் கோஷமிட்டனர்.

### கொள்ளைக் கும்பலாகத் தமிழகப் போலீசு

திண்டுக்கல்லுக்கு அருகேயுள்ள தாண்டிக்குடி போலீசு நிலையத்தைச் சேர்ந்த ஆய்வாளர் மனோகரன். இவன் நான்கு ரவுடிகளைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டு மலையாண்டிபுரத்தைச் சேர்ந்த இராமசாமி குடும்பத்தினர் வீட்டில் இல்லாத சமயம் பார்த்து, கதவை உடைத்துப் புகுந்து ரொக்கப் பணம் இருபத்தைந்தாயிரம், பாத்திரங்கள், காபிக் கொட்டை மூட்டைகளைத் திருடிச் சென்றான். தாண்டிக்குடி திரும்பும் வழியில், பன்றிமலையில் இத்திருட்டுக் கும்பல் இலவச வேஷ்டி - சேலைகளையும் திருட முயன்றது. அப்பொழுது அவ்வூர்ப் பொதுமக்கள் இக்கும்பலை விரட்டிப் பிடித்து, 30 மணி நேரத்திற்கும் மேலாக சிறை வைத்தனர். பின்னர் மாவட்ட போலீசு அதிகாரி பொதுமக்களிடம் வழக்குப் போடுவதாக உறுதி கூறி, மனோகரனை மீட்டுச் சென்றார்.

### அ.தி.மு.க. காமுகனுக்கு அடி – உதை

சென்னை தண்டையார்பேட்டையிலுள்ள நேதாஜி நகரைச் சேர்ந்த அ.தி.மு.க. பிரமுகர் சுவாமிநாதன். ஐம்பத்தாறு வயதான இந்த ஓட்டுப் பொறுக்கி, பட்டேல் நகர் மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியின் பெற்றோர் - ஆசிரியர் கழகத்தின் தலைவராகவும் இருந்து வருகிறான். இந்த அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு, இப்பள்ளியில் பயிலும் சிறுமிகளிடம் முறைகேடாக நடந்து வந்துள்ளான். இது பற்றி மூன்று மாணவிகள் புகார் கொடுக்கவே, ஆத்திரங்கொண்ட அப்பகுதி மக்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு அக்காமுகனை நடுரோட்டில் இழுத்துப் போட்டு நையப்புடைத்தனர். பொதுமக்களின் நிர்ப்பந்தத்துக்குப் பணிந்து, நடுத்தெருவிலேயே அவன் மீது வழக்குப் பதிவு செய்தது போலீசு. ஆனாலும் பிணையில் வெளியே வந்து, உல்லாசமாகப் பவனி வருகிறான் இக்காமுகன்.

அ.தி.மு.க. காமுகன் சுவாமிநாதன்



### சம்பள பாக்கி கேட்டதால் கற்பழித்தார்கள்

புது தில்லிக்கு அருகேயுள்ள ரோடக் எனும் ஊரில் விஜேந்திர சிங் என்பவனுக்குச் சொந்தமான சுண்ணாம்புக் காளவாயில் 14 குடும்பங்கள் கொத்தடிமைகளாக வேலை பார்த்து வருகின்றன. அவர்கள் தங்களுக்குக் குடிநீர் குழாய் கேட்டும், சம்பள பாக்கி தரக் கோரியும் வாதடினர். இதனால் ஆத்திரமடைந்த விஜேந்திர சிங்கின் தம்பி தல்பிர், 50 ரவுடிகளுடன் கடந்த டிசம்பர் 23-ந் தேதி அத்தொழிலாளர் வாழும் குடிசைகளுள் புகுந்து ஆண்களைத் தாக்கியதோடு, வயது வேறுபாடின்றி அனைத்துப் பெண்களையும் கும்பலாகக் கற்பழித்தான். இப்பாலியல் வன்முறை பற்றிய புகாரைப் போலீசு பதிவு செய்ய மறுத்துவிட்டது. தற்பொழுது இது பற்றி பெண்களுக்கான தேசியக் கமிஷன் விசாரித்து வருகிறது.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழக அரசியல்: கூட்டணிக் குழப்பங்களின் சூட்சமம் பிழைப்புவாதமே

''அரசியலில் நிரந்தர எதிரியுமில்லை; நிரந்தர நண்பர்களுமில்லை'' என்பது ஓட்டுப் பொறுக்கி கட்சிகளின் 'அயலுறவுக் கொள்கை'. ஆமாம்; அடுத்த கட்சியுடனான உறவு வைத்துக் கொள்வதற்காக இக்கழிசடைகள் ஒத்த குரலில் பாடும் பஜனை இது. பிழைப்புவாதமும், சந்தர்ப்பவாதமும், பதவி - பண வெறியும் தான் இவர்களுக்கு நிரந்தரமே ஒழிய, மற்றவை எதுவும் நிரந்தரமில்லை.

தனித்து ஆட்சியைப் பிடிக்க முடியும் என்ற நம்பிக்கை எந்த ('தேசிய', மாநில) ஓட்டுக் கட்சிகளுக்கும் இல்லை; இது பழைய கதை. எந்தக் கூட்டணி ஆட்சியைப் பிடிக்கும் என்ற நம்பிக்கையும் அவர்களுக்குப் போய்விட்டது. கூட்டணிக் குழப்பத்தில் கணக்கை மாற்றி மாற்றிப் போட்டுப் பார்த்து மண்டையைப் பிய்த்துக் கொள்கிறார்கள், ஓட்டுப் பொறுக்கிகள். எனவே, தேர்தலுக்குப் பின் கிடைத்த சீட்டுக்களை வைத்து எந்தக் கட்சிகளோடு எல்லாம் கைகோர்த்தால் பெரும்பான்மை வரும் என்று எளிதாக முடிவு செய்து கூட்டுச் சேர திட்டமிடுவதே ஓட்டுக்கட்சிகளின் தற்போதைய நடைமுறை.

தமிழகத்தில் ஓட்டுக் கட்சிகள் அமைத்துக் கொண்டிருக்கிற கூட்டணிகளைக் கண்டு மயங்கிவிடவேண்டாம். தேர்தல் வெற்றி தோல்விக்குப் பின்னும் கூட்டணி மாற்றங்களும், குழப்பங்களும் நீடிக்கும். அப்படியே ஏதோ ஒரு கட்சி சில கூட்டணிக் கட்சிகளின் ஆதரவோடு ஆட்சியில் அமர்ந்தாலும் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு ஆட்சிக் கவிழ்ப்பு பீதியிலிருக்கும். எந்த நேரத்திலும் கட்சிகள் உடையவும் கூட்டணி மாறவும் வாய்ப்புள்ளது. இந்தியாவிலுள்ள அநேக மாநில ஆட்சிகளிலும் மத்திய ஆட்சியிலும் இப்படித்தான் நடக்கும் என்பது 'தலைவிதி'யாகிவிட்டது.

சிறிதளவு பெரும்பான்மையில் தொங்கிக் கொண்டிருக்கும் ஆட்சியில் அடிக்கடி மாற்றம் நிகழாவண்ணம் இருக்க ''கட்சித் தாவல் தடுப்புச் சட்டம்'' போட்டார்கள். என்ன பயன்? தொங்கு நிலை எம்.எல்.ஏக்களும், எம்.பி.க்களும் உருவாகி விட்டார்கள்! எந்தக் கட்சியையும் சாராத, எந்தக் கட்சி உறுப்பினர் என்று தெரியாத அணியினர் சட்டமன்றத்திலும், பாராளுமன்றத்திலும் பெருகி வருவதுதான் கண்ட பலன். நாடாளுமன்ற ஜனநாயகத்தின் கேலிகூத்து இன்னும் எந்த அளவிற்குப் போகும் என்பதை யாரும் அறுதியிட முடியாது.

தமிழகத்தில் நான்கு முனைப் போட்டியிருக்கும் எனப் பத்திரிகைகள் கணித்துச் செய்தி வெளியிட்டுள்ளன. இதற்கேற்ப சில மாதங்களுக்கு முன்பே அ.தி.மு.க. தனது தரப்பில் 11 கட்சி கூட்டணி ஒன்றும், தி.மு.க. தனது தலைமையில் 7 கட்சி கூட்டணி ஒன்றையும், காங்கிரசு தனது தலைமையில் ஒரு கூட்டணியையும், ம.தி.மு.க. மற்றும் சி.பி.எம். இணைந்து ஒரு கூட்டணியையும் அறிவித்தன. சில பத்திரிகைகள் மாதிரி வாக்கெடுப்பு நடத்தி ''தி.மு.க. கூட்டணிதான் வெற்றி பெறும்'' (ரஜினி அரசியலுக்கு வராது இருக்கும் பட்சத்தில்) எனத் தீர்ப்பும் கூறியிருந்தன. ஆனால், ஒரு சில மாதங்களுக்குள்ளாகவே இக்கூட்டணிகளில் பிளவுகளும் மாற்றங்களும் ஏற்பட்டு அதுவே தொடர்கதையாகியுள்ளது. எனவே இன்னும் எந்தெந்த கூட்டணி உடையும் மறு கூட்டணி எப்படி அமையும் என்ற விவாதம் தமிழக அரசியலை ஆக்கிரமித்துள்ளது.

கடந்த தேர்தலில் அறுதிப் பெரும்பான்மையைப் பெற்ற கட்சியானதால் ''என்னை ஆட்டவும் முடியாது; அசைக்கவும் முடியாது'' என்ற மமதையில் ஜெயலலிதா இன்னும் ஆட்டம் போட்டாலும், வரும் தேர்தலில் தோல்வியைத் தழுவுவார் என்ற நிச்சியமான முடிவுக்கு யாரும் வரமுடியாது. கடந்த 5 வருட ஆட்சியின் ஊழல், கொள்ளை, ஆடம்பரம், அடக்குமுறை, அராஜகம், வன்முறை, அட்டூழியம் எல்லாம் ஜெயா கும்பலுக்குரிய பலவீனம் என்றாலும், எதிர்க்கட்சிகளிடையே உள்ள பிளவும், தனது பணமும், கிரிமினல் படையும், ஆட்சி அதிகாரமும் பெரும்பலமாக உள்ளன. இதனால்தான் எதிர்க்கட்சிகள் கூட்டாக ஆட்சியைக் கலைத்துவிட்டு தேர்தல் நடத்தும்படி கோருவதும், காங்கிரசின் மத்திய தலைமை ஜெயாவுடன் கூட்டு வைத்துக் கொள்ள முயலுவதும், கருணாநிதி, பா.ம.க. கூட்டணியை இழக்க விருப்பமின்றிக் 'கெஞ்சுவதும்' நடக்கிறது. இதனால்தான் மத்திய அரசு அமலாக்கப் பிரிவு நடவடிக்கையை ஜெயா - சசி கும்பல் மீது முடுக்கிவிட்டு எவ்வளவுதான் சந்திசிரிக்கச் செய்தாலும், ஜெயலலிதா தனித்து நின்றே வெற்றி பெற்றுவிட முடியும் என்கிற மமதையில் நம்பிக்கை கொண்டிருக்கிறார்.

தமிழகக் காங்கிரசு கும்பல் ராவையும் ஜெயாவையும் கூட்டணி சேர விடாமல் தடுத்தாலும், இருவரும் தனிப்பட்ட முறையில் கூட்டணிக்கான பேச்சு வார்த்தையை நடத்துகிறார்கள்; ''காங்கிரசுடன் கூட்டணி இல்லை என்ற சொல்வதற்கில்லை'' என்று கூறுகிறார் ஜெயலலிதா. காங்கிரசுடன் கூட்டணி வைத்துக் கொள்ள ஜெயா கும்பலுக்கு எந்தத் தடையுமில்லை; ஒன்றைத் தவிர. ''யார் பணிந்து போவது'' என்பதுதான் அது. நரசிம்மராவ் அமலாக்கப்பிரிவு, சி.பி.ஐ. நடவடிக்கையை முடுக்கி விட்டுக் கொடுக்கும் நெருக்கடிகளுக்குப் பணிந்து விட்டால் கூட்டணி பேரத்தில் காங்கிரசின் கை ஓங்கும்; அ.தி.மு.க.விற்குச் சீட்டு இழப்புகள் ஏற்படும். இதுவே தேர்தலுக்குப் பின் என்றால் ஓட்டுகள் பிரிந்து அ.தி.மு.க. ஆட்சியமைக்கும் நிலையும், ஒருவேளை ஆட்சியமைக்க எண்ணிக்கை போதாமல் காங்கிரசு கூட்டு தேவைப்பட்டால்கூட பேரத்தில், தான் ஆதிக்கம் செய்ய முடியும் என்பதுதான் ஜெயலலிதாவின் நினைப்பு. ''காங்கிரசு எங்கள் முதுகில் சவாரி செய்ய விடமாட்டோம்'' என்கிறார், காங்கிரசின் பலவீனத்தைப் புரிந்து கொண்ட ஜெயா.

ஏழு கட்சிக் கூட்டணி நெல்லிக்காய் மூட்டையாக **சிதறியது ஏன்?**





படிப்பகம்

www.padippakam.com

உண்மைதான்; முதுகு சவாரிதான் காங்கிரசின் வாழ்வு. இப்பொழுது அதற்கு இருக்கும் ஒரே ஊசலாட்டம் ரஜினி முதுகா, ஜெயலலிதா முதுகா என்பதுதான். தமிழகக் காங்கிரசார் ரஜினி முதுகு சவாரியைக் கனவு காணுவதும், ராவ் ஜெயலலிதா முதுகு சவாரியை விரும்புவதும் இன்னொரு வேடிக்கை. ரஜினியை முழுமையாக நம்ப முடியாமல் இருப்பதோடு, "ரஜினி ஆதரவில் வெற்றி" என்கிற புதிய சோதனை முயற்சியில் நம்பிக்கை வைக்கவும் நரசிம்மராவ் தயாரில்லை. ஆனால் ஏதோ ஒரு முதுகு கிடைத்து உறுதியாகிவிட்டால் எதிர் முதுகு நாடியவர்கள் பல்டியடித்துப் பசப்பவும் தயாராகவே உள்ளனர். நரசிம்மராவ் எதற்கும் வாயே திறக்காததால் எந்த முடிவுக்கும் விளக்கம் சொல்லத் தற்பொழுது தேவையில்லை. ஆனால் தமிழக காங்கிரசு கும்பலுக்கு எதிரான முடிவு எடுக்கப்பட்டால் அப்பொழுது அவர்கள் தரும் விளக்கத்தை கேட்டு நாம் ரசிக்க முடியும்!

நரசிம்மராவ் ஜெயாவுடன் கூட்டணி இல்லை என்பதைத் தெளிவாக அறிவிக்க வேண்டும் என்பதைத் தமிழகக் காங்கிரசு கும்பலைப் போலவே ஆர்.எம். வீரப்பன் தலைமையிலான "உதிர்ந்த ரோம"க் கும்பலும் கேட்டுக் காத்து நிற்கிறது. "என்னுடைய அரசியல் நுழைவு இந்தத் தேர்தலில் கிடையாது; ஒரு நல்ல கட்சிக்கு என்னுடைய ஆதரவு உண்டு; எந்தக் கட்சி என்று உங்களுக்கே தெரியும்; ஒரு வேளை அரசியலுக்கு வந்தால் நம்ம கட்சி தனிக் கட்சிதான்" என்று ரஜினி தொலைக்காட்சி பேட்டியில் தெரிவித்து விட்டு ரிஷிகேசம் போனாலும், விடாது துரத்தியது வீரப்பன் - திருநாவுக்கரசு கும்பல். இறுதியாக ரஜினியைத் தலைவராக வைத்து ஒரு கட்சி தொடங்க முடியாது என்பதைத் தெரிந்து கொண்டபின் "எம்.ஜி.ஆர் முன்னணி" என்ற பெயரில் வீரப்பன், திருநாவுக்கரசு, விசுவநாதன், ராஜாராம், பண்ருட்டி ராமச்சந்திரன் முதலிய கழிசடைகள் எல்லாம் கூட்டு சமைத்துள்ளன. "ரஜினி கூறிய நல்ல கட்சி எங்களுடையதுதான்; ரஜினி ஆலோசனைபடி - சொல்படிதான் அனைத்தையும் செய்கிறோம்; காங்கிரசு - எம்.ஜி.ஆர். முன்னணி கூட்டு ஆட்சிக்கு வருமானால் ரஜினி யாரை கை காட்டுகிறாரோ அவர் தான் முதல்வர்" என்றெல்லாம் மூச்சுக்கு மூச்சு பேசி வந்தால்தான் பிழைக்க முடியும் என்ற நிலை, இக்கும்பலுக்கு. இவர்களுக்கு ரஜினி ஆலோசகராம்; ரஜினிக்கு 'துக்ளக்' சோ ஆலோசகராம். ஆனால், "யாருக்காவது தான் ஆதரவு தரப்போய், அவர்களால் தனது பெயர் கெட்டுவிடக் கூடாதே" என ரஜினி யோசிப்பதாக "சோ" 'அதிகாரப் பூர்வமாக' அறிவிக்கிறார்.

ரஜினியின் செய்தியை - படத்தைப் பிரசுரித்தால் பத்திரிகை விற்பனை கூடும். ரஜினி நடித்த திரைப்படத்தின் துண்டுக் காட்சியைக் காட்டினால் "முகம் தெரியாத நடிகர்"களின் திரைப்படங்கள் கொஞ்ச நாளாவது ஓடும்; ரஜினியுடன் உள்ள உறவை, நட்பை காட்டி உரிமை கொண்டாடினால் கட்சிக்குக் கூட்டமும் ஓட்டும் சேரும் என்பது இன்றைக்கு அனைத்துத் துறையிலும் ஆதிக்கம் செலுத்தும் வர்த்தக சூத்திரம். காங்கிரசு - எம்.ஜி.ஆர். முன்னணிக் கும்பல் மட்டுமல்ல; பிற தமிழகத்து எதிர்க்கட்சிகளும் இந்த வர்த்தக சூத்திரத்தைப் பல்வேறு அளவுகளில் பயன்படுத்துகிறார்கள்.



எம்.ஜி.ஆர். முன்னணி: உதிர்ந்த ரோமங்கள் இணைந்த சவரி முடி

எதிர்க்கட்சிகளுள் வை. கோபால்சாமிக்குத்தான் பெரும் கவலை. ஏனெனில், தமிழகத்தில் வீசிய "வை.கோ. புயலை" "ரஜினி புயல்" வெற்றி கொண்டு விட்டதால்! அழகு திருநாவுக்கரசு, விசுவநாதன், எஸ்.ஆர். இராதா போன்றவர்களைச் சேர்த்துக் கொண்டும், எம்.ஜி.ஆர். புகழ்பாடியும் நடத்திய பிழைப்பிலும் மண் விழுந்து விட்டது. எம்.ஜி.ஆர். விசுவாசிகளை அடித்துச் சென்றது மட்டுமல்லாமல், எம்.ஜி.ஆர். புகழ் பாடமுடியாத படியுமல்லவா செய்து விட்டது, இந்த 'ரஜினி புயல்'? எம்.ஜி.ஆரின் வாரிசாக ரஜினி சித்தரிக்கப்பட்ட பின்பு பாவம் வை.கோ. என்ன செய்வார்? அதனால் தனது தொண்டர்களோடு சேர்ந்து தானும் ஒரு ரஜினி ரசிகனாகி விட்டார். ரஜினி தொலைபேசியில் பேசினார் என்றெல்லாம் புரளி கிளப்பி, ஆதாயம் தேடுமளவிற்குத் தரம் தாழ்ந்து போனார்.

பாமர - கிராம மக்களைக் கவர முடியாமல் அதற்குரிய கவர்ச்சி நாயகர்களின் காலை, கையைப் பிடித்தாவது ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்கிற வெறி, தோல்வி பயம்தான் வை.கோ.வின் இத்தகைய நடவடிக்கைகளுக்குக் காரணம். எம்.ஜி.ஆர். விசுவாசிகளை, பிழைப்புவாதிகளைக் கட்சியில் சேர்த்து, பின் அவர்கள் ஓடிப்போய் அவமானப்பட்ட பின்னும் வை.கோ.விற்குப் புத்தி வராமல், சந்தர்ப்பவாதம் - பிழைப்புவாதம் அவர் கண்ணை மறைக்கிறது. இல்லையெனில் தி.மு.க.விலிருந்து பிரிந்து வந்த வாழப்பாடி இராமமூர்த்தியைத் தமது கூட்டணிக்கு அழைத்திருக்க மாட்டார். சி.பி.எம்.-உடன் கூட்டுச் சேர்ந்ததால் விடுதலைப் புலிகளை ஆதரிப்பதில் முன்வாயைப் பொத்திக் கொண்டவர், வாழப்பாடியுடன் கூட்டுச் சேர்வதால் பின்வாயையும் பொத்திக் கொள்ள மாட்டாரா என்ன?

ம.தி.மு.க. கூட்டணியிலிருக்கும் சி.பி.எம்.-ற்கு வாழப்பாடி என்ன ஜெயலலிதாவே தமது கூட்டணியில் சேர்ந்தாலும் ஆட்சேபனை இருக்காது. எவ்வளவு தான் ஊசிப்போன, அழுகிப்போன இரண்டு பொருளை எடுத்து வைத்தாலும் அதில் நல்லது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தின்கிற ரகம் இவர்கள். பின்னே, மேல்சபைக்குப் போட்டியிட்ட காங்கிரசு உறுப்பினர்களுள் 'வாழப்பாடி காங்கிரசு' உறுப்பினருக்கு சி.பி.எம். ஓட்டுப் போடுமா? "ராவ் காங்கிரசு"தான் பிற்போக்கு; "வாழப்பாடி காங்கிரசு" முற்போக்காம்!

பொறுக்கி அரசியலின் கடைந்தெடுத்த வியாபாரத் தரகன் சுப்பிரமணிய சாமி. இச்சகுனிக்கு எந்தவிதத்திலும் சளைத்தவரல்ல வாழப்பாடி இராமமூர்த்தி. வேரும் விழுதும் இல்லாமல், மக்கள் திரள் நடவடிக்கைகளைக் காட்டிலும் அதிகாரிகள், அறிக்கை அரசியல், குதிரை வியாபாரம், சதித்தனங்களில் நம்பிக்கை வைத்துப் பிழைப்பு நடத்தும் கழிசடைகள். யாருடைய காலிடுக்கிலாவது நின்று கொண்டு உதார் விடுவதும், பிறகு அந்தக் காலையே கடித்துவிட்டு ஓடி வருவதும் வாழப்பாடியின் குணம்! ஜெயலலிதா, கருணாநிதி, ராஜீவ் காந்தி,


படிப்பகம்

www.padippakam.com

சோனியா காந்தி இப்படி யாருக்காவது ''வெத்தலைப் பொட்டி''யாக இருக்க மட்டுமே இவருக்குத் தகுதியுண்டு. ராஜீவ் காந்தி இருந்ததனாலும் இறந்ததனாலும் தான் மூலையில் கிடந்த வாழப்பாடிக்கு மேடையில் இடம் கிடைத்தது. ராஜீவ் சாவு அனுதாப அலையால் எதிர்க்கட்சியான காங்கிரசுக்குத் தலைவராக இருந்த வாழப்பாடி தனது கோஷ்டியைக் கொஞ்சம் பலப்படுத்திக் கொண்டு பிரிந்து வந்ததால்தான் ஒரு 10 எம்.எல்.ஏக்கள் கைவசம் இருக்கிறார்கள்.

ஆனால் இந்த வெத்துவேட்டு போடும் சத்தத்திற்கு ஏற்ப தாளமிட்ட தி.மு.க.வையும், பா.ம.க.வையும் என்னவென்று சொல்வது? ஜெயலலிதாவை எதிர்க்கிற தி.மு.க. முகாமில் இணைவதற்கு எந்தத் தடையுமில்லை; தி.மு.க.விலிருந்து வை.கோ. வெளியேறிய போதே புலிகள் ஆதரவு - பிரிவினைவாத கோஷங்களும் வெளியேறி தி.மு.க. பரிசுத்தமாகிவிட்டது என்று விளக்கமளித்து வாழப்பாடி 7 கட்சி கூட்டணியில் இணைந்தார். ராஜீவ் கொலையை விசாரிக்கும் ஜெயின் கமிஷன் முன் ''அக்னி பிரவேசம்'' செய்து தி.மு.க. தூய்மையானவர்கள் என நிரூபிக்க வேண்டும் என்று வாழப்பாடி பேசியதற்காகக் கூட்டணியிலிருந்து வெளியேற்றினார், கருணாநிதி. வாழப்பாடியைப் பற்றி 'ராஜதந்திர' கருணாநிதிக்கு தெரியாதா என்ன? தெரியும். தெரிந்தும் கூட்டணியில் சேர்ந்தவரை தருணம்பார்த்து ஒரு காரணத்தை முன் வைத்துத் திடீரென வெளியேற்றியதால் தான் கருணாநிதி காங்கிரசுடன் கூட்டு வைப்பதற்காகவே அவ்வாறு செய்கிறார் என்ற யூகம் எழுந்தது. இந்திராவுடன் கூட்டு வைத்துவிட்டு, அதற்கு ஒரு காரணம் கூறியது போல் தற்போது ராவுடன் கூட்டு வைத்துவிட்டும் கருணாநிதி காரணம் கற்பிப்பதில் 'ராஜதந்திரி'தான் என்பது எல்லோருக்கும் தெரியும். இதனால் தான் கருணாநிதி காங்கிரசுடன் கூட்டு வைப்பதில்லை என்பதை உறுதிப்படுத்தும்படி பிரிந்து சென்று பா.ம.க.வும் கோரி நிற்கிறது.

''அண்ணன் எப்பொழுது சாவான்; திண்ணை எப்போது காலியாகும்'' என்பதுபோல் ரஜினி, ஜெயா இருவருடனுமான காங்கிரசு கூட்டு முயற்சி முறிந்து போகாதா, தன்னை நோக்கி அதன் முகம் திரும்பாதா என்ற ஏக்கம் நிச்சயம் கருணாநிதிக்கு உண்டு. ஏனெனில், தி.மு.க. ஒருவேளை ஆட்சிக்கு வந்தால்கூட மத்தியில் உள்ள கட்சியுடனான உறவு மிக அவசியம் என்பதை கருணாநிதி அனுபவப் பூர்வமாக உணர்ந்தவர். முன்பு போல் ஏதோ ஒரு சாக்கு வைத்து கலைத்துவிடக்கூடாதே என்ற பயம் கருணாநிதிக்கு உண்டு. மத்தியில் மீண்டும் காங்கிரசு வருவதற்கான வாய்ப்புகள் கருணாநிதியின் 'ராஜதந்திர' மூளைக்குத் தெரிவதால் கூட்டணி கணக்குப் போடுகிறார். குறைந்தது, ஜெயாவுக்கும் காங்கிரசுக்குமான மோதல் இப்படியே தொடர்ந்தால் கூட தேர்தலுக்குப் பின் தி.மு.க. ஆட்சியைப் பிடித்தால் காங்கிரசுடனான உறவை அப்போது உருவாக்கிக் கொள்ள முடியும் என்ற எதிர்பார்ப்பு கருணாநிதியிடம் உள்ளது.

எந்த கருணாநிதியை வன்னியர்களின் முதல் எதிரி என்று கூறி எதிர்த்தாரோ, அதே கருணாநிதியை ''வருங்கால இலட்சிய முதல்வர்'' என்று தலையில் தூக்கி வைத்து ஆடினார், இராமதாஸ். நந்தவனத்து ஆண்டி போல் குறுகிய நாட்களில் கீழே போட்டு உடைத்துவிட்டுக் கோமாளியாகி நிற்கிறார். மீண்டும் தி.மு.க.வுடன் கூட்டு முயற்சி நடந்தாலும் இடையில் வை.கோ. அழைப்புக்குப் பதிலாக ''ம.தி.மு.க. புலிகள் ஆதரவு நிலைப்பாட்டில் தனது கருத்தை உறுதிப்படுத்த வேண்டும்'' என்று கோரியது, பா.ம.க.

**தமிழகத்தில் ஓட்டுக் கட்சிகள் அமைத்துக் கொண்டிருக்கிற கூட்டணிகளைக் கண்டு மயங்கிவிட வேண்டாம். தேர்தல் வெற்றி தோல்விக்குப் பின்னும் கூட்டணி மாற்றங்களும், குழப்பங்களும் நீடிக்கும்.**

ஏதோ பெரிய கொள்கை பூர்வ கட்சி போல் காட்டிக் கொள்வதில் ஒன்றும் குறைச்சலில்லை! புலிகளை எதிர்க்கும் வாழப்பாடி இராமமூர்த்தியை ஏழு கட்சிக் கூட்டணியில் அனுமதித்ததோடு அவரை வெளியேற்றியதற்காக கருணாநிதியிடம் சண்டை போட்டதே பா.ம.க? எதனால் தெரியுமா? வன்னிய சாதி பாசத்தால்! வாழப்பாடியை மட்டும் கூட்டணியில் அனுமதித்துவிட்டு சுப்பிரமணிய சாமியை கருணாநிதி கூட்டணியில் சேர்த்தால் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று கூறியது என்ன பெரிய கொள்கை முரண்பாட்டினாலா? இப்படியெல்லாம் வன்னிய சாதிப் பற்றை நடைமுறையில் காட்டாவிட்டால் - பா.ம.க.விற்கு வாழ்வே இல்லை என்பதனால்தான்! பேட்டை ரவுடிபோல் குறிப்பிட்ட சில மாவட்டத்தில் வன்னியர் சாதி ஓட்டைத் திரட்டிக் கொண்டு கூட்டணி, பேரத்திற்கு நிற்கும் பா.ம.க.வை தி.மு.க.வையும், ம.தி.மு.க.வும் இல்லையெனில் எப்படி மதிக்கும்?

தேர்தல் கூட்டணி கூத்துகள் இப்படி தமிழகத்தில் அருவருப்பாக நடந்து வந்தாலும் ஒவ்வொரு கட்சியும் தம்மை கொள்கைவாதியாக, மக்கள் தொண்டனாகக் காட்டிக் கொள்ளத் தவறவில்லை. தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் தத்தம் மாநாடு நடத்தி கொள்கை முழக்கமிட்டதோடு 14 மணி நேர ஊர்வலம், 20 மணி நேர ஊர்வலம் - 5004 ஜோடி திருமணம் போன்றவைகளையும் நடத்திக் காட்டியுள்ளனர். முன்பெல்லாம் தேர்தல் நெருங்கினால் ஒவ்வொருவரும் ஒரு விதமான வாக்குறுதி தந்து ஏய்த்து வந்தனர். இது எடுபடாது போனதால் இப்படி ஏதாவது பிரம்மாண்டங்களைச் செய்து காட்டி மக்களைக் கவர முனைவதைத் தவிர இவர்களுக்கு வேறு வழியில்லை.

இருந்தாலும் இவையெல்லாம் - தேர்தல் கூட்டணி, கொள்கை முழக்கம், கவர்ச்சி திட்டம் - நடவடிக்கைகள் - போன்றவை யாவும் ஒரு கண்துடைப்பு தான். எந்தக் கட்சியும் தேர்தல் வெற்றிக்கு இவற்றை நம்புவதில்லை. சாதிபலம், பணபலம், குண்டர்பலம் மூன்றும் தான் தேர்தல் வெற்றியைத் தீர்மானிக்க உதவும் என்பது எல்லா ஓட்டுக் கட்சிகளிடமும் உள்ள தெளிவான உட்கருத்து. ஆனால் ஜெயலலிதா மட்டுமே தேர்தலை 'இப்படி' சந்திப்பார் என எதிர்க்கட்சிகள் பழிபோட்டு தப்பிக்கப் பார்க்கின்றன. ஜெயலலிதா பணம் - குண்டர் பலத்தை இறக்கிவிட்டால், நாங்களும் அவற்றைக் கொண்டு சந்திக்கத் தயார் எனவும் சில கட்சிகள் சவால் விடுகின்றன. இதற்கான தயாரிப்பில்தான் முக்கியமாகக் கவனம் கொடுத்துப் பணிபுரிந்து வருகிறார்கள். போலிக் கம்யூனிஸ்டுகள் உட்பட யாரும் இதற்கு விதிவிலக்கல்ல. மக்களைக் கவரும் நடிகர்களை, முழக்கங்களை, திட்டங்களை முன் வைப்பது என்கிற கவர்ச்சி அரசியலுக்குச் சமமாகக் கள்ளப் பணமும் - குண்டர் படையும் கைவரிசை பதிக்கும் கிரிமினல் அரசியல் நடவடிக்கைகளும் வரும் தேர்தலில் கோலோச்சும். அப்படியும் எந்தக் கட்சியும் - அணியும் பெரும்பான்மை எண்ணிக்கையைப் பெறாவிட்டால் குதிரை வியாபாரம் மூலம் ஆட்சியைப் பிடிக்க போட்டி - அடிதடி நடக்கும்.

கட்சிகளின் வெற்றி - தோல்வியை தீர்மானிப்பது மக்களல்ல; ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் - முடிவெடுக்கும் அதிகாரம் மக்களுக்கில்லை என்பதை வருகிற தேர்தலும், தேர்தலுக்கு முன்னும் பின்னும் நடக்கிற சம்பவங்களும் மக்களுக்கு நிச்சயம் உணர்த்தும் என்பதில் சந்தேகமில்லை.

● மாதவன்



படிப்பகம்

www.padippakam.com

# திடீர் பணக்கார அரசியல் ரவுடிகளுக்கு எதிராக...

திடீர் பணக்கார அரசியல் ரவுடிகளுக்கு எதிரான இயக்கத்தை மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி, விவசாயிகள் விடுதலை முன்னணி ஆகிய அமைப்புகள் இணைந்து நடத்தி வருகின்றன. தற்போது இரண்டாவது சுற்று பிரச்சாரப் பொதுக் கூட்டங்களை தமிழகம் தழுவிய அளவில் நடத்தி வருகின்றன.

மதுரையில் 17.2.96 கோரிப்பாளையத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் கலைவாணன், செந்தில், வேம்பன், காளியப்பன் ஆகியோர் உரையாற்றினார்கள். ராஜன் செல்லப்பா மற்றும் தேங்காய் கடை மாரியப்பன் ஆகியோரை திடீர் பணக்கார அரசியல் ரவுடிகளாக அறிவித்து எதிர்த்து இயக்கம் எடுத்து வருவதை ஆதரித்துப் பேசினர். பகுதி மக்கள் 500 பேர் திரண்டு ஆதரவளித்தனர். ம.க.இ.க.வின் கலை நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. கூட்டத்திற்கு இடையூறாக வந்த வாகனங்களை ஒழுங்குபடுத்த போலீசு முயலாததோடு, ஒலிபெருக்கி வைக்கக்கூடாது; ஒலிப்பெட்டி மட்டுமே வைக்க வேண்டும் என்றும் அடாவடித்தனம் செய்தது. இதைக் கண்டு மக்களே போலீசை திட்டிச் சென்றனர்.

குடந்தையில் 1.2.96 அன்று நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் காளியப்பன், சிவகாமு ஆகியோர் பேசினர். கலைநிகழ்ச்சி முடியும்வரை மக்கள் இருந்து தாராளமாக நிதியளித்தும் ஆதரித்தனர்.

பெரிய வாகைக்குளத்தில் 31.1.96 அன்று பொதுக்கூட்டமும் கலை நிகழ்ச்சியும் பகுதி மக்களின் உற்சாகமான ஆதரவுடன் சிறப்பாக நடந்தது. தோழர்கள் திசைகர்ணன், சிவகாமு, மோகன் ஆகியோர் எளிமையாக உரையாற்றி மக்களிடையே வரவேற்பைப் பெற்றனர்.

உசிலம்பட்டியில் 9.2.96 அன்று நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர்கள் பெரிய கருப்பன், சிவகாமு, நாராயணன் ஆகியோர் உரையாற்றினார். ம.க.இ.க.வின் கலைநிகழ்ச்சி கூடியிருந்த 750 பேருக்கும் மேற்பட்டவர்கள் மத்தியில் வரவேற்பை பெற்றது.

இராசபாளையத்தில் சவகர் திடலில் 8.2.96 அன்று நடந்த பொதுக்கூட்டத்திற்கு கணேசன் தலைமை தாங்கினார். தோழர் வேம்பன் சிறப்புரையாற்றினார். பகுதியில் நடந்த சாராய சாவுக்கு எதிராக தட்டி கட்டிய தோழர்களை தடுத்த போலீசு துணை ஆய்வாளர் ஞானதேசிகனை கண்டித்தும், பிற பகுதி பிரச்சினை, பகுதியிலுள்ள ஆலைத் தொழிலாளர்கள் பிரச்சினை ஆகியவை தொடர்பாகவும் பேசப்பட்டது. பகுதி மக்கள் 700-க்கும் மேற்பட்டவர்கள் கூடி ஆதரித்தனர்.

பென்னாகரம் பகுதி நட்ராம்பாளையத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர்கள் ராஜன், மனோகரன், முனிராஜ், முனியப்பன் ஆகியோர் பேசினார்கள். பகுதியிலுள்ள போலி கம்யூனிஸ்டுகள் (சி.பி.ஐ) பொதுக்கூட்ட ஒலிபெருக்கி அமைப்பாளரையும் பகுதி மக்கள் பலரிடமும் இது ''நக்சலைட்'' கூட்டம் என்று கூறி பயமுறுத்தி கலைக்கப் பார்த்தனர். ''பறையடிக்கிற பசங்க'' என்று சாதிவெறிக் கண்ணோட்டத்தோடு வி.வி.மு.க்கு எதிராகப் பிரச்சாரமும் செய்தும் மக்கள் கூட்டம் சேர விடாது செய்ய முயன்றனர். ஆனால் இப்பொய் பிரச்சாரத்தையும் அவர்களின் பயமுறுத்தலையும் மீறி 500-க்கும் மேற்பட்ட மக்கள் கூடி ஆதரித்து உற்சாகமாக பாராட்டியும் பேசினர்.

திருவாரூர் கீழவீதியில் 19.2.96 அன்று நடந்த பொதுக்கூட்டம் மற்றும் ''அண்ணன் வர்றாரு'' புரட்சிகர கலை நிகழ்ச்சிக்கு சுமார் 1,500 பேர் கலந்து கொண்டு ஆதரித்தனர். இப்பகுதியில் அமைப்பு அறிமுகத்துடன் தொடங்கப்பட்ட இந்நிகழ்ச்சிக்கு கிடைத்த இந்த ஆதரவு குறிப்பிடத்தக்கது. பல்வேறு அரசியல் கட்சிகள் குறிப்பாக சி.பி.ஐ., சி.பி.எம்., கட்சி அணிகளிடையே வி.வி.மு. விற்கு ஆதரவு பெருகியுள்ளது. பகுதி அரசியல் ரவுடிகளாகிய அ.தி.மு.க.வைச் சேர்ந்த நாகேந்திரன், டி.மூர்த்தி, சௌரிராஜன் ஆகியோர் பெயர் குறிப்பிட்டு அம்பலப்படுத்தி பகிரங்கமாக சவால் விடப்பட்டது கண்டு மக்கள் உற்சாகத்துடன் வரவேற்றனர். தோழர்கள் அம்பிகாபதி, காளியப்பன் உரையாற்றினார்கள்.

விருத்தாசலத்தில் ஜனவரி 29-ல் ஆலிச்சிக் குடியிலும், பிப்ரவரி 3-ல் விருத்தாசலம் நகரிலும், பிப்.5-ல் விளாங்காட்டூரிலும், பிப். 14-ல் கருவேப்பிலங்குறிச்சியிலும் பொதுக்கூட்டங்கள் நடந்தன.

ஆலிச்சிகுடியில் பொதுக்கூட்டம் நடப்பதற்கு முன்பாகவே தோழர்களை போலீசார் கைது செய்து கூட்டம் நடத்த முடியாதபடி செய்யத் திட்டமிட்டு வந்து நைச்சியமாக அழைத்தது. ஆனால் தோழர்கள் சாக்கு கூறி அனுப்பி தலைமறைவாகி விட்டு பொதுக்கூட்ட மேடையில் வேண்டுமானால் கைது செய்யட்டும்; எதிர்கொள்வோம் எனத் திட்டமிட்டனர். பொதுக்கூட்ட நேரத்தில் பயபீதியூட்டி மக்களை கலைக்க முயற்சித்தது போலீசு. தோழர்கள் இதை முறியடித்து பெரும்பான்மை மக்கள் ஆதரவோடு கூட்டம் நடத்தினர். தோழர் ஆம்பள்ளி முனிராசு சிறப்புரையாற்றினார்.

விருத்தாசலம் நகரில் நடந்த பொதுக் கூட்டத்திற்கு முன்பாக அரசியல்வாதி - போலீசு - ரவுடி வேடமணிந்த தோழர்கள் நடத்திக் காட்டிய நிகழ்ச்சி மக்களை கவர்ந்தது. தோழர் காளியப்பன் சிறப்புரையாற்றினார். பகுதி அரசியல் ரவுடியான தொகுதி எம்.எல்.ஏ. ஆட்கள், தோழர்களை மிரட்டியதைக் கண்டித்தும் எம்.எல்.ஏ.யின் லாரி போக்குவரத்திற்கு தடை விதிப்போம் என அறிவித்தும் பேசி மக்கள் ஆதரவைப் பெற்றனர். இப்பொதுக் கூட்டத்தில் பகுதி வாழ் மக்கள்



காஞ்சிபுரத்தில் ம.க.இ.க.வின் கலைநிகழ்ச்சி



படிப்பகம்

www.padippakam.com

சுமார் 1000 பேர் கலந்து கொண்டனர்.

விளாங்காட்டூரில் தோழர் முனிராசு சிறப்புரையாற்ற 500 பேர் கடைசிவரை இருந்து ஆதரித்தனர். கருவேப்பிலங்குறிச்சியில் தோழர் செல்வராசு சிறப்புரையாற்றினார். நக்சல்பாரிகள் பற்றி பொய்ப் பிரச்சாரம் செய்யப்பட்டு பகுதி மக்களிடையே பயம் நிலவியது. பு.மா.இ.மு. விற்கு இப்பகுதி அறிமுகமாக இருந்ததால் நக்சல்பாரிகள் யார் என்ற விளக்கம் மக்களிடையே நிலவிய தவறான கருத்துக்களை போக்க உதவியது. கடைசி வரை மக்கள் 1000 பேர் அளவில் கூடி இருந்து ஆதரவளித்தனர்.

காஞ்சிபுரம் நகரில் ம.க.இ.க. சார்பாக திடீர் பணக்கார அரசியல் ரவுடிகளை எதிர்த்து 31-1-96 அன்று பொதுக்கூட்டமும் கலை நிகழ்ச்சியும் நடந்தது. காஞ்சிபுரம் "புதிய கலாச்சாரம்" வாசகர் வட்ட அமைப்பாளர் தோழர். எஸ். நாராயணன் தலைமையேற்க, வேலூர் ம.க.இ.க. தோழர் எஸ். குமார் சிறப்புரையாற்றினார். கூட்டுறவுத் துறை அமைச்சர் கா.பா. பட்டாபிராமன், அவரது பினாமியும் மாவட்ட ஆட்சியருமான ப. ராம் மோகன் ராவ் மற்றும் வாலாசாபாத் அ.இ.அ.தி.மு.க. நகரச் செயலர் பி. கணேசன் ஆகியோரைத் திடீர் பணக்கார ரவுடிகளாக அறிவித்து அம்பலப்படுத்தப்பட்டது. 500-க்கும் மேற்பட்ட மக்கள் திரண்டு ஆதரவளித்தனர்.

செங்கை நகரில் 12.2.96 அன்று நடந்த பொதுக்கூட்டத்திற்கு எஸ். நாராயணன் தலைமை தாங்கினார். தோழர் எஸ். குமார் சிறப்புரையாற்றினார். 750-க்கும் மேற்பட்டோர் நிகழ்ச்சிக்கு வந்திருந்து தாராளமாக நிதியளித்து ஆதரவைத் தெரிவித்தனர்.

## தலையங்கம் தொடர்ச்சி

முக்கும் உள்ள தொடர்பும் அம்பலப்பட்டுள்ளது. பப்லு ஸ்ரீவத்சவ், வீரேந்திரா பந்த் ஆகிய உத்திரப்பிரதேச மாஃபியா கிரிமினல்கள் தாவூத் இப்ராகீமுக்காக சுங்க வரி அதிகாரி அரோரா, டெல்லி தொழிலதிபர் லலித் சுனேஜா இருவரையும் கொலை செய்தார்கள். இதற்கான பேரம் பேசி முடித்து இக்கொலைகளுக்கும் முன்னும் பின்னும் அவர்களுக்குத் தனது ஆசிரமத்திலேயே புகலிடம் கொடுத்தவர் சந்திராசாமி; கொலைகாரர்களான அந்தத் தடா கைதிகளின் வாக்கு மூலமே போதும், சந்திரா சாமியையும் தடாவில் தள்ளுவதற்கு. ஆனால் பாரதீய ஜனதா கும்பலைத் தவிர நரசிம்மராவ், சவாண், தேவிலால், சுப்பிரமணியசாமி, சந்திரசேகர் உட்பட பிற கட்சித் தலைவர்களின் ஆன்மீக குருவாகவும் உள்ளதால் சந்திராசாமி மீது எவ்வித நடவடிக்கையும் இல்லை.

தாவூத் இப்ராகீம் தலைமையிலான சர்வதேச கிரிமினல் மாஃபியா கும்பலுக்கும் சர்வகட்சித் தலைவர்களுக்கும் உள்ள உறவு, ஜெயின் சகோதரர்களின் லஞ்ச ஊழல் ஹவாலா மோசடியில் சர்வ கட்சித் தலைவர்களுக்கும் உள்ள உறவு - இவை இரண்டும் தனித்தனியான விவகாரமே அல்ல. ஹவாலா லஞ்சமாக வந்த பணத்தின் மூலமே, வளைகுடா நாடுகளை மையமாக வைத்து இயங்கும் தாவூத் - டாரிக் - அமீர் ஆகிய சர்வதேச கிரிமினல் மாஃபியா கூட்டத்திடமிருந்து இலண்டன் வழியாக வந்ததுதான். காஷ்மீரி தேசிய இன உரிமைக்காகப் போராடும் அமைப்புகளுக்கு எதிராகப் பாகிஸ்தான் ஏவலாளிகளும் இசுலாமிய மதவெறியர்களும் அமைத்துள்ள குழுக்களுக்கும் பஞ்சாப் சீக்கிய மதவெறி பயங்கரவாதிகளுக்கும் இதே மூலத்தில் இருந்துதான் ஹவாலா பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது. ஆகவே நாட்டிலுள்ள சர்வ கட்சித் தலைவர்கள் எவருக்குமே, குறிப்பாக காங்கிரசு, பாரதீய ஜனதா ஆகிய இரு பெரும் கட்சிகளுக்குமே தேசிய நலன்கள், பயங்கரவாதம் - பிரிவினை வாதம், கிரிமினல் மயமாகும் அரசியல், நேர்மையான தூய்மையான பொது வாழ்க்கை பற்றிப் பேசுவதற்குக் கொஞ்சமும் அருகதை கிடையாது.

இந்த விவகாரங்கள் முழுவதுமாகத் தொகுத்துப் பார்க்கும் எவரும் சி.பி.ஐ. உட்பட போலீசு, அதிகாரவர்க்கம், அரசியல் தலைவர்கள், தொழிலதிபர்கள், கிரிமினல் குற்றக் கும்பல்களுக்கிடையில் மறைந்து கிடக்கும் சங்கிலிப் பிணைப்புகளைக் காண முடியும். முக்கியமாக நாட்டின் உளவுத்துறை நிறுவனங்களை இயக்கும் பிரதமர் நரசிம்மராவுக்கு நன்றாகவே தெரியும். அவர் இவை அனைத்தையும் இவ்வளவு காலமும் கண்டு கொள்ளாமல் இருந்தார் என்பது உண்மையல்ல. மூடி மறைத்துக் குற்றவாளிகளுக்குப் பாதுகாப்பு வழங்கி வந்தார். இப்போது திடீரென்று விழித்துக் கொண்டவர் போல, அதேபொழுதில் குற்றவாளிகளில் ஒருவன் அப்ருவர் ஆகி மன்னிப்புக் கேட்பதைப் போலன்றி, புலனாய்வு விசாரணை நடத்தும் போலீசாகவும் நீதிபதியாகவுமே தன்னைக் காட்டிக் கொள்கிறார். "இத்தனை ஆண்டுகாலப் பொதுவாழ்வில் கறைபடியாத கரங்களைக் கொண்டவன்" என்று கூறி "திருவாளர் பரிசுத்தம்" என்கிற பகல்வேடம் போட்டுக் கொள்கிறார். எல்லாம் எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலைக் குறிவைத்து ஆடும் நாடகம் தான் என்பதை அனைவரும் அறிவோம். அவரது நோக்கம் எதுவாக இருந்தாலும் சரி, அதன் விளைவாக நாட்டின் அரசியல் அமைப்பு முழுவதுமே அழுகி நாறுவது அம்பலமாகியுள்ளது.

## வங்கதேசத் தேர்தல்: சவக்குழிக்குள் தள்ளப்பட்ட நாடாளுமன்ற ஜனநாயகம்

இந்தியாவின் அண்டை நாடான வங்க தேசத்தில், பிரதமர் கலீதா அரசை நீக்கிவிட்டு சர்வ கட்சி இடைக்கால அரசின் மேற்பார்வையில் தேர்தலை நடத்தக் கோரி எதிர்க்கட்சிகள் போராட்டங்களை நடத்தி வந்தன. இதனை ஏற்க மறுத்த கலீதா, எதிர்க் கட்சிகளின் போராட்டங்களை மிருகத்தனமாக ஒடுக்கி, பிப்ரவரி 15-ம் நாளன்று தேர்தலை அறிவித்தார்.

இச்சர்வாதிகாரத் தேர்தலைப் புறக்கணித்த எதிர்க்கட்சிகள் தொடர்ச்சியாகப் போராட்டத்தை மேற்கொண்டன. எதிர்த் தரப்பில் யாரும் போட்டியிடாததால், போட்டியின்றித் தாங்களே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவித்துக் கொண்டு கொட்டமடிக்கிறது, கலீதா கும்பல். சுயேட்சைகள் போட்டியிட்ட ஒரு சில தொகுதிகளிலும் கூட குண்டர்களை வைத்து, தில்லுமுல்லு - மோசடிகளைச் செய்து அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றுள்ளதாக வெட்கமின்றி மார்தட்டிக் கொள்கிறது. இம்மோசடித் தேர்தல் வன்முறை காரணமாக, பல இடங்களில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு 20-க்கும் மேலானோர் பலியாகியுள்ளனர். 500 பேர் படுகாயமடைந்துள்ளனர். ஆயிரக்கணக்கான எதிர்க்கட்சி முன்னணியாளர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே எதிர்க்கட்சிகளின் புறக்கணிப்பால் கடந்த ஓராண்டு காலமாக நாடாளுமன்றமே செயல்படாமல், எந்தக் கொள்கையும் திட்டங்களும் நிறைவேறாமல், நாடாளுமன்ற ஜனநாயகம் முடமாகிப் போய்விட்டது. தற்போதையே ஒரு கட்சி சர்வாதிகார தேர்தல் மூலம் அதற்கு சவப்பெட்டியையும் தயாரித்துவிட்டார் கலீதா. இத்தேர்தலுக்குப் பின்னரும் தொடர்ந்து போராடி வரும் எதிர்க்கட்சிகள், தேர்தலை ரத்து செய்து, கலீதா அரசை நீக்கிவிட்டு இடைக்கால அரசின் தலைமையில் புதிய தேர்தலை நடத்துமாறு அரசுத் தலைவரிடம் கோருகின்றனர். ஆனால் அவரோ, தமக்கு அத்தகைய அதிகாரம் கிடையாது என்று கலீதா கும்பலுக்கு விசுவாசமாக நடந்து கொள்கிறார்.

வங்க தேசத்தில் எர்ஷாத்தின் இராணுவ சர்வாதிகாரத்தைத் தகர்த்த வீராங்கனை என்று ஏற்றிப் போற்றப்பட்ட கலீதா, குறுகிய காலத்திலேயே கடைந்தெடுத்த பாசிச சர்வாதிகாரியாகத் தன்னை நிரூபித்துக் காட்டி விட்டார்.



படிப்பகம்

www.padippakam.com



## காஷ்மீர்: அரசு பயங்கரவாதிகளின் பொய்கள் - சதிகள் - கொலைகள்

காஷ்மீரில் சுயநிர்ணய உரிமை கோரிப் போராடி வரும் அரசியல் கட்சியான ஜமாத் - இ - இஸ்லாமியின் முக்கியப் பிரமுகர்களும் ஆதரவாளர்களும் மர்மமான முறையில் திட்டமிட்டுக் கொல்லப்பட்டு வருகிறார்கள். அவர்களது வீடுகள் திடீரெனத் தீப்பற்றி எரிகின்றன அல்லது குண்டர் படையொன்று திடீரென வந்து வீடுகளை இடித்துத் தள்ளுகின்றன. கடந்த ஆண்டின் இறுதியில் ஜமாத் தலைவர் முகம்மது இஸ்மாயில் பட் அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். அதைத் தொடர்ந்து ஜமாத்தின் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினரான அப்துல் ரசாக்மீர், அனந்த்நாக் மருத்துவமனையின் தலைமை மருத்துவரான டாக்டர் மஹ்முது ஆகியோர் கொல்லப்பட்டனர். கடந்த டிசம்பர் 31-ம் தேதியன்று ஜமாத்தின் மூத்த தலைவரும், அனைத்துக் கட்சி ஹுரியத் முன்னணியின் செயற்குழு உறுப்பினருமான அப்துல்கானிலோன் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு படுகாயமடைந்து அவர் மயிரிழையில் உயிர் பிழைத்தார். ஹைதர்போராவிலுள்ள அவரது வீடும், சோபூரிலுள்ள அவரது சகோதரர் வீடும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

இது தவிர கடந்த ஓராண்டில் மட்டும் 300-க்கும் மேற்பட்ட ஜமாத் கட்சி ஊழியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். குறிப்பாக, கடந்த 4 மாதங்களில் மட்டும் 80-க்கும் மேற்பட்ட ஊழியர்கள் மர்மமான முறையில் கொல்லப்பட்டுள்ளனர்.

ஜமாத் - இ - இஸ்லாமி, காஷ்மீரில் இந்திய அரசு நடத்த முயற்சிக்கும் தேர்தலை மற்ற கட்சிகளோடு சேர்ந்து எதிர்க்கிறது. மேலும் பாக். ஆதரவு பெற்ற ஹிஸ்புல் முஜாஹிதீன் எனும் தீவிரவாத அமைப்பை ஆதரித்து வருகிறது. இத்தனைக் காலமும் தேர்தலில் பங்கேற்று வந்த ஜமாத் கட்சி, இப்போது போராளிகளுடன் சேர்ந்து தேர்தல் புறக்கணிப்பை மேற்கொள்வதால், ஆத்திரமடைந்த இந்திய அரசு பயங்கரவாதிகள் ஜமாத் கட்சியினரை இரகசியமாகக் கொன்று பயபீதியூட்டுவதன் மூலம் தம் பக்கம் இழுக்க முயற்சிக்கின்றனர். இரகசிய சதிகள் - கொலைகளை நடத்தி விட்டு, ஜமாத் கட்சிக்கும் இக்காவானுல் - முஸ்லிமூன் என்ற தீவிரவாதக் குழுவுக்குமிடையே முரண்பாடு உள்ளதால், அவர்கள்தான் இக்கொலைகளைச் செய்வதாக அரசு பயங்கரவாதிகள் கூசாமல் புளுகி வருகின்றனர்.



காஷ்மீரில் அரசு பயங்கரவாதம்; மர்மமான முறையில் சுட்டுக் கொல்லப்பட்ட ஜமாத் தலைவர் முகமது இஸ்மாயில் பட்...

ஆனால், இந்த மோசடி - பித்தலாட்டங்களை காஷ்மீரில் தெரு நாய் கூட நம்பத் தயாராக இல்லை. அரசு பயங்கரவாதிகளின் இரகசியக் கொலைகளை எதிர்த்தும், கூலிப் படையினரை உருவாக்கி, அவர்களைப் போராளிகளாகச் சித்தரித்து, பேச்சு வார்த்தை நாடகமாடி மோசடித் தேர்தலைத் திணிக்க முயற்சிப்பதை எதிர்த்தும் காஷ்மீரிகள் தொடர்ந்து போராடி வருகிறார்கள்.

## மோசடி நிறுவனத்துக்குக் காவடி தூக்கும் போலிகள்

பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களான கோகோ கோலா, பெப்சி கோலா குளிர்பான விளம்பரங்களைத் தமது கட்சி நாளேடுகளில் வெளியிட்டு வந்த 'மார்க்சிஸ்டுகள்', இப்போது மோசடி பைனான்ஸ் கம்பெனிகளின் விளம்பரங்களையும் வெளியிடக் கிளம்பிவிட்டார்கள்.

மே. வங்கத்தில் மோசடி நிதி நிறுவனங்களில் ''சஞ்சாயினி'' என்ற நிறுவனம் மிகவும் பிரபலமானது. முதலீடு செய்த பொது மக்களை ஏய்த்து மோசடிகளில் ஈடுபட்ட குற்றத்திற்காக இந்நிறுவனத்தை ரிசர்வ் வங்கி கருப்புப் பட்டியலில் சேர்த்துள்ளது. அதோடு, பொது மக்களிடமிருந்து இந்நிறுவனம் எந்த வகையிலும் முதலீடுகளைத் திரட்டவும் தடை விதித்துள்ளது. பொது மக்களிடமிருந்து புகார்கள் வந்ததையடுத்து, 'மார்க்சிஸ்டு' அரசே ஒரு சாட்சியாக இருந்து கடந்த ஆண்டில் இம்மோசடி நிறுவனத்தின் மீது வழக்கு தொடுத்துள்ளது.

இந்த 'பிரேடு' நிறுவனத்தின் விளம்பரத்தைத்தான் 'மார்க்சிஸ்ட்' கட்சியின் அதிகாரபூர்வ நாளேடான ''ஜன சக்தி'', கடந்த பிப்ரவரி 16-ம் நாளன்று முழுப்பக்க அளவில் வெளியிட்டுள்ளது. வங்கி சாராத தனியார் நிதி நிறுவனங்களின் விளம்பரங்களை முதலாளித்துவ பத்திரிகைகளே வெளியிடத் தயங்கும்போது, 'கம்யூனிஸ்ட்' பத்திரிகையில் இப்படி விளம்பரம் வெளியாகியுள்ளதைக் கண்டு 'மார்க்சிஸ்டு' கட்சி அணிகளே அதிர்ச்சியடைந்துள்ளனர். ஆனால் ஜனசக்தி ஆசிரியர் குழுவோ, ''யார் விளம்பரத் தொகை கட்டியுள்ளார்களோ, அவர்களது விளம்பரத்தை வெளியிடுவது எமது கடமை. விளம்பரம் செய்யும் நிறுவனம் நேர்மையானதா, இல்லையா என்பதைப் பரிசீலித்துக் கொண்டிருப்பது எங்கள் வேலை இல்லை'' என்று கைதேர்ந்த வியாபாரிகளாக நியாய வாதம் பேசுகின்றனர். ''பூனை வெள்ளையாய் இருந்தாலென்ன, கருப்பாய் இருந்தாலென்ன எலியைப் பிடித்தால் சரி!'' என்று வாதிட்டு சீனாவில் முதலாளித்துவத்தை நிலைநாட்டினார், டெங்-சியாவோ பிங். அவரது திரிபுவாத சித்தாந்தத்தின் உண்மையான வாரிசுகள் தாங்கள் தான் என்பதை 'மார்க்சிஸ்டு'கள் நிரூபித்து வருகிறார்கள்.

## நாக்கு படாமல் எருமையை விழுங்கிய நவீன கொள்ளை

ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு ஸ்கூட்டரில் குதிரையை ஏற்றிச் செல்ல முடியுமா? எருமையை மோட்டார் சைக்கிளில் கொண்டு செல்ல முடியுமா? ஏன் முடியாது? இந்திய ஊழல் ஜனநாயகத்தில் இவை எல்லாம் சர்வ சாதாரணம்! பீகார் மாநிலத்தில் அண்மையில் அம்பலமாகியுள்ள கால்நடை பராமரிப்புத் துறையின் ஊழல் கொள்ளையில்தான் இந்த அதிசயங்கள் நடந்துள்ளன.

பீகார் கால்நடை பராமரிப்புத் துறையில் தீவனங்களையும் கால்நடைகளையும் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு லாரிகளில் கொண்டு சென்றதாகப் பொய்க் கணக்கெழுதிக் கோடி கோடியாய் அதிகாரிகள் கொள்ளையடித்துள்ளனர். லாரிகளின் பதிவெண்களாக அவர்கள் குறிப்பிட்டவை அனைத்தும் ஸ்கூட்டர், மொபெட், மோட்டார் சைக்கிள் ஆகிய இரு சக்கர வாகனங்களின் பதிவெண்களாகும். இப்படி, மொபெட்டில் எருமையை ஏற்றிச் சென்றதாகக் கணக்கு காட்டி கடந்த 20 ஆண்டுகளில் 2000 கோடி ரூபாய்க்கும் மேல் ஏப்பம் விட்டுள்ளனர். தெற்கு பீகாரின் ராஞ்சி, கும்லா, பாலமாவ், சிங்பும் முதலான மாவட்டங்களிலுள்ள பழங்குடி மக்களின் வறுமையைப் போக்க கால்நடை



படிப்பகம்

www.padippakam.com



வளர்ப்புத் திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட தொகையைத்தான் கோட்டு - சூட்டு போட்ட இந்தக் கும்பல் கொள்ளையடித் துள்ளது.

அதிகாரிகள், அரசியல்வாதிகள், உள்ளூர் மாஃபியாக் களுடன் கூட்டுச் சேர்ந்து 100-க்கும் மேற்பட்ட பொய்யான நிறுவனங்களை உருவாக்கி, கால்நடைகளை அரசுக்கு வழங்கியதாகவும், அவற்றையும் தீவனங்களையும் ஏற்றிவர வாகனங்களைப் பயன்படுத்தியதாக வும் கள்ளக் கணக்கெழுதி இக்கொள் ளையை நடத்தியுள்ளனர். 20 அம்சத் திட்ட செயலாக்கத் தலைவரான தயா னந்த் காஸ்யப் என்ற அதிகாரி, இப்ப டிக் கொள்ளையடித்த பணத்தில் நீச்சல் குளம் கொண்ட பளிங்கு மாளிகையே கட்டியுள்ளான். இவனைப் போல் 120-க்கும் மேற்பட்ட மெத்தப் படித்த அதிகார வர்க்கப் பன்றிகள் இக்கூட்டுக் கொள்ளையை நடத்தியுள்ளன.



நேபாளத்தில் உள்ள ஜாபா முகாமில் அல்லற்படும் பூடான் அகதிகள்; நிச்சயமற்ற எதிர்காலம்.

பீகார் முதல்வர் லல்லு பிரசாத் யாதவ், முன்பு கால்நடைப் பராமரிப்புத் துறையில் 3-ம் நிலை ஊழியராகச் செயல்பட்டவர்தான். அவருக்கும் மாஃபியாக்களுக்கும் உள்ள தொடர்பு நாட நிந்ததுதான். எனவே சி.பி.ஐ. விசாரணை தேவை என்று எதிர்க்கட்சிகள் எகிறிக் குதிக்கின்றன. ஆனால் 3 பேர் கொண்ட உயர்மட்டக் குழுவின் விசாரணையே போதும் என்கிறார் முதல்வர் லல்லு. வேடிக்கை என்னவென்றால், விசாரணைக் குழுவிலுள்ள புல்காந்த் சிங், முன்பு கால்நடை பராமரிப்புத் துறையின் செயலராக இருந்தவர். இவர் பதவி யிலிருந்த 1985 முதல் 1990 வரையிலான காலத்தில்தான் பெருமளவு கொள்ளை நடந்துள்ளது. இந்த லட்சணத்தில் கொள்ளைக்காரனே நீதிபதியாக இருந்தால் விசாரணை எப் படி நடக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. போதாக் குறைக்கு கொள்ளையடித்த அதிகாரிகளும் மாஃபியாக்க ளும் மந்திரிகளின் பாதுகாப்பிலேயே பதுங்கியுள்ளதாகச் செய்திகள் வருகின்றன.

ஏற்கனவே கிரிமினல் அரசியலில் கொடிகட்டிப் பறக் கும் பீகார், இப்போது பழங்குடி மக்களுக்குச் சாணியைக் கொடுத்துவிட்டு நாக்கு படாமல் எருமையையே விழுங்கும் நவீன கொள்ளையர்களின் பூமியாக முன்னேறியுள்ளது. சமூக நீதி ஆட்சி நடத்துவதாக மார்தட்டிக் கொள்ளும் ஜனதா தள கழிசடைகளின் யோக்கியதை இதுதான்!

## பூடான் அகதிகள் விவகாரம்: போலிகளின் சந்தர்ப்பவாதம்

இந்தியாவின் அண்டை நாடான பூடானில் நேபாள மொழி பேசும் மக்கள் தமது உரிமைக்காக நடத்தும் போராட் டம், மே.வங்க 'இடதுசாரி' அரசுக்கு புதிய தலைவலியாக மாறி அதன் சந்தர்ப்பவாதம் அம்பலமாகி வருகிறது. மே. வங்கத்தின் வடக்கு எல்லையை ஒட்டி நேபாளம், பூடான் ஆகிய நாடுகள் அமைந்துள்ளன. பூடானில் மன்னராட்சி சர்வாதிகாரம் நீடிக்கிறது. பூடானின் தென்பகுதியிலுள்ள நேபாள மொழி பேசும் மக்களை இரண்டாந்தர குடிமக்க ளாக்கி, பூடான் மொழியையும் பண்பாட்டையும் கட்டாய மாக்கியதைத் தொடர்ந்து, நேபாள மொழி பேசும் மக்கள் தமது உரிமைக்காகப் போராடி வருகின்றனர். அவர்கள் மீது பூடான் அரசுப் படைகள் அடக்குமுறை வெறியாட்டத்தை ஏவியதைத் தொடர்ந்து, அம்மக்கள் நேபாளத்திலும், மே.வங்கத்திலும் அகதிகளாக அல்லற்படுகின்றனர்.

இவர்கள் தமது கோரிக்கையை வலியுறுத்தி கடந்த ஜனவரி மாதத்தில் நேபாளத்திலுள்ள தாமக் நகரிலிருந்து பூடான் தலைநகர் திம்பு நோக்கி நீண்ட பேரணியை நடத்தி னர். நேபாளத்திலிருந்து பூடானுக்கு இந்திய எல்லைக்குள் நுழைந்துதான் செல்ல வேண்டும். அதாவது, மே.வங்கத்தின் டார்ஜிலிங் மாவட்டத்தின் ஊடாகத்தான் செல்ல வேண்டும். இவ்வாறு பேரணியாக வந்த அகதி களை மே.வங்க 'மார்க்சிஸ்டு' அரசு, அத்துமீறி இந்திய எல்லைக்குள் நுழைந் ததாகக் குற்றம் சாட்டி அடக்குமு றையை ஏவியதோடு, இப்பகுதியில் 144 தடையுத்தரவு பிறப்பித்து, முன்ன ணியாளர்களைக் கைது செய்து சிறையி லடைத்துள்ளது.

இதில் வேடிக்கை என்னவென் றால், வங்கத்தை ஆளும் மார்க்சிஸ்டு கள், அண்மையில் சண்டிகரில் நடந்த தமது கட்சியின் 15-வது மாநாட்டில் பூடான் அகதிகளின் நியாயமான கோரிக்கைகளை ஆதரித்து தீர்மானமே நிறைவேற்றியுள்ளனர். இப்போது அடக்குமுறையை ஏவிவிட்டு அம்ப லப்பட்டதும், 'கட்சி நிலைப்பாடு வேறு; மாநில அரசின் நிலைப்பாடு வேறு. மாநில அரசானது மத்திய அரசுக்குக் கட்டுப்பட்டது. அதன் கொள்கை - நெறிமுறைகளை மீறி மாநில அரசு செயல்பட முடியாது' என்று இப்போது சந்தர்ப் பவாத விளக்கம் அளிக்கின்றனர். இப்பித்தலாட்டக் கொள் கையை ஆர்.எஸ். பிரோசாத் முதலான வடக்கு வங்காள 'மார்க்சிஸ்டு' தலைவர்களே வெளிப்படையாகச் சாடியுள்ள னர்.

''எங்களை ஆதரித்த 'மார்க்சிஸ்டு'களை நாங்கள் பெரி தும் நம்பினோம். ஆனால் அவர்கள் தம்மை துரோகிகளாக நிரூபித்துக் கொண்டுள்ளனர். பூடான் மன்னர் ஜிக்மே வாங் சுக்குடன் 'மார்க்சிஸ்டு' முதல்வர் ஜோதிபாசு நெருக்கமான வர். மன்னரது ஆலோசனைப்படிதான் ஜோதிபாசு இப்படி அடக்குமுறையை ஏவுகிறார்'' என்று பூடான் அகதிகள் குமு றுகின்றனர்.

## சிறீகிருஷ்ணா கமிஷன் கலைப்பு: குற்றவாளிகளைத் தப்புவித்து இந்து வெறியர்கள் கொட்டம்

பாபர் மசூதி இடிப்பைத் தொடர்ந்து நாடெங்கும் இந்து வெறியர்கள் கட்டவிழ்த்து விட்ட வன்முறை - வெறியாட் டங்களின் போது, 1992 டிசம்பர் - 1993 ஜனவரி மாதங்க ளில் பம்பாயில் மட்டும் 1500-க்கும் மேற்பட்ட முஸ்லீம்கள் படுகொலை செய்யப்பட்டனர். ஈராயிரத்துக்கும் மேற்பட் டோர் படுகாயமடைந்தனர். இதுதவிர 500-க்கும் மேலா னோர் காணாமல் போயினர். ஏறத்தாழ 1200 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் பாழாகின. இந்துவெறி பாசிஸ்டு கள் நடத்திய இக்காட்டு மிராண்டித் தனமான நரவேட்டை யைப் பற்றி விசாரிக்க அப்போது ஆட்சியிலிருந்த காங்கிரசு அரசு, நீதிபதி சிறீகிருஷ்ணா தலைமையில் ஒரு விசாரணைக் கமிஷனை அமைத்தது.

1993 ஜனவரியில் நிறுவப்பட்ட இக்கமிஷன், 400-க்கும் மேற்பட்ட சாட்சியங்களிடம் நேரடி வாக்கு மூலங்களைப் பெற்றும், இந்து வெறியர்களோடு சேர்ந்து



படிப்பகம்

www.padippakam.com



கொண்டு கொலை வெறியாட்டம் போட்ட 32 போலீசு நிலையங்களில் விசாரணை நடத்தியும், 17 உயர் போலீசு அதிகாரிகள் மீது குற்றம் சாட்டியும் தனது விசாரணையை முடித்துக் கொள்ளவிருந்த நேரத்தில், தற்போது புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள இந்து வெறியர்களின் அரசு, இந்த விசாரணைக் கமிஷனை ரத்து செய்வதாக அறிவித்துள்ளது.

கடந்த ஜனவரி 24-ந் தேதியன்று இக்கமிஷனை ரத்து செய்வதாக அறிவித்த இந்துவெறி முதல்வர் ஜோஷி, ''கடந்த 30 மாத விசாரணையில் இக்கமிஷன் உருப்படியாக எதையும் சாதிக்கவில்லை; இந்துக்களும் முஸ்லீம்களும் இப்போது ஒற்றுமையாக வாழும்போது, கடந்த கால குரோதங்களைக் கிளறி விடுவது தேவையற்றது'' என்று நியாயவாதங்களை அடுக்குகிறார். மகாராஷ்டிராவில் இந்துவெறியர்கள் ஆட்சிக்கு வந்ததும், பம்பாய்க் கலவரம் மட்டுமின்றி, அதன் எதிர்விளைவாக நடந்த குண்டுவெடிப்பு பயங்கரத்தைப் பற்றியும் சேர்த்து விசாரிக்குமாறு இக்கமிஷனிடம் கோரினர். அதன் மூலம் முஸ்லீம் தீவிரவாதிகள் மீது பழிபோட்டுத் தமது குற்றங்களை மறைக்க முயன்றனர். ஆனாலும் இனவெறி பயங்கரவாதியான சிவசேனா தலைவன் பால்தாக்கரேயும், இந்துவெறி பாரதீய ஜனதா குண்டர்களும் அவர்களுக்குத் துணை நின்ற போலீசாருமே பிரதானக் குற்றவாளிகள் என்று விசாரணைக் கமிஷனில் அம்பலமாகி வருவதால், கமிஷனையே இப்போது ரத்து செய்து விட்டு உத்தமர்களாக நாடகமாடக் கிளம்பியுள்ளனர். மேலும், வரப்போகும் நாடாளுமன்றத் தேர்தலின் போது தங்களது இந்துவெறி பாசிச கோர முகத்தை மறைத்துக் கொண்டு ஓட்டுப் பொறுக்க, கமிஷனை ரத்து செய்வதென்பது அவர்களுக்கு மிக அவசிய மாகிவிட்டது.



சிறீகிருஷ்ணா கமிஷன் கலைக்கப்பட்டதை எதிர்த்து பம்பாயில் ஊர்வலம்

விசாரணைக் கமிஷனை ரத்து செய்து, குற்றவாளிகளைத் தப்புவிக்கும் இந்த அயோக்கியத்தனத்தின் மூலம், தாங்கள் வைத்ததுதான் சட்டம் - நீதி என்பதை இந்துவெறிக் காட்டுமிராண்டிகள் நிரூபித்துள்ளனர். விசாரணை நாடகமாடி குற்றவாளிகளைத் தப்புவிப்பதென்பது கேடு கெட்ட இந்திய நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சிமுறையின் மரபாக இருந்து வந்தது. இப்போது விசாரணையையே ரத்து செய்து விட்டு, இந்துவெறி கொலைகாரர்கள் பகிரங்கமாக வலம் வருவதுதான் நியாயம் என்று இந்து வெறி பாசிஸ்டுகள் புதிய மரபினை உருவாக்கியுள்ளனர். இனி அவர்களுக்குப் புரியும் மொழியில் பதிலடி கொடுத்துத் தமது நீதியை நிலைநாட்டுவதைத் தவிர உழைக்கும் மக்களுக்கு வேறு வழியில்லை.

## அந்நிய நிறுவனங்களுக்கு எதிராக விவசாயிகள் போர்க்கோலம்

கர்நாடகத்தின் கடற்கரையோர மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளும் மீனவர்களும் மாநில அரசின் புதிய தொழிற் கொள்கையை எதிர்த்து அண்மைக் காலமாக போர்க் குணத்தோடு போராடி வருகிறார்கள். கடந்த டிசம்பர் 19-ந் தேதி முதல் 25-ம் தேதி வரை மங்களூர் எண்ணெய் சுத்திகரிப்பு - பெட்ரோலிய நிறுவனத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் - பேரணிகளை நடத்திய இம்மக்கள், அந்நிறுவனத்தின் எண்ணெய்க் குழாய்களையும் உடைத்தெறிந்துள்ளனர். தடியடி, துப்பாக்கிச் சூடு நடத்தியும் முன்னணியாளர்கள் 300 பேரைக் கைது செய்தும் போலீசு அடக்குமுறையை ஏவிய போதிலும், இம்மக்களின் போராட்டத்தை அடக்க முடியவில்லை.

நாட்டைப் பாழாக்கும் புதிய பொருளாதாரக் கொள்கையை மத்தியிலுள்ள காங்கிரசு அரசு பின்பற்றி வருவதைத் தொடர்ந்து, அதை எதிர்ப்பதாக நாடகமாடும் கர்நாடக மாநில ஜனதா அரசு இப்போது 7 மிகப் பெரிய அந்நியத் தொழில் நிறுவனங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. அமெரிக்காவின் நேரடி முதலீடு கொண்ட ''கோஜென்டிரிக்ஸ்'' அனல் மின் நிலையம் மட்டுமின்றி, அந்நியக் கூட்டுடன் மிகப்பெரிய தரகு முதலாளித்துவ நிறுவனங்களும் மங்களூரைச் சுற்றியுள்ள பகுதிகளில் தமது ஆலைகளை நிறுவியுள்ளன. இந்நிறுவனங்களின் ஏற்றுமதி - இறக்குமதி - போக்குவரத்து வசதிக்காகவே கொங்கன் ரயில் வழிப் பாதை அமைக்கப்பட்டுள்ளது. மங்களூர் விமானத் தளமும் விரிவாக்கப்பட்டு வருகிறது.

நாகார்ஜூனா எ.ஃ.கு நிறுவனம், மங்களூர் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, கிரேசிம் செயற்கை இழை ஆடை நிறுவனம், கனரா எ.ஃ.குத் தகடு நிறுவனம், பி.ஏ.எஸ்.எ.ஃ.ப்., சாயத் தொழிற்சாலை, உஷா இரும்புத் தாது நிறுவனம், குதிரேமூக் இரும்புத்தாது நிறுவனம் முதலான மிகப் பெரிய ஆலைகளின் விளைவாக இப்பகுதியே படிப்படியாக நஞ்சாகி வருகிறது. ஆலைகளிலிருந்து வெளியேறும் எண்ணெய், கிரீஸ், அமோனியா, பினாயில், சயனைடு, சல்பைடு மற்றும் உலோகத் தாதுக் கழிவுகளின் விளைவாக நேத்ராவதி, குர்புர், சீதாநதி, சுவர்ணநதி ஆகிய ஆறுகள் மாசுபட்டுப் போயுள்ளன. நிலத்தடி நீரும் நஞ்சாகிப் போயுள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக, இந்நச்சுக் கழிவுகளால் மீன்கள் செத்து மிதப்பதால், மீனவர்களின் வாழ்க்கையே இன்று கேள்விக்குறியாகி விட்டது. இது தவிர, இந்நச்சுக் கழிவுகளால் சுற்றுச்சூழல் கடுமையாக பாதிக்கப்பட்டு காடுகளிலுள்ள அரிய விலங்கினங்களும், பூச்சி - பறவையினங்களும் அழிந்து வருவதாகச் சுற்றுச்சூழல் வாதிகள் எச்சரிக்கின்றனர்.

இது ஒருபுறமிருக்க, இந்நிறுவனங்களுக்காக விவசாய நிலங்கள் 2000 ஹெக்டேர் அளவுக்கு விவசாயிகளிடமிருந்து நயவஞ்சகமாகப் பறிக்கப்பட்டு, அவர்களுக்கு உரிய நிவாரண உதவிகள் செய்து தரப்படவில்லை. விளை நிலங்களை அபகரித்துத் தங்களை ஏமாற்றிய அரசுக்கு எதிராக விவசாயிகள் ஏற்கனவே போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

மாநிலத்தைத் தொழில் மயமாக்குவது என்ற பெ... அந்நியக் கொள்ளைக்கும், நச்சுக் கழிவுகளால் மாநி... நஞ்சாக்கவும் கிளம்பியுள்ள ஜனதா தள அரசு, ஏகாதி... சேவையில் காங்கிரசு கயவாளிகளுக்குத் தாங்கள் ... சளைத்தவர்கள் அல்ல என்று நிரூபித்து வருகிற... - மாநில அரசுகளின் நாட்டைச் சுடுகாடாக்கு... கொள்கையை எதிர்த்து ஏற்கனவே அமெரிக்கா... கார்கில்'' விதை நிறுவனம், ''கெண்டகி'' கோழி இ... நிறுவனங்களைத் தாக்கி அழித்த கர்நாடக விவசா... இப்போது ஏகாதிபத்தியக் கூட்டுடன் நிறுவப்ப... நச்சுக் கழிவு ஆலைகளுக்கு எதிராகத் தமது போ...த்தைத் தீவிரப்படுத்தி வருகிறார்கள்.


படிப்பகம்

www.padippakam.com

## பீகாரில் வர்க்கப் போர்:

# சாதிவெறி நிலபிரபுத்துவ பயங்கரவாதத்துக்குப் பதிலடி

பீகார் மாநிலத்தில் இயங்கி வரும் நக்சல்பாரி புரட்சியாளர்களான மாவோயிசக் கம்யூனிச மையத்தினர் (எம்.சி.சி.) கடந்த சனவரி மாதம் 20-ந் தேதியன்று, அம்மாநிலத்தின் கயா மாவட்டத்தைச் சேர்ந்த டிகாரி எனும் சிற்றூரிலுள்ள போலீசு நிலையத்தின் மீது வெற்றிகரமான தாக்குதலொன்றை நடத்தி முடித்தனர். சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக நடந்த இம்மோதலில், அக்கட்சியின் கொரில்லா குழுவைச் சேர்ந்த 200-க்கும் அதிகமான தோழர்கள், டிகாரி போலீசு நிலையத்தைச் சுற்றி வளைத்துத் தாக்கினர். இத்தாக்குதலில் ஐந்து போலீசார் உயிரிழந்ததோடு, அப்போலீசு நிலையம் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. பதினொன்கு கைத் துப்பாக்கிகளையும், 1000 சுற்றுச் சுடுவதற்குத் தேவைப்படும் துப்பாக்கிக் குண்டுகளையும் கைப்பற்றிச் சென்றனர், மாவோயிசக் கம்யூனிச மையத்தினர்.

அவ்வமைப்பினருக்குக் கிடைத்த இச்சிறு வெற்றியே, பீகாரின் பிற்போக்கு ஆளும் வர்க்கத்தின் தலையில் பேரிடியாய் இறங்கியது. அம்மாநில முதல்வர் லல்லு பிரசாத் யாதவ், உயர் போலீசு அதிகாரிகள் என அரசு இயந்திரமே பதறியடித்துக் கொண்டு அன்றிரவே டிகாரி போலீசு நிலையத்திற்கு வந்திறங்கியது. ''மாவோயிசக் கம்யூனிச மையம் கிரிமினல்களின் கூடாரம்'' என வசைபாடிய லல்லு பிரசாத், இத்தாக்குதலில் இறந்து போன ஒவ்வொரு போலீசுக்காரனின் குடும்பத்திற்கும் ஐந்து லட்ச ரூபாய் நிவாரணத் தொகையும், நெருங்கிய உறவினருக்கு அரசு வேலை வாய்ப்பும் அளிக்க உத்தரவிட்டுத் தனது ஆட்சியின் வர்க்க பாசத்தைக் காட்டிக் கொண்டார். முதலாளித்துவ பத்திரிகைகளோ, இறந்து கிடந்த போலீசுக்காரர்களின் படத்தைப் பக்கம் பக்கமாக வெளியிட்டு, எம்.சி.சி.யின் 'பயங்கரவாதத்தை' அரசு ஒடுக்கத் தவறி விட்டதாக ஒப்பாரி வைத்தன.

டிகாரி போலீசு நிலையத்தின் மீது நடத்தப் பெற்ற இத்தாக்குதல் அப்போலீசு நிலையத்தைச் சேர்ந்த போலீசாரைக் கொன்றொழிக்க வேண்டும் எனும் நோக்கத்திற்காக நடத்தப் பெற்றதல்ல. கடந்த 1987-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் பீகார் மாநிலத்தின் ஔரங்கபாத் மாவட்டத்திலுள்ள சேசானி கிராமத்தில் யாதவ் சாதியினைச் சேர்ந்த ஏழு கூலி விவசாயிகளை, மேல்சாதி இராஜபுத்திர நிலப்பிரபுக்கள் கொன்றொழித்தனர். இக்கூலி விவசாயிகள் புரட்சிகர விவசாயிகள் சங்கத்தில் இணைந்து, இராஜபுத்திர நிலப்பிரபுக்களின் ஆதிக்கத்தை எதிர்த்து வந்தது தான் இப்படுகொலைக்குக் காரணம்.

இதற்குப் பதிலடி கொடுக்கும் முகமாக, அதே ஆண்டு ஜூன் மாதம் மாவோயிசக் கம்யூனிச் மையத்தின் விவசாய அமைப்பான புரட்சிகர விவசாய சங்கத்தின் கீழ் அணி திரண்ட கூலி விவசாயிகள், ஔரங்கபாத் மாவட்டத்தின் தலில்சாக் மற்றும் பாகவ்ரா என்ற இரு கிராமங்களைச் சேர்ந்த ஏழு இராஜபுத்திர குடும்பங்களை அழித்தொழித்தனர். இவ்வர்க்கப் போரைக் கிரிமினல் கொலைக் குற்றமாகச் சித்தரித்து, எட்டு விவசாயப் போராளிகளின் மீது வழக்குப் பதிவு செய்தது, பீகார் மாநில அரசு.

வழக்கை விசாரித்த ஔரங்கபாத் மாவட்ட குற்றவியல் நீதிமன்றம், எட்டு தோழர்களுக்கும் தூக்கு தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது. அப்பொழுதில் இருந்தே இத்தீர்ப்பின் மோசடித்தனத்தை அம்பலப்படுத்தி, மாவோயிசக் கம்யூனிச மையத்தினர் பல வழிகளில் போராடி வருகின்றனர். ''கிராமப் புறங்களில் நிலப்பிரபுத்துவக் கொடுங்கோன்மையைக் கட்டவிழ்த்துவிடும் மேல்சாதி ஆதிக்க சக்திகளைத் தண்டிக்க வக்கற்ற இந்நீதி மன்றத்திற்கு, இப்போராளிகளுக்குக் கிரிமினல்களைப் போல தண்டனை கொடுக்க எந்த அதிகாரமும் கிடையாது'' என மக்கள் மத்தியில் அவ்வமைப்பினர் பிரச்சாரம் செய்து வருகின்றனர். சென்ற ஆண்டின் இறுதியில் பீகார் மாநில உயர் நீதி மன்றமும் தூக்கு தண்டனையை உறுதி செய்து தீர்ப்பளித்து விட்டது. இதனைக் கண்டிக்கும் முகமாகத்தான் இத்தாக்குதல் திட்டமிட்டு நடத்தப்பெற்றது.

தாக்குதல் நடந்த பின்பு மாவோயிசக் கம்யூனிச மையத்தினர் வெளியிட்டுள்ள பத்திரிகை செய்தியில், ''போலீசாரைக் கொல்லுவது எங்கள் எண்ணமல்ல; போலீசு நிலையத்தைத் தீக்கிரையாக்குவதும், ஆயுதங்களைக் கைப்பற்றுவதும் தான் எங்களது திட்டம். நாங்கள் இன்னும் பல போலீசாரைக் கொன்றிருக்க முடியும்; ஆனால் நாங்கள் அவ்வாறு செய்யவில்லை. நாங்கள் சில போலீசாரைப் பிடித்து வைத்திருந்து, பின்னர் விடுவித்து விட்டோம். நெருக்கடியான கட்டத்திலும், தற்காப்பிற்காகவும்தான் நாங்கள் போலீசாரைத் தாக்க வேண்டியுள்ளது'' எனக் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த உண்மைகளைப் பூசி மெழுகி விட்டு ஆளும் வர்க்கமும், முதலாளித்துவப் பத்திரிகைகளும் மாவோயிசக் கம்யூனிச மையத்தினரை, 'வன்முறையாளர்கள்' என ஏசி வருகின்றனர். ஆனால், டிகாரிப் பகுதியினைச் சுற்றி வாழ்ந்து

நக்சல்பாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட காட்டுமிராண்டி போலீசின் சடலம்





படிப்பகம்

www.padippakam.com



தாக்குதலின் பின் நக்சல்பாரிகளைக் கொன்றொழிக்க அரசு இயந்திரம் நடத்தும் சதி ஆலோசனை

வரும் பெரும்பாலான உழைக்கும் மக்களோ இத்தாக்குதலை உளப்பூர்வமாக ஆதரித்துள்ளனர். டிகாரியைச் சேர்ந்த ராமதீன், ''வினை விதைத்த போலீசு, வினை அறுக்கிறது'' எனக் கூறுகிறார். கோன்ச் எனும் கிராமத்தைச் சேர்ந்த ராம் வதார், ''நாங்கள் ஒரு போதும் எம்.சி.சி. செயல்வீரர்களைக் கண்டு அஞ்சியதில்லை; கிரிமினல்கள் போலீசுக்காரனாகவோ, அரசியல்வாதியாகவோ, இல்லை சாதாரண நபராகவோ எந்தப் போர்வையில் இருந்தாலும், எம்.சி.சி. அக்கிரிமினல்களைக் கொன்றொழித்து நன்மை புரிகிறது'' என வெளிப்படையாகப் பத்திரிகைகளுக்குப் பேட்டியளித்துள்ளார்.

பீகாரில் கீழ்த்தரமான வன்முறைகளில் ஈடுபட்டு வருவது யார் என்ற உண்மையை அடுத்த நாளே பீகார் போலீசின் கொலைவெறியாட்டம் அம்பலப்படுத்திவிட்டது. டிகாரி போலீசு நிலையத் தாக்குதலுக்குப் பழிவாங்கும் முகமாக அவ்வூருக்கு அருகாமையிலுள்ள மதன்பிகா எனுமிடத்தில் மாவோயிசக் கம்யூனிச மையத்தைச் சேர்ந்த ஏழு தோழர்களை மிகக் கொடூரமாக கொன்றொழித்தது பீகார் போலீசு. ''மறைந்திருந்த தீவிரவாதிகளைப் பிடிக்கச் சென்ற இடத்தில் நடந்த துப்பாக்கி மோதலில் அவர்கள் இறந்து போனதாக''ப் போலீசாரால் கூறப்பட்டது. ஆனால் இம்'மோதலை' யாரும் நம்பத் தயாராக இல்லை. ''அந்தத் தோழர்கள் போலீசாரிடம் சரணடைந்த பின்னர், மிக அருகாமையில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டதாக'' எம்.சி.சி. அறிவித்துள்ளது.

முதலாளித்துவ சனநாயகவாதிகளால் ஏற்றி போற்றப்படும் ''சட்டத்தின் ஆட்சி'' என்ற ஏமாற்றுவித்தையெல்லாம் பீகார் மாநிலத்தைப் பொருத்தவரை மலம் துடைக்கும் காகிதத்துக்குச் சமமான ஒன்று. நிலப்பிரபுத்துவ கொடுங்கோன்மையும் மேல்சாதி ஆதிக்க வெறியும் தான் இம்மாநிலமெங்கும் கோலோச்சுகிறது. இராஜபுத்திரர்கள், பூமிகார், குர்மி, யாதவ் போன்ற மேல்சாதிகளைச் சேர்ந்த நிலப்பிரபுக்களும், சாதி ஆதிக்க சக்திகளும்தான் கிராமப்புறங்களைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு அதிகாரம் செலுத்தி வருகின்றனர். இவர்களே தேர்தல்களில் நின்று வெற்றி பெற்று, எம்.எல்.ஏ., எம்.பி., மந்திரி போன்ற அரசுப் பதவிகளைக் கைப்பற்றிக் கொள்கின்றனர். அரசு அதிகாரிகள், போலீசு, ஓட்டுக்கட்சித் தலைமை அனைவரும் இவர்களின் கைப்பாவைகள்தான்.

இம்மத்தியக் கால அடக்குமுறையையும் சுரண்டலையும் எதிர்த்துப் புரட்சிகர இயக்கங்களிலும், விவசாய சங்கங்களிலும் இணைந்து போராடும் தாழ்த்தப்பட்டவர்களையும் கூலி - ஏழை விவசாயிகளையும் ஒடுக்குவதற்காகவே, சேனைகள் என்ற பெயரில் சாதிக்கொரு கொலைப் படைகளை உருவாக்கியுள்ளனர் இந்நிலப்பிரபுக்கள்; கொள்ளைக் கூட்டக் கும்பல்களை ஏவிவிட்டும் தாக்குதல் தொடுக்கின்றனர். மேல்சாதி காங்கிரசு ஆட்சி மாறி 'பிற்படுத்தப்பட்ட' சாதியைச் சேர்ந்த லல்லு பிரசாத் ஆட்சியிலும் இந்நிலை மாறவில்லை. மேலும், நக்சல்பாரி புரட்சியாளர்கள் செல்வாக்குடன் இருக்கும் கயா, ஜெகன்னாபாத், ஔரங்கபாத், சத்ரா, பலாமு மாவட்டங்களில் போலீசுப் படைகளைக் குவித்து, அரசு பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டு வருகிறார், லல்லுபிரசாத். கடந்த ஒரே ஆண்டில் மட்டும் மாவோயிசக் கம்யூனிச மையத்தைச் சேர்ந்த 134 புரட்சியாளர்கள் போலீசாரால் நரவேட்டையாடப்பட்டனர்.

எனவே ஆயுதம் தாங்கிப் படுகொலைகள் புரிந்துவரும் இந்த எதிர்ப் புரட்சிக் கும்பலை எதிர்த்து வரும் நக்சல் பாரி புரட்சியாளர்கள், தங்களைத் தற்காத்துக் கொள்ளவும், நிலப்பிரபுக்களின் நிலங்களையும் விளைச்சலையும் கைப்பற்றி மறுவிநியோகம் செய்யவும், தங்களின் செல்வாக்குள்ள பகுதிகளில் வரி வசூல் செய்யவும், தங்களின் ஆணைகளை - தீர்ப்புகளை அமுல்படுத்தவும் துப்பாக்கி ஏந்துவதும், தற்காப்புக் குழுக்களையும், கொரில்லா படைகளையும் கட்டிப் போராடுவது அவசியமாகிறது. நக்சல் பாரி புரட்சியாளர்களின் கீழ் அணி திரண்டுள்ள பீகாரின் கூலி - ஏழை விவசாயிகள் நிலத்திற்காகவும், சனநாயக உரிமைகளுக்காகவும்தான் ஆயுதம் ஏந்தியுள்ளார்கள். ஆளும் வர்க்கத்தின் ஊதுகுழல் பிரச்சாரகர்கள் கூறுவதற்கு மாறாக, அற்பச் சலுகைகளைக் காட்டி அவர்களை மதி மயக்கி விட முடியாது. இவ்வர்க்கப் போர் ஒரு புதிய விடியலுக்கானது. எனவே, இது நிச்சயமாக ஒரு மாலை நேர் விருந்தினைப் போல இருக்க முடியாது.

● ரஹீம்



படிப்பகம்

www.padippakam.com

# புதிய பொருளாதாரக் கொள்கை படுதோல்வி

**1**

**தா**ராளமயமாக்குதல்,
தனியார்மயமாக்குதல்,
உலகமயமாக்குதல்,
கட்டுமான மறு சீரமைப்பு

— ஆகிய ''புதிய பொருளாதாரக் கொள்கை'', இந்த நாட்டில் அதிகாரபூர்வமாக அமுலுக்கு வந்து ஐந்தாண்டுகள் முடியப்போகின்றன. உண்மையில் இக் கொள்கை இந்த நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டு பத்தாண்டுகளுக்கு மேலாகிறது. இதற்காக உலகின் பொருளாதார வல்லரசு நாடுகளுடன் பேரங்கள் நடத்தி ஆரம்பநிலை பூர்வாங்க ஏற்பாடுகள் செய்வது இந்திரா ஆட்சியின் இறுதிக் காலத்திலேயே முடிந்துவிட்டது.

இந்திராவின் தகப்பன் நேரு காலத்தில் அமுலில் இருந்த பொருளாதாரத்தை ஜனநாயக சோசலிசம் என்று அப்போது பீற்றிக் கொண்டார்கள். முதலாளித்துவமும் அல்லாத, கம்யூனிசமும் அல்லாத, இரண்டின் நல்ல அம்சங்களையும் உள்ளடக்கியது; நேரு பெருமானின் நிகரற்ற கண்டுபிடிப்பு என்றும் பீற்றிக் கொண்டார்கள். தனியார் துறையும், பொதுத் துறையும் போட்டி போட்டு ஆரோக்கியமான பொருளாதார முன்னேற்றத்துக்கு வழி வகுக்கும் கலப்புப் பொருளாதாரம் என்றும் அதைப் பள்ளிப் பிள்ளைகளுக்குப் பாடமாகச் சொன்னார்கள். உண்மையில் அது தனியார் தரகு முதலாளிகளும், அரசுத்துறை, அதிகாரவர்க்கத் தரகு முதலாளிகளும் ஒருவருக்கொருவர் துணை நின்று நாட்டையும், மக்களையும் ஜனநாயக சோசலிசம் என்ற பெயரால் ஏய்த்து வந்த ஏகபோகப் பொருளாதாரம்.

நேருவின் இறுதிக் காலத்திலேயே அது நெருக்கடிக்குள் வீழ்ந்தது. அவரது வாரிசு இந்திரா ஆட்சியின் ஆரம்ப காலங்களில் நெருக்கடி முற்றி, எங்கும் புரட்சிப் போராட்டங்கள் வெடித்தன; காங்கிரசின் ஏகபோக ஆட்சி ஆட்டங் கண்டபோது மக்கள் ஆதரவைப் பெறுவதற்காக அரசுடமை அதிகார வர்க்கத் தரகு முதலாளித்துவத்துக்கு முன்னுரிமை கொடுத்தார்; அதை ''சோசலிசப் பொருளாதாரம்'' என்று போலிக் கம்யூனிஸ்டுகளின் துணையோடு பித்தலாட்டம் செய்தார். அதுவும் பொய்த்து அம்பலப்பட்டுப் போன பிறகு அறிமுகமானதுதான் இந்தப் ''புதிய பொருளாதாரக் கொள்கை''. நேரு பெற்றெடுத்த கள்ளக் குழந்தையைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்த அவரது வாரிசே அதற்கு சவக் குழிதோண்டினார். அதன் இறுதிச் சடங்கை முடிப்பதற்குள், தனக்குத்தானே முடிவு கட்டிக் கொண்டார்.

நேரு குடும்பத்தின் இன்னொரு வாரிசாக வந்தார் ராஜீவ்; தனது மூதாதையாரின் பொருளாதாரக் கொள்கைக்கு சவ அடக்கம் செய்தார்; இருபத்தோராம் நூற்றாண்டுக்கு இந்த நாட்டை அழைத்துச் செல்வேன் என்று ''பயாஸ்கோப்'' காட்டினார். ''புதிய கல்விக் கொள்கை'', ''புதிய மருந்துக் கொள்கை'' என்று சரஞ் சரமாக அவிழ்த்து விட்டார். நியூயார்க், இலண்டன், பாரீஸ், பான் என்று ஏகாதிபத்தியத் தலைநகரங்களில் இந்தியக் கலைவிழாக்கள் நடத்தினார்; இந்தியப் பெரு நகரங்களுக்கு மேலைநாட்டு ஐந்து நட்சத்திர - ஆபாச காமக் களிவெறியாட்டக் கலாச்சாரத்தை இறக்குமதி செய்தார். தேசங்கடந்த, பன்னாட்டுத் தொழில் கழகங்களுடன் ஓடி ஓடி ஒப்பந்தங்கள் போட்டு நடைபாவாடை விரித்து வரவேற்றார். எனக்கு எந்த ''இசமும்'' (கம்யூனிசம், சோசலிசம், கேப்பிடலிசம், காந்தியிசம் என்று எந்த சித்தாந்தமும்) கிடையாது; எல்லாவற்றையும் நவீனமயப் படுத்துவதும் பொருளாதார தொழில் முன்னேற்றமும் தான் தனது ஒரே குறிக்கோள் என்றார்.

போதாதா இது! இதற்காகவே அவரை உச்சி மீது வைத்துப் பாராட்டினார்கள், முதலாளியச் சிந்தனையாளர்களும் நேரு பரம்பரையின் பரம எதிரியான கோயங்கா உட்பட பத்திரிகைகளும். உலகம் முழுவதும் உள்ள ஏகாதிபத்திய முதலாளிகளின் நம்பிக்கைக்கு உரியவரானார். தரகுத் தொகை மட்டும் கோடி கோடியாக வாரி வீசினார்கள். ''திருவாளர் பரிசுத்தம்'' என்று சொல்லிக் கொண்டவர் லஞ்ச ஊழல் சாக்கடையில் மூழ்கித் திளைப்பவர்தான் என்பது அடுத்தடுத்து அம்பலமானது. இதைப் பயன்படுத்தி ராஜீவ் காந்தி ஆட்சியை வீழ்த்திய வி.பி.சிங் தான் அவரது ஆட்சியில் நிதி அமைச்சராக இருந்து தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல் கொள்கையை விசுவாசத்தோடு துவக்கி வைத்தவர். தேர்தல் ஆதாயத்துக்காக போலிக் கம்யூனிஸ்டுகளுடன் சேர்ந்து கொண்டு அக்கொள்கை எதிர்ப்பு நாடகமாடினாலும், வி.பி.சிங் ஆட்சிக்கு வந்தபோதும், அதன் பின்னரும் சதித்தனமான முறையில் ஆதரித்தே வருகிறார். வி.பி.சிங் ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு அதிகாரத்திலிருந்த சந்திரசேகர் தலைமையிலான கிரிமினல் கும்பல், ஒரு குறுகிய காலமே ஆண்டாலும் நாட்டு நலன்களை கள்ளச் சந்தையில் விற்பதில் இறங்கினர். இந்தக் கும்பலின் இன்னொரு தலைவர்தான் இப்போதைய பிரதமர் நரசிம்மராவ். இவரது தலைமையிலான அரசு சிறுபான்மையாக இருந்தாலும் அதைக் கவிழ்க்க எதிர்க் கட்சிகளோ, எதிர்க் குழுக்களோ தயாரில்லை. இதனாலும், சோவியத் ஒன்றியம் மற்றும் பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட ஆட்சிக் கவிழ்ப்புகளும் பனிப்போர் முடிவில் வெற்றி பெற்ற அமெரிக்க மேல்நிலை வல்லரசின் ஊக்கத்தாலும், அதன் சர்வதேச நிதி நிறுவனம் மற்றும் உலக வங்கியின் ஆணையினாலும் துணிச்சலோடு நாட்டு விரோத, மக்கள் விரோதப் புதிய பொருளாதாரக் கொள்கையை அமுல்படுத்தி வருகிறார். உண்மையில் இது உழைக்கும் மக்கள் மீதான பொருளாதாரத் தாக்குதல்; ஆகவே இதற்கு இவர்களிடம் இருந்து கடும் அதிருப்தி கிளம்பி அடுத்தடுத்த இடைத்தேர்தல்களில் காங்கிரசு மண்ணைக் கவ்வியது.

''புதிய பொருளாதாரக் கொள்கையின் பலன்கள் மக்களைச் சென்றடையச் சிறிது காலமாகலாம். இருந்தபோதும் நாட்டு நலன் கருதி தொடர்ந்து அமுலாக்கப்படும்; தேர்தல் முடிவுகளுக்காக அதைக் கைவிட மாட்டோம்; எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அதை யாரும் தடுத்து நிறுத்த முடியாது'' என்று திடலடியாகச் சாதிக்கிறது நரசிம்மராவ் - மன்மோகன் சிங் கும்பல். ஆனால் தேர்தலைக் குறி வைத்து ''நகர்ப்புற வறுமை ஒழிப்புத் திட்டம்'', ''நாடு முழுவதும் இலவச சத்துணவுத் திட்டம்'' போன்ற கவர்ச்சித் திட்டங்களால் ஒரு தற்காலிக ஆதாயம் அடையவும், பின்னர் மீண்டும் முழுவேகத்துடன் தாக்குதல் தொடுக்கவும் எத்தணிக்கிறது.

இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கை என்பது, அதையொட்டிச் செய்யப்படும் கட்டுமான மறுசீரமைப்பும், நமது நாட்டுக்கும் மக்களுக்கும் எதிரானது; நமது நாட்டை ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கும் அவற்றின் தேசங் கடந்த, பன்னாட்டு தொழில் கழகங்களுக்கும் மறு அடகு வைப்பது; இது நமது நாட்டை



படிப்பகம்

www.padippakam.com

மறுகாலனியாக்குவதில் கொண்டு போய் முடிக்கும் என்று ஆரம்பம் முதலே பல்வேறு சான்றுகளுடன் ஏற்கனவே நாம் நிரூபித்து வந்துள்ளோம். இதே காரணங்களைக் கூறி புதிய பொருளாதாரக் கொள்கைகளுக்கு பெயரளவிலான எதிர்ப்புக் காட்டி வந்த எதிர்க்கட்சிகள், குறிப்பாக தேசிய முன்னணி - இடதுசாரிக் கட்சிகள் இடையிலேயே துரோகமிழைத்து ஆளும் கும்பலுடன் கைகோர்த்துக் கொண்டு, ''உலகமயமாவதும், தாராளமயமாவதும், நவீனமயமாவதும்'' தவிர்க்க முடியாத தேவை என்று சேர்ந்திசை பாடி வருகின்றன.

இப்போது புதிய பொருளாதாரக் கொள்கை சம்பந்தமான விஷயங்கள் அனைத்தையும் வேறு ஒரு கோணத்தில் பரிசீலப்போம். நமது கோணத்திலிருந்து வைக்கப்படும் எதிர்வாதங்களை ஒருபுறம் நிறுத்தி வைத்துக் கொண்டு, ஆளும் வர்க்கங்களும் அவர்களின் ஊது குழல்களும் சித்தரிப்பது போல, அல்லது அவர்கள் விரும்புவது போல புதிய பொருளாதாரக் கொள்கையும் அதற்கான கட்டுமான மறுசீரமைப்பும் வெற்றி பெற்று வருகிறதா? அவை படுதோல்வி அடைந்துவிடும் என்பதற்கு உலகின் பல நாடுகளும் சான்றுகளாக விளங்குகின்றன. அதைப் போலவே இந்தியப் பொருளாதாரம் உட்பட சகல துறைகளிலும் நாடு திவாலாகிவிடும் என்பதற்கு இப்போதே பல சான்றுகள் காணக்கிடக்கின்றன.

தேர்தல் ஆதாயம் கருதி காங்கிரசு கட்சி மட்டுமல்ல, மிக மோசமான வலது கோடிக் கட்சியான பாரதீய ஜனதா கூட கவர்ச்சித் திட்டங்களை ஏற்று முன் வைக்கும்படி நேர்ந்துள்ளது; இது ஒன்றே புதிய பொருளாதாரக் கொள்கையும், அதற்கான கட்டுமான மறுசீரமைப்பும் தோல்வி அடைவதற்கான நிரூபணமாகி விட்டது! '' இல்லை, இது தற்காலிக ஏற்பாடுதான்; நீண்ட காலப்போக்கில் இது தேவையற்றதாகி விடும்'' என்றும், ''நாங்கள் மனித முகத்துடன் கூடிய சந்தைப் பொருளாதாரத்தைக் கொண்டு வருகிறோம்; இந்திய நிலைமைகளுக்கு அது அவசியமாக உள்ளது'' என்றும், மற்றபடி புதிய பொருளாதார நடவடிக்கைகள் சரியானவைதான், வெற்றி பெற்று வருகிறது'' என்று அதன் வழக்குரைஞர்கள் வாதாடுகின்றனர்.

இது உண்மையா? ''புதிய பொருளாதார நடவடிக்கைகளால், அந்நிய மூலதனம் இங்கே வந்து குவியும்; புதிய தொழில் நுட்பங்களும் நவீனமயமான உற்பத்தியும் பெருகும்; இதைத் தொடர்ந்து சர்வதேசத் தரத்திற்குச் சந்தையில் பொருட்களும் குவியும்; பலகோடிப் பேருக்குப் புதிய வேலை வாய்ப்புகள் பெருகும்'' என்றார்கள். இப்படித்தான் நடந்து வருகிறதா? அந்நிய மூலதன வருகை அதிகரித்துவிட்டது ஓரளவு உண்மைதான். ஆனால் அது அவர்கள் வாதிடுவதைப் போன்று நாட்டின் முன்னேற்றத்துக்கும் தொழில் பெருக்கத்துக்குமானதாக இல்லை. கடந்த காலத்திலும், தற்போதும் அந்நிய முதலீடுகளின் போக்கு எப்படியிருந்தது என்பதைப் பரிசீலித்தாலே இந்த உண்மை விளங்கிவிடும்.




1947 அதிகார மாற்றத்தில் இருந்து 1977 அவசரநிலை ஆட்சி வரையிலான முப்பது ஆண்டுகளில், அந்நிய முதலீடுகளும், தேசங்கடந்த தொழில்கழகங்களும் அனுமதிக்கப்படுவதில் ஒருவிதக் கட்டுப்பாடுகளும், நிதானமும் கடைப்பிடிக்கப்பட்டது. காரணம், இவற்றுக்கு இணையாக, மாற்றாக சோவியத் ஒன்றியம் மற்றும் அதன் தொங்குசதை நாடுகளைச் சார்ந்து அதிகாரவர்க்க முதலாளியமும் ஊக்குவிக்கப்பட்டது. அதனால் குறிப்பிட்ட சில துறைகளிலும், குறிப்பிட்ட சில அளவு பங்குகள் பெறவும் அனுமதிக்கப்பட்டன. தொழில்மயமாக்குவதற்கான மூலதனம், தொழில் நுட்பம் பெறுவதற்கும், அந்நியச் செலாவணியைப் பெருக்குவதற்கும் ஏற்றதாக அந்நிய முதலீட்டுக் கொள்கைகள் அறிவிக்கப்பட்டன. முதல் பத்தாண்டுகளில் அந்நிய முதலீடு மதிப்பு இரண்டு மடங்கு உயர்ந்தது. குறிப்பாக, போக்குவரத்து இயந்திரங்கள், கனரக இயந்திரங்கள், இரசாயனம் மற்றும் அதன் துணைப் பொருட்களின் உற்பத்தித் துறையில் அந்நிய முதலீடு மூன்று மடங்கு உயர்ந்தது. நாட்டின் பொருளுற்பத்தித் துறையில் அந்நிய முதலீட்டின் பங்கு 28 சதவீதத்தில் இருந்து 38 சதவீதமாக உயர்ந்தது. அதுவே பெட்ரோலிய எண்ணெய்த் துறையில் ஏழு மடங்கு உயர்ந்தது - அத்துறையில் அந்நிய முதலீட்டின் பங்கு 7 சதவீதத்தில் இருந்து 26 சதவீதமானது. ஃபயர்ஸ்டோன், டன்லப், பேட்டா ஆகிய அந்நிய ஏகபோகங்கள் அப்போது பிரபலமாகின. பன்னாட்டு தொழில் கழகமான யுனிலிவரின் இந்தியக் கிளையாகிய இந்துஸ்தான் லிவர் உணவுப் பொருட்கள், குளியலறைப் பொருட்கள் உற்பத்தியில் நாட்டிலேயே மிகப் பெரிய நிறுவனமானது.

1965 வாக்கில்நாடு அந்நியச் செலாவணி பற்றாக் குறையின் பிடியில் சிக்கிய போது, அந்நியத் தனியார் முதலீட்டிற்கான கட்டுபாடுகள் சிலவற்றை அரசு தளர்த்தியது. இதனால் அப்போது நாட்டில் இருந்த 112 மிகப்பெரிய தொழில்கழகங்களில் 62 அந்நியர்களுக்குச் சொந்தமாகவோ, அவர்களின் கட்டுப்பாட்டிலோ இருக்கும்படியானது. மொத்தமிருந்த பெரிய நிறுவனங்களின் மொத்த சொத்து மதிப்பில் இந்த 62 நிறுவனங்கள் மட்டும் 54 சதவீதம் பெற்றிருந்தன. மேலும் பல இந்திய நிறுவனங்கள், அந்நிய ஏகபோகங்களுடன் தொழில்கூட்டுகளும் வைத்திருந்தன. இயந்திரங்கள் மற்றும் உதிரிப் பாகங்களுக்கு அவற்றைச் சார்ந்திருந்தன. 1970-களின் துவக்கத்தில், சிபா, கிளாக்சோ, ஃபைசர், ஹோசெஸ்ட், பேயர் போன்ற தேசங்கடந்த தொழில் கழகங்கள் இந்தியாவின் மருந்துப் பொருளுற்பத்தியில் 80 சதவீதத்தைக் கட்டுப்படுத்தின.

இந்திரா பிரதமரானதும் 1966-இல் ரூபாயின் மதிப்பைக் குறைத்த பிறகு நேரடி அந்நிய முதலீடு அதிகரித்தது. இந்தியத் தொழிற்துறையில் தேசங்கடந்த தொழில் கழகங்களின் பிடி இறுகியது. அதன்பிறகு ஐந்தாண்டுகளில் ஏகபோகக் கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும் அந்நியச் செலாவணி தடுப்புச் சட்டம் கொண்டு வந்து இந்திரா முற்போக்கு நாடகமாடினாலும், அந்நிய நிறுவனங்கள் அதையே


படிப்பகம்

தமது மறு முதலீடு மற்றும் தொழில் விரிவாக்கத்திற்குப் பயன்படுத்திக் கொண்டன. அதேசமயம், இலாபப் பங்கீடு, இலாபம், தொழில் நுட்பக் கட்டணம், முத்திரைக் கட்டணம் என்கிற பெயரில் இந்தியாவில் அந்நியக் கொள்ளை நீடித்தது. கூட்டுப்பங்கு நிறுவனங்களில் 40 சதவீதமே அந்நியப் பங்குகள் வைத்துக் கொள்ளலாம் என்கிற தடையை ஐ.பி.எம்., கோகோ - கோலா போன்ற சில நிறுவனங்கள் மட்டுமே ஏற்க மறுத்தன; மற்றவை அதையே பயன்படுத்திக் கொண்டு புதிய பங்குகளை அவிழ்த்து விட்டனவே தவிர, அந்நியப் பங்குகளை இந்தியப் பங்குச் சந்தையில் விற்று விடவில்லை. இதனால் இந்தியமயமாக்கி விட்டதாகக் காட்டித் தடையின்றி வசதிகளை அனுபவித்தன. அந்நியக் கம்பெனிகள் என்கிற பெயரில் எந்தவொரு காரணத்தாலும் பறிமுதல் செய்யப்படும் அபாயத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு இது பயன்பட்டது. போபால் விஷவாயுப் படுகொலையை நடத்தி விட்டு தண்டனையோ, பறிமுதல் போன்ற நடவடிக்கையோ இல்லாமல் அமெரிக்க யூனியன் கார்பைடு கம்பெனி இப்படிதான் தப்பித்துக் கொண்டது. அரபு - இஸ்ரேலியப் போர்களுக்குப் பிறகு பெட்ரோலிய விலை பன்மடங்கு உயர்ந்தபோது, அத்துறையை அரசுடமையாக்கும் நடவடிக்கையில் இந்திரா அரசு ஈடுபட்டதை கால்டெக்ஸ், ஷெல் போன்ற கம்பெனிகள் உண்மையில் வரவேற்றன. பெட்ரோலிய விலையேற்றத்தின் விளைவாய்க் கடுமையான அந்நியச் செலாவணி நெருக்கடி ஏற்பட்டது. இதைச் சமாளிக்க சர்வதேச நிதி நிறுவனம் (ஐ.எம்.எஃப்.) மற்றும் உலக வங்கியிடமிருந்து நிபந்தனைகளுடன் கூடிய 5000 கோடிக்கு மேலாக இந்திரா அரசு கடன் பெற்றது. அதன்படி அரசுத்துறைத் தொழில்களுக்கான அரசு நிதி ஆதரவுகளை நிறுத்துவது; தேசங் கடந்த தொழில் கழகங்களின் முதலீட்டுக்கான தொழில் துறைகளை விரிவாக்கிக் கொள்ள அமைதிப்பது; அவை அரசுத் துறை நிறுவனங்களில் சம அளவு பங்குகளுடன் கூட்டு வைத்துக் கொள்ள அனுமதிப்பது; உற்பத்திப் பொருட்களையும் தொழில் நுட்பங்களையும் தடையின்றி இறக்குமதி செய்து கொள்ள அனுமதிப்பது; ஏற்றுமதி மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த தொழில்களில் நூறு சதவீத அளவுக்கு அந்நியப் பங்குகளை அனுமதிப்பது; ஏற்றுமதிக்கான ஆலைகளை எங்கும் நிறுவிக் கொள்ள அனுமதிப்பது; இவற்றோடு கூட்டுப் பங்குக் கம்பெனிகளின் வருமான வரிக் குறைப்பு செய்வது ஆகிய நடவடிக்கைகளை 1980-களில் முதற்பாதியில் இந்திரா அரசே மேற்கொண்டது.

இதனால் 1981-க்கும் 1985-க்கும் இடையில் அந்நியக் கூட்டுகள் மூன்று மடங்கும், அந்நிய முதலீடு பதினோரு மடங்கும் உயர்ந்தன. சுட்சுகி, டூபாண்ட், மிட்சுபிஷி, குட் இயர், சீக்கோ போன்ற பல் தேசங்கடந்த தொழிற்கழகங்கள் இந்தியாவுக்குள் நுழைந்தன. அடுத்த ஐந்தாண்டுகளில் வெஸ்டிங்ஹவுஸ், ஜிராக்ஸ், யுனைடெட் டெக்னாலஜிஸ், ஹனிவெல் போன்ற அமெரிக்க ஏகபோகங்களுடன் இந்திய நிறுவனங்கள் கூட்டுகள் அமைத்தன. ஆனால், அப்போதும் அந்நியச் செலாவணி நெருக்கடி தீர்ந்தபாடில்லை. முக்கியமாக, இந்தியா இதற்கு முன்பு வாங்கிய கடனுக்கே வட்டியும் தவணைத்தொகையும் கட்டுவதற்கே மீண்டும் கடன் வாங்கும்படி நிர்பந்திக்கப்பட்டது. சந்திரசேகர் தலைமையிலான அரசு 10 டன் தங்கத்தை இலண்டன் வங்கியில் அடகு வைத்துக் கடன் பெறும் படி நிர்பந்திக்கப்பட்டது.

> **புதிய தொழிற்சாலைகளை நிறுவி, வேலைவாய்ப்புகளைப் பெருக்கும் வகையில் மூலதனமிடுவதற்கு மாறாக, பங்குச் சந்தை சூதாட்டம், இயற்கை வளங்களைச் சூறையாடுவது, இலாப உத்திரவாதம் கிடைத்த தொழில்களிலும் - ஆடம்பர நுகர்பொருள் விற்பனையிலும் அந்நிய ஏகபோகங்கள் முதலீடு செய்வதே நடக்கிறது.**

இப்படிப்பட்ட நெருக்கடியான நிலையில் ஆட்சிக்கு வந்த நரசிம்மராவ் - மன்மோகன் சிங் கும்பல், உலக வங்கி மற்றும் ஐ.எம்.எஃபிடம் கையேந்தியது; அவை விதித்த கட்டுமான மறுசீரமைப்பு மற்றும் புதிய பொருளாதாரக் கொள்கை என்னும் நிபந்தனையை ஏற்று அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதற்காகப் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

- 34 தொழில்களில் 51 சதவீதம் வரை அந்நிய முதலீடுகளைக் கொண்ட தொழில்களைத் தாமே தொடங்கிக் கொள்ள அனுமதி.

- மேற்படி அனுமதிக்குக் கீழ்வராத விவகாரங்களில் விண்ணப்பங்களை உடனுக்குடன் பரிசீலித்து அனுமதி வழங்குவதற்கான அதிகாரமிக்க அந்நிய முதலீடு மேம்பாடு வாரியம் அமைப்பு.

- ஏற்கனவே உள்ள கம்பெனிகளில் அந்நியப் பங்கை 51 சதவீத அளவு உயர்த்திக் கொள்ள அனுமதி. இதனால் பல கம்பெனிகளின் கட்டுப்பாடு தேசங்கடந்த தொழிற் கழகங்களின் பிடியில் சிக்கியது.

- மேலும் சில துறைகளில் 100 சதவீத பங்கு வைத்துக் கொள்ள அந்நிய ஏகபோகங்கள் அனுமதி பெற்றன.

- அந்நிய முதலீடுகளுக்குக் காப்பு உத்திரவாதம் அளிக்கும் ''பலதரப்பு முதலீட்டு காப்புறுதி முகமை ஒப்பந்தம்'' ஒன்றில் இந்தியா கைச்சாத்திட்டது.

- அந்நியச் செலாவணி நெறிமுறைச் சட்டம் தளர்த்தப்பட்டது; இதன் விளைவாய், 40 சதவீத அந்நியப் பங்குள்ள கம்பெனிகளும் இந்தியக் கம்பெனிகளுக்கு ஈடாகக் கருதப்படும்; நடத்தப்படும் என்றானது.

- அந்நியக் கம்பெனிகள் தமது பெயர் முத்திரைகளை இந்தியாவில் பயன்படுத்திக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

- இந்திய மூலதனச் சந்தையில் முதலீடு செய்வதற்கு அந்நிய முதலீட்டு நிறுவனங்கள் அனுமதிக்கப்பட்டன. இதனால் அந்நிய நிதி நிறுவனங்கள் பங்குகளைத் தொகுப்பாக வாங்கவும் விற்கவும் உரிமை பெற்றன.

- அந்நிய நாணயங்களுடன் ரூபாய்க்கான நேரடி பரிமாற்ற விகிதம் இணைக்கப்பட்டது. இதனால் இறக்குமதிகள் மீதான செலாவணி பரிமாற்றத் தடைகளும் நீக்கப்பட்டன.

- அந்நிய முதலீட்டார்களை ஊக்குவிப்பதற்கு வசதியாக மூலதனப் பொருட்களின் இறக்குமதி தீர்வை பெருமளவு குறைக்கப்பட்டது.

- மின் உற்பத்தித்துறையில் விரைவான அந்நிய முதலீடு கோரி அரசு உத்திரவாதமளித்து எட்டுத் திட்டங்கள் ஒப்பந்தமாகின.

இந்த நடவடிக்கைகளினால் 1991-க்குப் பிறகு அந்நிய முதலீடு பன்மடங்கு உயர்ந்தது உண்மைதான். ஆனால் அது ஆளும் வர்க்கங்கள் பீற்றிக் கொள்ளும் தன்மையிலான முதலீடாக இல்லை என்பதுதான் முக்கியமானது. 1991-க்கு முந்தைய அந்நிய நேரடி முதலீடுகள் எல்லாம் தொழில் நுட்பப் பரிமாற்றமாகவோ, ஆலைகளை நிறுவுவதற்கானதாகவோ இருந்தன; பங்குச் சந்தை முதலீடாக இல்லை. இந்திய மூலதனச் சந்தையில் இயங்குவதற்கு அந்நிய நிறுவன முதலீட்டாளர்கள் புதிய பொருளாதாரக் கொள்கையின்படி தாராளமாகவே அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனால் இந்திய மூலதனச் சந்தையில் அந்நிய பங்கு நிர்வாகக் கம்பெனிகள், பங்குகளை வாங்கவும் விற்கவுமான முதலீடு பன்மடங்கு பெருகியது. 1991-92 ஆம் ஆண்டில்


www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

மட்டும் 80 இலட்சம் டாலராக இருந்த அமெரிக்காவிலிருந்து வந்த பங்கு நிர்வாக முதலீடு, 1993-94 ம் ஆண்டில் 350 கோடி டாலராக உயர்ந்தது; அடுத்த ஆண்டும் அதே அளவு உயர்ந்தது. அதாவது இன்றைய மதிப்பில் 13300 கோடி ரூபாய் அளவுக்கு இருந்தது.

ஆக்கபூர்வமான ஆலை உற்பத்தியில் முதலீடு செய்வதற்கு மாறாக பங்குச் சந்தைச் சூதாட்டத்தில் முதலீடு செய்வது, (ஒரு குறுகிய காலத்திலேயே) ''நோகாமல்'' பகற்கொள்ளை அடிப்பதுதான். இது விரைவிலேயே நாட்டின் பொருளாதாரத்தைத் திவாலாக்கிவிடும் எனச் சமீபத்திய மெக்சிகோ நாட்டு நெருக்கடி நிருபித்திருக்கிறது; ஆகவே அந்நிய மூலதன வருகை குவிந்திருந்தாலும் அது ஆக்கபூர்வமான பொருளுற்பத்திச் சொத்துக்களையோ, புதிய வேலை வாய்ப்புகளையோ பெருக்கி விடவில்லை. இந்தப் போக்கே போதும், ராவ் - மன்மோகன் சிங் கும்பலின் புதிய பொருளாதார நடவடிக்கைகள் படுதோல்வி காண்டதற்கான சான்று காட்டுவதற்கு!

1991-94 கால கட்டத்தில் அந்நிய நேரடி முதலீடு மூலமாக 5778 அந்நியக் கூட்டு யோசனைகள் அரசு அனுமதிக்காக வைக்கப்பட்டன. இதில் அந்நியச் சமபங்குள்ளவை 2806 திட்டங்கள்; அவை 7560 லட்சம் டாலர்கள் மதிப்புடையவை. இவற்றில் பலவும் அரசு அனுமதி பெற்றாலும் சிலவே அமுலுக்கு வந்தன. 1994-ல் வந்த மொத்த அந்நிய முதலீடுகளில் 20 சதவீதமே நேரடி ஆலை முதலீடுகளாக இருந்தன.

இதுவரை அரசுத் துறைக்கு மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்த மின்சாரம், தொலைத்தொடர்பு, ரயில்வேதுறை, நிலக்கரி மற்றும் எண்ணெய் ஆகிய எரிசக்தித் துறைகள் தேசங்கடந்த தொழில் கழகங்களுக்குத் திறந்து விடப்படுகின்றன. அவற்றில் முதலீடு செய்யப்படுகின்றன. இவை அதீதமான இலாபம் ஈட்டக் கூடியவை. மேலும், எரிசக்தித்துறையில் டாலர் - ரூபாய்க்கு இடையிலான மதிப்பு ஊசலாட்டமானதாக இருந்தபோதும் அந்நிய முதலீட்டாளர்களுக்கு டாலரிலேயே 16 சதவீத இலாபத் தொகையை இந்திய அரசு உத்திரவாதப் படுத்தியுள்ளது. மேலும் இலாபம் கிடைக்கும் வகையில் பல சலுகைகள் - வசதிகள் செய்து தரப்படுகிறது.

இதேபோலத்தான், இந்திய அரசுக்குச் சொந்தமான எண்ணெய் - இயற்கை எரிவாயு கமிசனால் கண்டுபிடிக்கப்பட்ட எண்ணெய் வயல்கள் ராயல் டச்சு மற்றும் ஷெல் போன்ற அந்நிய ஏகபோகங்களுக்குத் தாரை வார்க்கப்பட்டுள்ளன. இவை நூறு சதவீதத்திற்கு மேல் இலாபம் தரக்கூடியவை. எண்ணெய் வளக் கண்டுபிடிப்புக்குச் சிறிதும் முதலீடு செய்யாமல் கொள்ளை இலாபம் பெறும் அந்நியக் கம்பெனிகள் இந்திய அரசு நிறுவனம் விட வழங்கும் கச்சா எண்ணெயை விட இரண்டு மடங்கு அதிகமான இறக்குமதி விலைக்கு இங்கேயே விற்கும்.

அடுத்து, பலருக்கும் வேலை வாய்ப்பை ஏற்படுத்தும் தொழில்களைத் துவங்குவதைவிட கோக், பெப்சி, அதன் கிளை நிறுவனமான கெண்டகி ஃப்ரைடு சிக்கன் போன்ற கொள்ளை இலாபம் தரக் கூடிய ஆடம்பர நுகர்பொருட்கள் விற்பனைத் தொழில்களிலேயே தேசங்கடந்த தொழிற் கழகங்கள் அக்கறை காட்டுகின்றன. இந்தியக் கடல் வளங்களை அள்ளிச் செல்லும், நூறு சதவீத இலாபம் தரும் ஆழ்கடல் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றன.

> "புதிய பொருளாதார நடவடிக்கைகளால், அந்நிய மூலதனம் இங்கே வந்து குவியும்; புதிய தொழில் நுட்பங்களும் நவீனமயமான உற்பத்தியும் பெருகும்; இதைத் தொடர்ந்து சர்வதேசத் தரத்திற்குச் சந்தையில் பொருட்களும் குவியும்; பல கோடிப் பேருக்குப் புதிய வேலை வாய்ப்புகள் பெருகும்" என்றார்கள். இப்படித்தான் நடந்து வருகிறதா?

ஆக, புதிய தொழிற்சாலைகளை நிறுவி, வேலைவாய்ப்புகளைப் பெருக்கும் வகையில் மூலதனமிடுவதற்கு மாறாக, பங்குச் சந்தை சூதாட்டம், இயற்கை வளங்களைச் சூறையாடுவது, இலாப உத்திரவாதம் கிடைத்த தொழில்களிலும் - ஆடம்பர நுகர்பொருள் விற்பனையிலும் முதலீடு செய்வதே நடக்கிறது. புதிய தொழில் நுட்பங்களைக் கொண்டு வருவதற்குப் பதில் ஏற்கனவே உள்ள இந்தியத் தொழில்களுக்கே தமது சர்வதேச பெயர் - முத்திரைகளைப் பதித்து வியாபாரம் செய்வதற்குக் கட்டணம் வசூலிப்பது போன்ற மோசடிகளிலும் அந்நிய ஏகபோகங்கள் இறங்கியுள்ளன. எனவே, தாராளமயமாக்கப்பட்ட புதிய பொருளாதார நடவடிக்கைகளும் கட்டுமான மறுசீரமைப்பும் அந்நிய முதலீடுகளை ஈர்த்து நாட்டைத் தொழில்மயமாக்கிவிடும் என்கிற எதிர்பார்ப்பு படுதோல்வி கண்டுள்ளது என்பதுதான் உண்மை. (தொடரும்)

6-ம் பக்கத் தொடர்ச்சி

தாக, கிரிமினல் மயமானதாக மாறிவிட்டது. தென் கொரியா, ஜப்பான் வரிசையில் இந்தியாவும் ஊழல் மோசடிகளில் புதையுண்டு ஹவாலா குடியரசாகிவிட்டது.

உண்மையில், ஹவாலா பணம் பெற்றவர்கள் எல்லாம் கார் - ஜீப், பங்களா, பண்ணை வீடு, மனைவி - மகன் பெயரில் தொழில் என்று திடீர் பணக்கார அரசியல் ரவுடிகளாக வளர்ந்து விட்டனர். சி.பி.ஐ.யின் ஆரம்ப விசாரணையிலேயே இந்த உண்மைகள் அம்பலமாகிவிட்டன. அதையும் மூடிமறைத்துவிட்டுக் கட்சியின் தேர்தல் செலவுக்குத்தான் வாங்கினேன் என்று இவர்கள் கூசாமல் புளுகுகின்றனர். கட்சிக்காக வாங்கினோம் என்றாலும் அதுவும் கூட்டுக் கொள்ளைதானே? அது மட்டும் எப்படி நியாயமாகும்? மேலும், பதவி விலகி உத்தம நாடகமாடுவது என்றால் ஹவாலா மோசடி அம்பலமான 1991-லேயே அவர்கள் செய்திருக்க வேண்டும். இப்போது தேர்தல் நெருங்கும் நேரத்தில் பதவி விலகுவது ஒன்றும் பெரிய தியாகமல்ல!

ஏற்கனவே ஊழல் சாக்கடையில் மூழ்கி முத்தெடுக்கும் ஓட்டுக் கட்சிகள் அதை ஒரு பெரிய குற்றமாகக் கருதுவதுமில்லை. ''தேனெடுத்தவன் புறங்கையை நக்காமல் இருப்பானா?'' என்று ஊழலை நியாயப்படுத்திவரும் பாரம்பரியத்தில் வந்தவர்கள்தான், இன்று அது ஹவாலா, இரகசிய உலகப் பேர்வழிகள், கிரிமினல் - மாஃபியாக்கள் என விரிவடைந்து புதிய பரிணாமத்தை எட்டி விட்டது. நாட்டுக்கே மிகப் பெரிய துரோகத்தை இழைத்துவிட்டுக் கொஞ்சமும் கூச்சமின்றி இந்தக் கழிசடைகள் வலம் வந்து கொண்டிருக்கிறார்கள். தங்களது அயோக்கியத்தனத்தைக் கண்டு அவர்கள் கொஞ்சமும் வெட்கமோ - அவமானமோ அடையவுமில்லை. ஹவாலா கும்பலிடம் பணம் பெற்றவர்களைச் சமூகப் புறக்கணிப்பு செய்து, அவர்களது சொத்துக்களைப் பறிமுதல் செய்து தண்டிப்போம் என்று எந்த ஓட்டுக் கட்சியும் கூறவுமில்லை.

ஊழல்!... ஊழல்! ஊழலை ஒழிக்க முடியாது! திறமை இருந்தால் நீயும் சுருட்டிக் கொள்! அம்பலமானால் உத்தமனாக வேடங்கட்டி ஆடு! 'நீ மட்டும் யோக்கியமா?' என்று எதிர்தரப்பைச் சாடு! - என்பதுதான் ஓட்டுக் கட்சிகளிடையே நிலவும் எழுதப்படாத ஒப்பந்தம். இன்றைய அரசியலமைப்பையே தகர்க்காமல் ஊழலை ஒழிக்க முடியாது என்று மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்ட பிறகும், ஓட்டுக் கட்சிகள் அனைத்தும் ஊழலை ஒழிப்போம் என்று சாக்கடையில் உட்கார்ந்து கொண்டு சாம்பிராணி புகை எழுப்புகின்றன. ● மனோகரன்


படிப்பகம்

www.padippakam.com

# வடிவுரிமை வலைக்குள் உலக உயிரின உரிமைகள்

## ஏகாதிபத்தியங்கள் திணிக்கும் புதுவகையான உயிரியல் காலனியாதிக்கம் இது

நமது நாட்டில் இயற்கை தந்த கொடையாகக் கருதி வளர்க்கப்படும் வேம்பு மற்றும் கீழாநெல்லியில் இருந்து இருவிதமான மருந்துப் பொருட்களைப் பிரித்தெடுத்து, அமெரிக்காவில் வடிவுரிமை பெற்றுள்ளன இரு ஏகபோக நிறுவனங்கள். இதன் விளைவுகள் பாரதூரமானவை. காலங்காலமாக வேம்பு வித்துக்களைப் பூச்சிக் கொல்லி மருந்தாகப் பயன்படுத்தி வரும் நமது நாட்டு விவசாயிகளின் உரிமை வருங்காலங்களில் பறிபோகும். இதுபோல் கீழாநெல்லியை மஞ்சட்காமாலை நோய்க்கு மருந்தாகப் பயன்படுத்தும் உரிமையும் நமக்கு இனி இருக்காது. படிப்படியாக வடிவுரிமை விதிகளை விரிவாக்கி, ''வேம்பும் கீழாநெல்லியும் தங்களுக்குச் சொந்தம்'' எனக் கூறி விடும் அந்த நிறுவனங்கள். பின்னர், பல்துலக்க வேப்பங்குச்சிகூட நமக்குக் கிடைக்காது.

### அமெரிக்காவின் சதிகள் திருட்டுத்தனங்கள்

''இயற்கையின் கொடையாகக் கிடைத்திருக்கும் தாவரங்களும் விலங்குகளும் வடிவுரிமைச் சட்டத்தின் கீழ் வராது'' எனக் குறிப்பிடுகிறது உலக வர்த்தக நிறுவனம். ஆனால், ஏகபோக நிறுவனங்களோ, இயற்கையாக வளரும் இரண்டு நெருக்கமான தாவர இனங்களைச் செயற்கை முறையில் இணையச் செய்தும், தாவர இனங்களின் மரபியல் கூறுகளில் மாற்றத்தை ஏற்படுத்தியும் 'புதிய' இனங்களை உருவாக்கிவிட்டதாகக் கூறி, வடிவுரிமைகள் பெற்று விடுகின்றன. அமெரிக்காவில் மட்டும் 1985-ம் ஆண்டு தொடங்கி, 385 தாவர இனங்களுக்கு வடிவுரிமைகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் அமெரிக்காவைப் பிறப்பிடமாகக் கொண்டிராதவை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

''வேம்பு, கீழாநெல்லி தாவர இனங்களின் மருத்துவக் குணாம்சங்களை ஏற்கனவே அறிந்திருக்கிறோம்'' எனக் கூறி, நாம் வடிவுரிமை பெறவோ அல்லது வடிவுரிமை பெற்றவர்களிடமிருந்து உரிமைத்தொகை கோரவோ முடியாது. காரணம் அமெரிக்க வடிவுரிமைச் சட்டப்படி, ''ஒரு கண்டுபிடிப்பு புதுமையானதாகவும், இதற்குமுன் யாரும் அறிந்திராத ஒன்றாகவும் இருக்கும் பட்சத்தில்'' அதற்கு வடிவுரிமை வழங்கப்படும். மரபு வழிப்பட்ட அறிவினை இச்சட்டம் அங்கீகரிப்பதில்லை.

மேலும் ஒரு கண்டுபிடிப்பின் மீது வடிவுரிமை பெறும்பொழுதே, அக்கண்டுபிடிப்பிற்கு அடிப்படையாக இருந்த பொருளின் மீது தங்களின் ஏகபோக உரிமையை நிலைநாட்டி விடுகின்றன, பன்னாட்டு மற்றும் தேசங்கடந்த தொழிற்கழகங்கள். உதாரணமாக, நமது நாட்டைச் சேர்ந்த தேசிய இரசாயனப் பரிசோதனைக் கூடத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள், ''மெடலோசென்சஸ்'' என்ற கிரியா ஊக்கியினைக் கொண்டு, புதுவகைக் கண்டுபிடிப்புகளை உருவாக்கினார்கள். இக்கண்டுபிடிப்பிற்கு அவர்களால் வடிவுரிமை பெற முடியவில்லை. காரணம் அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனங்களான எக்ஸானும் ஹொசெஸ்ட்டும் ''மெடலோ சென்சஸை''க் கொண்டு 400 விதமான (சாத்தியமான) கண்டுபிடிப்புகளின் மீதான வடிவுரிமைகளை ஏற்கனவே பெற்றுவிட்டன.

### மனிதனும் சோதனைச் சாலை மிருகம்தான்

''தனி மனிதனுக்கு அவனது உடல் உறுப்புகள் மீது எவ்விதமான உரிமையும் கிடையாது'' எனுமளவுக்கு அமெரிக்க வடிவுரிமைச் சட்டங்கள் பலப்படுத்தப் பட்டு வருகின்றன. புற்று நோயால் அவதிப்பட்டு வந்த ஜான்மூர் எனும் அமெரிக்கருக்குச் சிகிச்சையளித்த மருத்துவர்கள் அவரது மண்ணீரலை அறுவை சிகிச்சையின் மூலம் அகற்றினர். பின்னர் அவரது மண்ணீரலை ஆராய்ந்து, புற்றுநோய் எதிர்ப்பு கொண்ட மனித செல் சங்கிலித் தொடரை உருவாக்கி, அதனை ''சான்டோஸ்'' எனும் பன்னாட்டு மருந்து தொழிற்கழகத்திற்கு விற்றனர், அம்மருத்துவர்கள். பின்னர் இதற்கு ''மோ செல் சங்கிலித் தொடர்'' எனப் பெயரிட்டு, வடிவுரிமை பெற்றது அந்நிறுவனம். இவ்வடிவுரிமைக்கு எதிராக வழக்குத் தொடுத்தார், ஜான்மூர்.

கலிபோர்னியா மாநில உச்சநீதி மன்றம் இவ்வழக்கை விசாரித்து, ''தனியொரு மனிதனின் உடலில் இருந்து அகற்றப்படும் உறுப்புகள், மரபினக் கூறுகள் போன்றவை ஆராய்ச்சியாளருக்கோ அல்லது அந்த ஆராய்ச்சியை நடத்த உதவும் நிறுவனத்திற்கோதான் சொந்தமாகும்'' எனத் தீர்ப்பளித்தது. அமெரிக்க நாட்டு உச்சநீதி மன்றமோ, ''பலரும் இதனை முன்னுதாரணமாகக் கொண்டு வழக்குத் தொடுப்பார்கள்'' எனக் கூறி இவ்வழக்கை மறுவிசாரணைக்கு எடுத்துக் கொள்ள மறுத்துவிட்டது. பாபுவா நியூ கினியா, பனமா நாடுகளின் பழங்குடி மக்களின் இரத்தத்தில் இருந்து கடத்தி வரப்பட்டிருக்கும் மனித செல் சங்கிலித் தொடர்களும், 2000 மனித மூளை மரபியற் கூறுகளும் அமெரிக்காவின் வடிவுரிமைப் பட்டியலில் உள்ளதை இங்கு நாம் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

### சர்வதேச அரங்கம் முடமானது

1992-ம் ஆண்டில் பிரேசில் நாட்டுத்தலைநகரில் நடந்த சர்வதேச சுற்றுச்சூழல் பாதுகாப்பு மாநாட்டில், ''மரபியற் கூறு மாற்றம் பெற்ற உயிரிகள்'' (Genetically Modified Organism) என்பதற்குப் பதிலாக ''வழக்கிலுள்ள திரிந்த உயிரிகள்'' (Living Modified Organism) என்ற பதத்தைத்தான் பயன்படுத்த வேண்டும் என அமெரிக்கா நிர்ப்பந்தித்தது. இதன் மூலம், ''மரபியல் கூறு விஞ்ஞான அடிப்படையில் உருவாக்கப்பட்ட உயிரினங்களுக்கும், இயற்கையாகப் பரிணமித்த உயிரினங்களுக்கும் எவ்வித வேறுபாடும் கிடையாது; இதனால் இச்செயற்கை உயிரிகளை வர்த்தக ரீதியாகப் பயன்படுத்துவதற்கு எவ்விதச் சுற்றுச் சூழல் பாதுகாப்பு விதிகளையும் உருவாக்கத் தேவை



உயிரியல் கூறுகளை மாற்றி அமெரிக்கா உரிமை கொண்டாடும் தக்காளிகள்



படிப்பகம்

www.padippakam.com

யில்லை'' என்று அமெரிக்கா இரட்டை வேடம் போட்டுச் சாதிக்க முனைந்தது.

இம்மாநாட்டு முடிவின்படி, மரபியல் கூறு மாற்றம் பெற்ற உயிரிகளைப் பயன்படுத்துவதற்குப் பாதுகாப்பு விதிகளை உருவாக்க அமைக்கப்பட்ட ''நிபுணர் குழு 4'' -ல் பதினைந்து உறுப்பினர்கள் இருந்தனர். இக்குழு தயாரித்த ஆவணத்தை பதினான்கு உறுப்பினர்கள் ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர். ஆனால், அமெரிக்காவைச் சேர்ந்த பதினைந்தாவது உறுப்பினர், ஆவணத்தை அங்கீகரிக்க மறுத்து விட்டார்.

அமெரிக்கா, கனடா, ஜெர்மனி, ஜப்பான், ஆஸ்திரேலியா நாடுகளைச் சேர்ந்த உயிரியல் தொழில் நுட்ப பன்னாட்டு மற்றும் தேசங்கடந்த தொழிற் கழகங்கள், ''சர்வதேச உயிரியல் தொழிற் கழகங்களின் கூட்டமைப்பை'' ஏற்படுத்திக் கொண்டுள்ளன. ''பாதுகாப்பு விதிகளை உருவாக்குவது விஞ்ஞானத்தை வளர்க்க உதவாது; அரசியலுக்குத் தான் பயன்படும்'' என இக்கூட்டமைப்பு ஏழை நாடுகளின் முயற்சிகள் மீது பழி தூற்றியது.

இறுதியாக, கடந்த வருடம் ஜூலை மாதம் மாட்ரிட் நகரில் நடந்த நிபுணர் குழுக் கூட்டத்தில் அமெரிக்கா, தனக்குச் சாதகமான வகையில் பாதுகாப்பு விதிகளை உருவாக்கும் அறிக்கைக்கு அங்கீகாரம் அளித்தது. மேலும், மரபியல் கூறு மாற்றம் பெற்ற உயிரினங்கள் இயற்கையில் இருந்து வேறுபட்டதல்ல எனும் தீர்மானத்தை ஏழை நாடுகளை ஏற்றுக் கொள்ளச் செய்வதிலும் வெற்றி கண்டது.

**ஏழை நாடுகள் மீள வழியுண்டா?**

அமெரிக்காவின் இத்தகைய அடாவடித்தனங்களில் இருந்து ஏழை நாடுகள் தங்களது தாவர மற்றும் விலங்கின வகைகளைத் தற்காத்துக் கொள்ள, ''திறமையான தன்வகைப் பாதுகாப்பு முறையொன்றை உருவாக்கிக் கொள்ளலாம்'' அல்லது ''புதுவகைத் தாவரங்கள் பாதுகாப்புச் சங்கத்தில், 1978 அல்லது

''வேம்பு, கீழாநெல்லி தாவர இனங்களின் மருத்துவக் குணாம்சங்களை ஏற்கனவே அறிந்திருக்கிறோம்'' எனக் கூறி, நாம் வடிவுரிமை பெறவோ அல்லது வடிவுரிமை பெற்றவர்களிடமிருந்து உரிமைத்தொகை கோரவோ முடியாது.



ஜான் மூர் - வடிவுரிமையால் வர்த்தகப் பொருளானார்

1991-ம் ஆண்டுகளில் நடைபெற்ற அச்சங்கத்தின் மாநாட்டு விதிகளின் படி இணைந்து கொள்ளலாம்'' என ஆட்சியாளர்களால் சுட்டிக்காட்டப்படுகிறது.

''புதுவகைத் தாவரங்கள் பாதுகாப்புச் சங்கம்'' மேற்குலக நாடுகளின் நலன்களை முன்னிறுத்திச் செயல்பட்டு வருகிறது. இச்சங்கத்தின் 1978-ம் ஆண்டு விதிகளின்படி, ''உறுப்பு நாட்டு விவசாயிகள் விதைகளைச் சேமிக்கவும், அடுத்த விளைச்சலுக்கும் பயன்படுத்திக் கொள்ளவும், ஆராய்ச்சியாளர்கள் சூல்களைத் தங்களின் ஆராய்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்ளவும்'' சலுகைகள் தரப்பட்டுள்ளன. ஆனால் 91-ம் ஆண்டு மாநாட்டு விதிகளின்படி இச்சங்கத்தில் இணையும் நாடுகளுக்கு இச்சலுகைகள் கிடையாதெனத் தற்பொழுது அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஏகாதிபத்தியங்கள் இச்சங்கத்தில் உறுப்பினராக இல்லாத நாடுகளுக்குப் புதிய வீரிய இரக விதைகளையும் நவீன விவசாயத் தொழில்நுட்பங்களையும் தர மறுக்கின்றன. ''தங்களின் தொழில் நுட்பங்களைக் காக்க அந்நாடுகளில் பாதுகாப்பு விதிகள் இல்லை'' எனக் காரணம் கூறுகின்றன,அவை. இதன் மூலம் ஏழை நாடுகளின் மீது கொள்ளைப்புற வழியில் தனது வடிவுரிமைச் சட்ட விதிகளைத் திணிக்கத் துணிகின்றன.

இந்தியாவின் இயற்கை வளங்களைப் பாதுகாக்க, ''தன்வகைப் பாதுகாப்பு முறை'' யொன்றை உருவாக்கவும், ''புதுவகைத் தாவரங்கள் பாதுகாப்புச் சங்கத்தில்'' இணையவும் முயன்று வருகிறது மைய அரசு. இதற்காக எம். எஸ். சுவாமிநாதன் போன்ற அரசுக்குச் சார்பான விஞ்ஞானிகள், அறிஞர்கள், சட்ட வல்லுநர்களைக் கொண்ட அதிகார வர்க்கக் கமிட்டியொன்றை நிறுவியுள்ளது, ராவ் கும்பல். விவசாயிகளோடு தொடர்புடைய அவர்களின் உண்மையான நலன்களைப் பிரதிபலிக்கும் எந்தவொரு உறுப்பினரும் இக்கமிட்டியில் கிடையாது.

இவை ஒருபுறமிருக்க, ஏழை நாடுகள் அனைத்தும் எத்தகைய பாதுகாப்பு விதிகளை உருவாக்கி வைத்திருந்தாலும், அவை அனைத்தும் 1999-ம் ஆண்டு உலக வர்த்தகக் கழகத்தால் பரிசீலிக்கப்படும். அப்பொழுது உயிரியல் தொழில் நுட்ப ஏகபோக நிறுவனங்கள் கூறுகின்றபடிதான், ஏழை நாடுகள் தங்களின் வடிவுரிமைச் சட்டங்களை மாற்றித் தீர வேண்டியிருக்கும்.

நீதிமன்றத் தீர்ப்புகள், திரிக்கப்பட்ட விஞ்ஞானக் கூற்றுகள், சர்வதேச அரங்குகளில் இரட்டை வேடம் போடுவது, இரட்டை பொருள் தரும்படியான வார்த்தைகளைப் பயன்படுத்துவது, அரசியல் நிர்ப்பந்தங்கள் - இவற்றின் மூலம் அமெரிக்கா தனது வடிவுரிமைச் சட்டத்திற்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படாதவாறு பாதுகாத்து வருகிறது. ஏனெனில், ஏழை நாடுகளின் முக்கிய விவசாய விளை பொருட்களான காபி, மிளகு, பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், மூலாம்பழ வகைகள் போன்றவற்றில் உயிரியல் தொழில் நுட்ப அடிப்படையில் புதிய வீரிய இரகங்களை உருவாக்கி வடிவுரிமை பெற்று வருகின்றன ஏகபோக நிறுவனங்கள். எதிர்காலத்தில், விவசாய உற்பத்தியானது உயிரியல் தொழில் நுட்ப அடிப்படையில் அமைந்த விதைகள், பூச்சி மருந்துகள், நுண்ணுயிர்கள், உரங்களைப் பயன்படுத்துவதாக மாறும்பொழுது, ஏழை நாடுகளின் பாரம்பரியமிக்க விவசாயம் முழுவதையும் தங்களின் பேராசைக்குப் பலியாக்கி விடுவார்கள், இந்த நவீன ஷைலாக்குகள். ஏழைநாடுகள் மீது ஏகாதிபத்தியங்கள் திணிக்கும் புதுவகையான உயிரியல் காலனியாதிக்கமாகும், இது.

★ செல்வம்


**''புதிய ஜனநாயகம்'' பற்றிய அறிக்கை**
**(4-வது பாரம், 8-ம் பிரிவுப்படி)**

| | | |
|---|---|---|
| 1. வெளியிடும் இடம் | : | சென்னை |
| 2. வெளியிடும் காலம் | : | மாதமிருமுறை |
| 3. அச்சிடுபவர் | : | இரா. சன்முகராசு |
| தேசிய இனம் | : | தமிழர் |
| முகவரி | : | எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாம் தளம், 63, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், சென்னை - 600 024. |
| 4. வெளியிடுபவர் | : | இரா. சன்முகராசு |
| தேசிய இனம் | : | தமிழர் |
| முகவரி | : | 25, அருணாசலம் தெரு, ஜோதிராமலிங்க நகர், ஜாபர்கான் பேட்டை, சென்னை - 600 083. |
| 5. ஆசிரியர் | : | இரா. சன்முகராசு |
| தேசிய இனம் | : | தமிழர் |
| முகவரி | : | 25, அருணாசலம் தெரு, ஜோதிராமலிங்க நகர், ஜாபர்கான் பேட்டை, சென்னை - 600 083. |
| 6. உரிமையாளர் | : | இரா. சன்முகராசு |
| தேசிய இனம் | : | தமிழர் |
| முகவரி | : | 25, அருணாசலம் தெரு, ஜோதிராமலிங்க நகர், ஜாபர்கான் பேட்டை, சென்னை - 600 083. |

இரா. சன்முகராசுவாகிய நான் மேற்கூறிய தகவல்கள் அனைத்தும் உண்மையே என இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஒப்பம்) இரா. சன்முகராசு,
வெளியிடுபவர்

1.3.1996



*Published and Owned by A. SHANMUGARAJ, 25, Arunachalam St., Jothiramalinga Nagar, Madras - 600 083.*
*Printed by him at EZHIL PRINTS, 110, II Floor, 63 Arcot Rd., Madras - 600 024. Editor: A. SHANMUGA RAJ*

PUTHIYA JANANAYAGAM R.N. 42048/85 Regd. No TN/MS(S) 622
www.padippakam.com



# இதுதான் இன்றைய இந்தியா

இவர்கள் இராமநாதபுரம் கடலாடி பகுதியைச் சேர்ந்த சிறுமிகள். பள்ளி செல்லும் நேரம் போக ஓடி ஆடி விளையாடுவதற்கு இவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. தாயுடன் கண்மாய்க்கோ, குளக்கரைக்கோ வந்து குடிநீருக்காக இப்படி உழைக்கும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இங்கு ஒரு குடம் தண்ணீர் 3 ரூபாய் என்பதால் சாதாரண குடும்பங்களுக்கு இப்படி குழி தோண்டிப் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை. என்னதான் போராடினாலும் எல்லோர்க்கும் தண்ணீர் கிடைக்க வேண்டுமே?! குடிநீர் பஞ்சத்தால் கடலாடியில் 60 சதவிகித் குடும்பங்கள் திருச்சி, தஞ்சை, கோவைப் பகுதிகளுக்கு பிழைப்பு தேடி சென்று விட்டனர். இந்த ஆண்டு பருவமழை பொய்த்து பெரியாறு, வைகையாற்றில் நீரின்றி போனதால் தென் மாவட்டங்களில் பயிர்கள் வாடுவதும் மக்கள் குடிநீரின்றி தவிப்பதும் அதிகரித்துள்ளது. தமிழக அரசு சில மாவட்டங்களை கூடுதலாக வறட்சிப் பகுதிகளாக அறிவித்துள்ளது. தமிழகமே வறட்சி மாநிலம் என அறிவிக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை.

இது திருச்சியில் நடந்த அ.தி.மு.க. மாநாட்டில் ஜெயலலிதா தங்குவதற்காக கட்டப்பட்ட குளுகுளு வசதியுடைய வீடு. ஒரு 5 நட்சத்திர வசதிகள் அனைத்தும் இதற்குள் கொண்டு வர பல லட்சங்களை செலவழித்துள்ளனர். மாநாட்டுத் தேவைக்காக காவிரியாற்றிலிருந்து குறிப்பிட்ட அளவு டி.எம்.சி. நீர் கொண்டு வரவும் இன்னும் பலவற்றிற்காகவும் அரசுத் துறையும் பணமும் கேடாகப் பயன்படுத்தப் பட்டுள்ளன. பல கோடிகளைக் கொட்டி பிரம்மாண்ட பந்தல் - ஊர்வலம் - திருமணம் எனக் கூத்தடிக்கும் ஜெயா கும்பல் தமிழகத்தின் குடிநீர் பஞ்சத்தைத் தீர்க்க காட்டிய அக்கறை மிக அற்பமே! வறட்சி பகுதிகளுக்கு அரசு ஒதுக்கும் அற்ப நிவாரணமும் அதிகாரிகள், மந்திரிகள், 'பிழைக்க' வழி செய்யும் நோக்கத்திலானதாகவே இருக்கிறது. அணைகள் கட்டுவதாக, லாரியில் - ரயிலில் நீர் கொண்டு வந்து தருவதாக, குளங்கள் வெட்டுவதாக, ஆழ் குழாய் கிணறு அமைப்பதாக எத்தனை மாய்மாலங்கள்? எத்தனை வாக்குறுதிகள்? எவ்வளவு ஏமாற்றங்கள்?

போதும்! நாம் தாகத்திற்காக நாயாய் அலைவதும், அவர்கள் பன்னீரில் கொப்பளித்து குளுகுளு அறையில் திளைப்பதும் போதும்! வாருங்கள், அக்கும்பலுக்கு தக்க பாடம் புகட்டுவோம்!

